இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

# 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்

பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

## தூரநோக்கு

*உயிரியல் சுற்றாடலை வெள்ளப்பெருக்கு நீங்கிய நட்புநேயமானதாகவும் நீர் நிலைகளை மாசற்றதாகவும் பேணி முன்னோடியாகத் திகழ்தல்.*

## செயற்பணி

*மிகவும் திறமை வாய்ந்த காத்திரமான ஊழியர்படையினூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு மழை நீர் வடிகாலமைப்பிலும், சதுப்புநில முகாமைத்துவத்திலும் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியிலும் பொறியியல் சேவைகளை வழங்குதல்.*

## *உள்ளடக்கம்*

பக்க இலக்கம்


| | |
|---|---|
| பொது முகாமையாளரின் செய்தி | 1 |
| கூட்டுத்தாபனத் தகவல் | 3 |
| சிரேஷ்ட முகாமைத்துவக் குழு | 5 |
| இயக்கச்செயற்பாட்டு மீளாய்வு | 7 |
| பணிப்பாளர்களின் அறிக்கைகள் | 125 |
| முழுமையான வருமானக் கூற்று – 2014 | 148 |
| ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று | 149 |
| நிதி நிலைக் கூற்று | 151 |
| காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று | 153 |
| முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் | 155 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 164 |

## *பொது முகாமையாளரின் செய்தி*

*2014 ஆம் ஆண்டானது பல காரணங்களின் நிமித்தம் இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு மேலும் ஒரு குறிப்பிடத்தக்க ஆண்டாக விளங்கியது. இந்தக் கூட்டுத்தாபனத்திற்கு பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களுக்கு இடையில் வெற்றிகரமானதும் இலாபகரமானதுமான ஒரு நிறுவனமாக மாற முடிந்தது. எம்மால் வாய்ப்புகளைப் பயன்படுத்தக்கூடியதாக இருந்தமை, இ.கா.மீ.அ.கூ. முகாமைத்துவப் பதவியணியினரினதும் ஊழியர்களினதும் அர்ப்பணிப்பு, கடின உழைப்பு போன்ற முக்கிய காரணங்களினால், 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எம்மால் இந்த முன்னேற்றத்தை அடைய முடிந்தது.*

*2013 முன்னைய ஆண்டில் இருந்த 2503 மில்லியன் (1025 மில்லியன் ரூபா திறைசேரி மானியம் அடங்கலாக) ரூபாவுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டின் போது இந்த கூட்டுத்தாபனத்தின் மொத்தப் புறழ்வு 3276 மில்லியன் ரூபாவாக இருந்தது. 2013 ஆம் ஆண்டில் இருந்த 118 மில்லியன் ரூபா இலாபத்துடன் ஒப்பிடும்போது 2014 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னருள்ள தேறிய இலாபம் 439 மில்லியன் ரூபாவாகும். 2013 ஆம் ஆண்டில் இருந்த 104 மில்லியன் ரூபா இலாபத்துடன் ஒப்பிடும்போது 2014 ஆம் ஆண்டில் வரிக்குப் பின்னருள்ள தேறிய இலாபம் 354 மில்லியன் ரூபாவாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாபம் 2014 ஆம் ஆண்டில் 28% வீதத்தால் அதிகரித்துள்ளது.*

*நிர்மாணக் கருத்திட்டங்களிலிருந்து குறிப்பிடத்தக்களவில் கிடைக்கும் வருமானம் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது உயர்ந்த செயலாற்றுகை இலக்கை அடைந்துள்ளது. கடந்த 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 936 மில்லியன் ரூபா தொகையொன்று அதாவது 53% வீதமான ஒரு அதிகரிப்பு பதிவாகியிருக்கின்றது. கொழும்பு நகரத்திற்கான நகர மறுமலர்ச்சியின் நிமித்தம் வெல்லவத்தை மயுரா இடம் மற்றும் சலமுல்ல ஆகிய பகுதிகளின் பலமாடிக் கட்டிட நிர்மாணங்கள் இந்தக் கூட்டுத் தாபனம் வெற்றிகரமாக நிறைவு செய்த முக்கியமான சில நிர்மாணம் சார்ந்த கருத் திட்டங்களாகும்.*

*தெஹிவளை, கல்கிஸ்ஸை மற்றும் இரத்மலானை ஆகிய பிரதேசங்கள் அடங்கலாக பல பகுதிகளில் நிகழும் வெள்ளப்பெருக்குகளைத் தடுக்கும் பொருட்டு எமது கூட்டுத் தாபனம் 14,227 மில்லியன் ரூபா செலவில் வெரஸ் கங்கை ஆற்றுப் படுகை சார்ந்த அபிவிருத்திக் கருத்திட்டத்தை ஆரம்பித்தது. இந்தக் கருத்திட்டம் எந்தவொரு வெளி-நாட்டு நிறுவனத்தினதும் காத்திரமான ஈடுபாடுகளுமின்றி இந்தக் கூட்டுத் தாபனம் குறித்த பிரதேசங்களில் நிகழும் வெள்ளப்பெருக்குகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு மேற்கொண்டுள்ள மிகப் பெரிய கருத்திட்டங்களில் ஒரு கருத்திட்டமாகும். இந்தக் கருத்திட்டத்தின் ஒரு பாகமாக விளங்கும் பெல்லன்வில புனித பிரதேசத்தில் கூட்டுத்*

*தாபனம் ஏற்கெனவே பொது வசதிகள் சார்ந்த மேம்பாட்டுப் பணிகளை நிறைவு செய்துள்ளது.*

*கொழும்பு நகரத்தை அழகுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தில், எமது கூட்டுத்தாபனம் கால்வாய் மற்றும் வீதி அபிவிருத்திகள் போன்ற பல பிரிவுகளில் துல்லியமாக ஈடுபட்டது. முக்கியமான சகல இயக்கச்செயற்பாட்டுப் பிரிவுகளிலும், கூட்டுத்தாபனம் தனது முழுமொத்த உற்பத்தித்திறன், வினைத்திறன், இலாபம் ஆகிய அம்சங்களை மேம்படச் செய்துள்ளது. அதனால், இந்தக் கூட்டுத்தாபனம் குறித்த மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் தனது குறிக்கோள்களை அடைந்துள்ளது.*

*கூட்டுத்தாபனம் தனது வழமையான வேலைச்சட்டகத்தினுள் பொறியியல் சார்ந்த நிபுணத்துவத்தையும், வளங்களையும் பயன்படுத்தி நிலையான உட்கட்டமைப்பு அபிவிருத்தி, உயிரியல் நட்புநேயசூழல்கள் என்பவற்றுக்கான ஒரு திறமுறைத்திட்டம் சார்ந்த பங்காளி என்ற ரீதியில் இலங்கையின் பொருளாதாரத்திற்கு கணிசமானளவு பங்களித்துள்ளது.*

*இந்த மீளாய்வு ஆண்டினை வெற்றிகரமான ஆண்டாக ஆக்குவதற்கு பலவழிகளிலும் உதவி, ஒத்தாசைகளை வழங்கிய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கும், ஏனைய அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், இ.கா.மீ.அ.கூ. தலைவருக்கும், அதன் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும், சிரேஷ்ட முகாமை ஊழியர்களுக்கும், இ.கா.மீ.அ.கூ. ஏனைய ஊழியர்களுக்கும், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் ஏனைய நிறுவனங்களின் அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், இலங்கை இராணுவத்திற்கும், இலங்கைக் கடற் படையினருக்கும் சிவில் பாதுகாப்புப் படையினருக்கும், எமது விநியோகத் தரப்புகளுக்கும், ஒப்பந்தத் தரப்புகளுக்கும் மற்றும் ஏனைய அக்கறையுடைய தரப்புகளுக்கும் இறுதியாக எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். .*

***எம்.ஏ.எஸ்.எம்.கே. சேனாதீர***
***பொதுமுகாமையாளர்***
*2015.02.27*

## கூட்டுத்தாபனத் தகவல்கள்

### பணிப்பாளர்கள் சபை

*2014.12.31 இல் உள்ள பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம்*

| | |
|---|---|
| *திரு எல்.ஏ.பி. ஹர்ஷான் த சில்வா* | *தலைவர்*<br>*இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்* |
| *திரு ரொஹான் செனவிரட்ன* | *பணிப்பாளர்*<br>*மேலதிகச் செயலாளர்*<br>*பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு* |
| *திரு நிமல் பெரேரா* | *தலைவர்*<br>*நகர அபிவிருத்தி அதிகார சபை*<br>*'செத்சிறிபாய'*<br>*பத்தரமுல்ல* |
| *பொறியிய. (திருமதி) பத்ரா கமலதாச* | *முன்னாள் அலுவலர்*<br>*நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்*<br>*நீர்ப்பாசனத் திணைக்களம்* |
| *திருமதி கே.டீ.ஆர். ஒல்கா* | *திறைசேரியின் பிரதிநிதி*<br>*பணிப்பாளர்*<br>*அரசாங்க நிதித் திணைக்களம்*<br>*பொதுத் திறைசேரி* |
| *திரு தம்மிக்க ஆட்டிகல* | *பணிப்பாளர்*<br>*குழுப் பணிப்பாளர் - உபாலி க்ரூப் ஒப் கம்பனீஸ்* |
| *கெப்டன் எச்.எஸ். பாலசூரிய* | *பணிப்பாளர்*<br>*கடற்படை சிவில் பொறியியல் பிரதிப் பணிப்பாளர்*<br>*(விஷேட கருத்திட்டங்கள்)*<br>*இலங்கைக் கடற்படை* |
| *திரு சமன் கலப்பத்தி* | *பணிப்பாளர்*<br>*சட்டத்தரணி* |
| *திரு வி. குருகுலசூரிய* | *பணிப்பாளர் நாயகம்*<br>*தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களம்* |

***கூட்டுத்தாபனத் தகவல்கள் (தொடர்ச்சி)***

***சட்ட அந்தஸ்து***

*இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் இதற்கு முன்னர் கொழும்பு மாவட்ட (தாழ்நிலப் பிரதேசங்கள்) காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்தி சபை என அழைக்கப்பட்டது. பின்னர் 1968 இன் 15 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டது. இந்தக் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் 1976 ஆம் இலக்க திருத்தல் சட்டத்தினால் வியாபிக்கப்பட்டது. 1982 இன் 52 ஆம் இலக்க திருத்தல் சட்டம் இந்தச் சபையின் பெயரை இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் என மாற்றியது. இதன் அதிகாரப் பிரிவு இந்தச் சட்டத்தினால் முழு நாடும் உள்ளடங்கும் வகையில் வியாபிக்கப்பட்டது. சட்டத்திற்கு முரணான விதத்தில் காணிகளை மண்ணிரப்பியெடுக்கும் மற்றும் நீர் நிலைகளை மாசுபடுத்தும் செயற்பாடுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை எடுக்கக்கூடியவாறு இந்தக் கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரத்தத்துவங்களை உரித்தளித்து இந்தச் சட்டம் மேலும் 2006 இன் 35 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டது.*

***தலைமை அலுவலகம்***

*இல. 3, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை*
*வெலிக்கட*
*ராஜகிரிய*

***கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்***

*கணக்காய்வாளர் அதிபதி*
*கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்*
*இல. 306/72, பொல்துவ வீதி*
*பத்தரமுல்ல.*

***சட்ட ஆலோசகர்***

*சட்டமா அதிபர்*
*சட்டமா அதிபரின் திணைக்களம்*
*புதுக்கடை,*
*கொழும்பு 12.*

***வங்கியாளர்கள்***

*இலங்கை வங்கி*
*மக்கள் வங்கி*

***கூட்டுத்தாபனத் தகவல்கள் (தொடர்ச்சி)***

***சிரேஷ்ட முகாமைத்துவக் குழு***

| | | |
|---|---|---|
| *01.* | *திருமதி எம்.ஏ.எஸ்.எம்.கே. சேனாதீர* | *- பொது முகாமையாளர்* |
| *02.* | *திரு கே. ராஜபக்ஷ* | *- மேலதிகப் பொது முகாமையாளர் (தொழில்நுட்பம்)* |
| *03.* | *திரு டப்ளியூ.எஸ். ஆரியசிங்க* | *- மேலதிகப் பொது முகாமையாளர் (அமுலாக்கல் )* |
| *04.* | *திரு ஜி.எஸ்.எம். அபேசேகர* | *- பிரதிப் பொது முகாமையாளர் (பொறித்தொகுதி மற்றும் உபரகரணம்)* |
| *05.* | *திரு ரீ.பீ. சந்திரசேகர* | *- பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் அபிவிருத்தி)* |
| *06.* | *திருமதி ஆர்.ஐ. சில்வா* | *- பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)* |
| *07.* | *திரு ஆர்.சி. பெர்னாந்து* | *- பிரதிப் பொது முகாமையாளர்* |
| *08.* | *திரு சி.பீ. அமரசிங்க* | *- பிரதிப் பொது முகாமையாளர் (ஆராய்ச்சி, வடிவமைப்பு)* |
| *09.* | *திருமதி பி. ஹேமலதா* | *- பிரதிப் பொது முகாமையாளர் (கா., சந்தைப்படுத்தல்)* |
| *10.* | *திரு எஸ்.பி. முத்துமால* | *- பிரதிப் பொது முகாமையாளர் (வடிகாலமைப்பு கா.மீட்டல்)* |
| *11.* | *திரு வை.பி.சி. த சில்வா* | *- பிரதிப் பொது முகாமையாளர் (நிர்மாணம்)* |
| *12.* | *திரு ஜே.ஏ.பி.கே. ஜயசிங்க* | *- பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வாளர்)* |
| *13.* | *திருமதி எச்.ஏ. துஷாரி* | *- பிரதிப் பொது முகாமையாளர் (விஷேட கருத்திட்டங்கள்)* |
| *14.* | *திரு என்.எஸ். விஜேரத்ன* | *- பிரதிப் பொது முகாமையாளர் (ஈர புநில முகாமைத்துவம்)* |
| *15.* | *திரு எஸ்டீ. தர்மரத்ன* | *- பிரதிப் பொது முகாமையாளர் (விநியோகங்கள்)* |
| *16.* | *திருமதி ஜி.ரீ.டீ.ஜே. அமரசிங்க* | *- தலைமை சட்ட உத்தியோகத்தர்* |
| *17.* | *திருமதி எல்.சி.ஜி. சொய்ஸா* | *- உதவிப் பொது முகாமையாளர் (ஈர புநில முகாமைத்துவம்)* |

| | | |
|---|---|---|
| *18.* | *திருமதி பி.எம்.பி. விஜேரத்ன* | *- உதவிப் பொது முகாமையாளர் (ஆராய்ச்சி, வடிவமைப்பு)* |
| *19.* | *திரு கே.ஐ. கஹவிட்ட* | *- உதவிப் பொது முகாமையாளர் (விஷேட கருத்திட்டங்கள்)* |
| *20.* | *திருமதி எஸ்.என். கமகே* | *- உதவிப் பொது முகாமையாளர் (வடிகாலமைப்பு மற்றும் காணிகள் மீட்டல்)* |
| *21.* | *திரு ஜி. ஜயவர்த்தன* | *- உதவிப் பொது முகாமையாளர் (எந்திரவியல்)* |
| *22.* | *திரு ஆர்.எம்.என்.டீ. ரத்நாயக்க* | *- உதவிப் பொது முகாமையாளர்* |
| *23.* | *திரு டப்ளியூ.எச். கீர்த்திரத்ன* | *- உதவிப் பொது முகாமையாளர்* |
| *24.* | *திரு ஓ.வி.டப்ளியூ.ஆர். குணதிலக்க* | *- உதவிப் பொது முகாமையாளர்* |
| *25.* | *திருமதி ஏ.பீ.என். சஹபந்து* | *- உதவிப் பொது முகாமையாளர் (நிதி)* |
| *26.* | *திரு கே.டீ. அந்திரா* | *- உதவிப் பொது முகாமையாளர் (காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல்)* |

## *இயக்கச்செயற்பாட்டு மீளாய்வு*

### *வடிகாலமைப்பு மற்றும் காணிகள் மீட்டல் பிரிவு*

### *திறைசேரி மானிய உதவிக் கருத்திட்டங்கள்*

### *விஷேட வெள்ளப்பெருக்குத் தணிப்புக் கருத்திட்டங்கள்*

*கொழும்பு நகரத்திலும் அதனை சூழவுள்ள பிரதேசங்களிலும், இவை மக்கள் செறிந்து வாழுகின்ற ஒரு பகுதி என்பதால் அந்த மக்களின் சிறந்த தரமான வாழக்கையையும் பொருளாதாரத்தையும் உறுதிசெய்யும் பொருட்டு மழை நீர் வடிகாலமைப்பு மேம்பாடு தொடர்பில் இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அரசாங்கம் (இ.அ.) பெரும் முக்கியத்துவம் அளித்துள்ளது.*

*கொழும்பு அடங்கலாக இலங்கையின் வர்த்தக் கேந்திர நிலையமாக விளங்குகின்ற கொழும்புப் பெரும்பாகப் பகுதியும் அதனை சூழவுள்ள நான்கு உள்ளூராட்சி அதிகார சபைப் பிரிவுகளும் அவற்றில் அதிகமான தாழ்நிலப் பிரதேசங்கள் அடங்குவதால் வெள்ளப்பெருக்குகளினால் பாதிக்கப்பட்டுள்ளன.*

*வெள்ளப்பெருக்கு நிகழ்வதற்கான முக்கிய காரணங்கள் இடத்திற்கு இடம் வேறுபடும். எனினும் இவை எப்பொழுதுமே பின்வருவனவற்றில் ஏதாவதொன்றை உள்ளடக்கி இருக்கும்.*

- *மழை நீர் வடிகாலமைப்பு முறைமைகளின் வசதிகளின்மை*
- *குறைந்தளவு மழை நீர் வடிகாலமைப்பு வசதிகள், அல்லது போதிய பராமரிப்பு இல்லாத காரணத்தினால் வடிகாலமைப்பு முறைமைகள் சரியான முறையில் இயங்காதிருத்தல்*
- *ஆழம் குறைந்த ஆற்றுப்படுக்கை, குறுகிய விசாலம் (இயற்கை அருவிகளாயின்) தாழ்நில உயர்வு*

*பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் அறிவுரைகளின் பிரகாரம், இலங்கை காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் கொழும்பு நகரத்திலும் அதன் சுற்றுப்புறப் பிரதேசங்களிலும் நிகழ்கின்ற வெள்ளப்பெருக்குகளைத் தணிப்பதற்கான பல நடுத்தரகால பரிகார நடவடிக்கைகளை முன்னெடுத்தது. வோட்டர்ஸ் எஜ், ரம்பலா வத்தை, தலவத்துகொட ஆகிய பிரதேசங்களை சூழ்ந்த பகுதிகளினதும் அதே போன்று*

*கொழும்புப் பெரும்பாகப் பகுதியினதும் நீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்கள் அகழ்ந்து விசாலமாக்கப்பட்டு, வடிகாலமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன. இங்கு ஏலவே காணப்படுகின்ற கால்வாய் முறைமைகளை சுத்தம் செய்தல், அகழந்து துப்புரவாக்கல், வெள்ளப்பெருக்குத் தடுப்புப் பிரதேசங்களை மேம்படுத்துதல், நீர் தேங்கி நிற்கக்கூடிய ஏரிகளுக்கு வசதிகளைச் செய்தல் மற்றும் தாழ்நிலங்களை மண்ணிரப்பியெடுக்கும் ஆபத்தான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல் முதலிய அம்சங்கள் இந்தக் கருத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்தன.*

*மேற்குறித்த பணிக்காக 2014 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் திறைசேரி நிதியேற்பாடு 1500 மில்லியன் ரூபாவாகும். குறித்த ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மொத்தப் பெறுமானம் 1512.74 மில்லியன் ரூபாவாகும். விஷேட வெள்ளப் பெருக்குத் தணிப்புப் பணி நடவடிக்கைகளின் கீழ் எமது கூட்டுத்தாபனம் பின்வரும் வடிகாலமைப்பு மேம்பாட்டுக் கருத்திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளது.*

*1.0 ப்ளூமென்டல், மட்டக்குளி ஆகிய இடங்களிலும் அவற்றை சூழவுள்ள பகுதிகளிலும் மற்றும் காக்கைத் தீவுப் பகுதியிலும், அதன் சுற்றுப்புறப் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட வடிகலமைப்பு மேம்பாடுகளும் நிலக்காட்சிப்படுத்தல் பணிகளும்*

*2.0 முதுன்எல, பேலியகொட, ஒலியமுல்ல, களணி ஆகிய இடங்களிலும் அவற்றை சூழவுள்ள பகுதிகளிலும், அதே போன்று கிரிபத்கொடவிலும் அதை சூழவுள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட வடிகாலமைப்புப் பணிகளும், வெள்ளப்பெருக்கு கட்டுப்பாட்டு, நகர நிலக்காட்சிப்படுத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகளும்*

*3.0 கித்தம்பஹுவ கால்வாய் ஓரப் பகுதி, கொலண்ணாவ, மீதொட்டமுல்ல, முல்லேரியா ஆகிய பகுதிகளிலும், அங்கொட பகுதியிலும் மற்றும் அதை சூழவுள்ள பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட வெள்ளப்பெருக்குத் தணிப்புப் பணி நடவடிக்கைகளும், மேம்பாட்டு மற்றும் நிலக்காட்சிப் படுத்தல் பணிகளும்*

4.0 *பொல்கொட கால்வாய்ப் பகுதியிலும் அதை சூழவுள்ள சுற்றுப்புறப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட வெள்ளப்பெருக்குத் தணிப்பு மற்றும் நிலக்காட்சிப்படுத்தல் பணிகள்*

5.0 *பாராளுமன்றத்தின் மேல் நீரேந்து பிரதேசங்களிலும் அதை சூழவுள்ள பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட வெள்ளப்பெருக்கு கட்டுப்பாட்டு, சுற்றாடல் மேம்பாட்டு மற்றும் நிலக்காட்சிப்படுத்தல் பணிகள்*

6.0 *கிருளப்பண - ஹீன் எல பிரிவாக்கல் அடங்கலாக ஹீன் எல சதுப்புநிலப் பகுதி ஓரமாகவும், பாகொட பகுதியிலும் மற்றும் அதை சூழவுள்ள பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட வடிகாலமைப்பு மேம்பாடு சார்ந்த பணிகளும் மற்றும் நகர அபிவிருத்தி பணிகளும்*

7.0 *பேரவெவ ஏரியின் முழுப் பகுதியையும் சூழவுள்ள அதன் கால்வாய் உள்வருகை மற்றும் வெளிச்செல்கை வழிகளுக்கான அகழ்ந்து துப்புரவு செய்தல் மற்றும் புனரமைப்பு சார்ந்த பணிகள்*

8.0 *மாளிகாவத்தை, அப்ல்வத்தை ஆகிய பகுதிகளிலும் அந்தப் பகுதிகளை சூழவுள்ள பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட வடிகாலமைப்பு சார்ந்த மேம்பாட்டுப் பணிகள்*

9.0 *லூனாவ கால்வாய் தொகுதியிலும், லூனாவ ஏரியிலும் அதை சூழவுள்ள பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட அகழந்து துப்புரவாக்கல் மற்றும் புனரமைப்பு சார்ந்த பணிகள்*

10.0 *ஏரிகளையும் குட்டைகளையும் உருவாக்குதல், சுற்றுப்புறக் கால்வாய் பகுதிகளை அகழ்ந்து துப்புரவாக்குதல் ஆகிய செயற்பாடுகளின் மூலம், நீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்களின் கெள்ளளவுக்கு வசதி செய்யும் பொருட்டு நீர் தேங்கி நிற்கக்கூடிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு மற்றும் மேம்பாடுகள் சார்ந்த பணிகள்*

11.0 *கொழும்பு மாவட்டத்திற்கு வெளியால் மேற்கொள்ளப்பட்ட வெள்ளப் பெருக்குத் தணிப்பு மற்றும் மழை நீர் வடிகாலமைப்புக் கருத்திட்டங்கள்*

*மேற்குறித்த கருத்திட்டத்தின் செயற்பாடுகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.*

## 01.0 ப்ளூமெண்டல், மட்டக்குளி ஆகிய இடங்களிலும் அவற்றை சூழவுள்ள பகுதிகளிலும் மற்றும் காக்கைத் தீவுப் பகுதியிலும், அதன் சுற்றுப்புறப் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட வடிகலமைப்பு மேம்பாடுகளும் நிலக்காட்சிப்படுத்தல் பணிகளும்

*இந்தப் பிரதேசங்களில் வடிகாலமைப்பு மேம்பாடுகள் மற்றும் நிலக்காட்சிப் படுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் வெள்ளப்பெருக்குப் பாதிப்புகள் குறைக்கப்பட்டுள்ளன. மக்களின் வாழ்க்கைத் தரங்களும் உயர்வு அடைந்து அவர்களின் வாழ்வில் மேம்பாடும் ஏற்பட்டுள்ளது. இது மாத்திரம் அன்றி, காக்கைத் தீவுப் பகுதி சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் ஒரு பிரதேசமாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.*

*இந்தக் கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு125.00 மில்லியன் ரூபாவாகும். 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் மொத்தப் பெறுமானம் 125.07 மில்லியன் ரூபாவாகும்.*

*மேற்குறித்த கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகளை மேற்கொண்டுள்ளோம்.*

- *காக்கைத் தீவுக் கால்வாய் அபிவிருத்தி*
- *கிம்புலா எலவை அகழ்ந்து துப்புரவாக்குதல்*
- *பிரதான வடிகாலமைப்பு இணைப்புக் கால்வாய்களின் அபிவிருத்தி*
- *கொழும்பு வட பகுதியிலும் அதை சூழவுள்ள பிரதேசங்களிலும் வெள்ளப் பெருக்குக் கட்டுப்பாடு, சுற்றாடல் மேம்பாடு, நிலக்காட்சிப்படுத்தல் ஆகியன சார்ந்த பணிகள்*




**கருத்திட்டத்தின் அமைவிட வரைபடம்**



காக்கைத் தீவு ஏரி (முன்னைய நிலை)



காக்கைத் தீவு ஏரி (பின்னைய நிலை)

### *02.0 முதுன்எல, பேலியகொட, ஒலியமுல்ல, களணி ஆகிய இடங்களிலும் அவற்றை சூழவுள்ள பகுதிகளிலும், அதே போன்று கிரிபத்கொடவிலும் அதை சூழவுள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட வடிகாலமைப்புப் பணிகளும், வெள்ளப் பெருக்கு கட்டுப்பாட்டு, நகர நிலக்காட்சிப்படுத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகளும்*

*முதுன் எல, களணி. மற்றும் பேலியகொட ஆகிய பிரதேசம் கடந்த பல வருட காலமாக கடும் மழை காலங்களின் போது நீரில் மூழ்கியுள்ளது. கெழும்பு நகரிலும் அதை சூழவுள்ள பகுதிகளிலும் பல வருடங்களாக நிகழ்ந்து வருகின்ற மேலெழுந்த வாரியான அபிவிருத்திப் பணிகள் இதற்கு முக்கிய காரணியாக விளங்குகின்றன. இப்பிரதேசம் கொழும்பு நகரத்தையும், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தையும், கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியையும் அண்மித்து அமைந்திருப்பதால் அதிகளவான வர்த்தக மற்றும் கைத்தொழில் பெறுமானமுடைய பிரதேசமாகக் காணப்படுகின்றது. ஆதலால், இந்தப் பிரதேசங்களில் வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணிகளை செயற்படுத்தி சரியான வடிகாலமைப்பு முறைமையைக் கொண்டு, காணிகளில் சிலவற்றை அபிவிருத்தி செய்யலாம் என்பதுடன் வெள்ளப்பெருக்குகளையும் தணிக்கலாம்.*

*2014 ஆம் ஆண்டில் இந்தப் பிரதேசத்திற்கென மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 150.00 மில்லியன் ரூபாவாகும். பணியின் பெறுமானம் 150.12 மில்லியன் ரூபாவாகும்.*

*மேற்குறித்த கருத்திட்டத்தின் கீழ் நாம் கீழ்காணும் பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளோம்.*

- *கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதிப் பகுதி அதை சூழவுள்ள பிரதேசங்கள் ஓரமாகவுள்ள கால்வாய்கள் துப்புரவுசெய்யப்பட்டமை*
- *பேலியகொடவிலும் அதை சூழவுள்ள பகுதிகளிலும் காணப்படும் கால்வாய்கள் துப்புரவுசெய்யப்பட்டமை*
- *ஹேனமுல்ல கால்வாய் அபிவிருத்தி செய்யப்பட்டமை*
- *முதுன் எலவிலுள்ள கால்வாய் அகழ்ந்து துப்புரவு செய்யப்பட்டமை*
- *ஹெய்யந்துடுவ தென்பகுதி ஏரி மற்றும் கால்வாய் ஆகியன அகழந்து துப்புரவு செய்யப்பட்டமை*
- *வெதமுல்ல ஏரிகள் மற்றும் கால்வாய்கள் ஆகியன பராமரிக்கப்பட்டமை*
- *மானெல்வத்த விகாரை ஏரி அகழ்ந்து துப்புரவு செய்யப்பட்டமை*
- *முத்துராஜவெல சதுப்புநிலப் பகுதியில் சுற்றுப்புறக் கால்வாய்கள் அமைக்கப் பட்டமை*
- *மக்காவிட்ட - ஜாஎல உத்தேச உடற்பயிற்சிப் பாதை அமைக்கப்பட்டமை*
- *பேலியகொடப் பிரதேசத்தை சூழவுள்ள பகுதிகளில் வடிகாலமைப்பு சார்ந்த மேம்பாடுகள் மற்றும் நகர நிலக்காட்சிப்படுத்தல் சார் பணிகள் மேற்கொள்ளப் பட்டமை*



***களணி மானெல்வத்த பன்சலை (முன்னை நிலை)***



***களணி மானெல்வத்த பன்சலை (பின்னைய நிலை)***



*வெதமுல்ல ஏரி (முன்னைய நிலை)*



*வெதமுல்ல ஏரி (பின்னைய நிலை)*

### *03.0 கித்தம்பஹுுவ கால்வாய் ஓரப் பகுதி, கொலண்ணாவ, மீதொட்டமுல்ல, முல்லேரியா ஆகிய பகுதிகளிலும், அங்கொட பகுதியிலும் மற்றும் அதை சூழவுள்ள பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட வெள்ளப்பெருக்குத் தணிப்புப் பணி நடவடிக்கைகளும், மேம்பாட்டு மற்றும் நிலக்காட்சிப் படுத்தல் பணிகளும்*

*இது 2014 ஆம் ஆண்டிற்கான ஒரு தொடர் கருத்திட்டமாகும். இந்தக் கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகை 200.0 மில்லியன் ரூபாவாகும் 2014 ஆம் ஆண்டின் நிமித்தம் மேற்கொள்ளப்பட்டிருந்த பணியின் மொத்தப் பெறுமானம் 200.23 மில்லியன் ரூபாவாகும். கித்தம்பாஹுுவ, கொல்னனாவ, மீதொட்டமுல்ல, முல்லேரியாவ மற்றும் அங்கொட ஆகிய பிரதேசங்களிலும் இந்தப் பிரதேசங்களை சூழுவுள்ள பகுதிகளிலும் காணப்படுகின்ற கால்வாய் முறைமைகளிலிருந்த வண்டல் மண்களும் அதன் மேற்பரப்பில் வளர்ந்திருந்த அடர்ந்த காடுகளும் அகற்றப்பட்டுள்ளன. இதன் காரணமாக, இந்தப் பகுதிகள் மழை காலங்களின் போது நீரில் மூழ்கடிக்கப்படுகின்றன. ஆகையால், இந்தப் பிரதேசங்களில் நிகழும் வெள்ளப்பெருக்குகள் வடிகாலமைப்பு மேம்பாடுகள், கால்வாய்களின் மேற்பரப்புகளை அகழந்து துப்புரவு செய்தல், நிலக்காட்சிப் படுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் தணிக்கப்பட்டுள்ளன. இது இந்தப் பிரதேசங்களில் வாழுகின்ற மக்களின் வாழக்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு பயனாக விளங்குகின்றது.*

*எந்தவொரு நிறுவனத்தின் செயல்நோக்கின் கீழ் வராததும் மற்றும் எந்த ஒரு நிறுவனத்தினால் மேம்படுத்தப்படாததுமான ஏற்கெனவேயிருக்கின்ற பிரதான மற்றும் இரண்டாம்நிலைக் கால்வாய்கள் என்பன கால்வாய் கொள்திறனும் மற்றும் கால்வாய் முறைமைக்கான இணைப்புகளும் இல்லாத காரணத்தினால் பல சிறு வெள்ளப்பெருக்குப் பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைந்துள்ளன.*

*இந்தப் பிரச்சினையிலிருந்து நீங்கும் பொருட்டு இந்த இரண்டாம்நிலைக் கால்வாய்களையும் மற்றும் இணைப்புக் கால்வாய்களையும் மேம்படுத்துவது அத்தியாவசியமானதாகும்.*

*இந்தப் பிரதேசம் அதிகளவு வர்த்தகப் பெறுமானமுடைய பிரதேசமாகும். இதில் கொழும்பை அண்மித்த பகுதியிலுள்ள வதிவிடப் பிரதேசமும் உள்ளடங்கும். சுற்றுப் பகுதிகளிலிருந்து அதிகமான மக்கள் இங்கு வசிப்பதற்கு வருவதால் நகரப் பிரதேசங்களில் காணிகளுக்கு அதிக கிராக்கி நிலவுகின்றது. ஆகையால், வடிகாலமைப்பு மேம்பாடு மற்றும் நகர நிலக் காட்சிப்படுத்தல் ஆகியன சார்ந்த பணிகள் மேற்கொள்ளப்படுமானால் அந்தப் பிரதேசங்களிலும் மற்றும் அதை சூழவுள்ள பகுதிகளிலும் வாழுகின்ற மக்களுக்கு அது பயனுள்ளதாக அமையும்.*

*மேற்குறித்த கருத்திட்டத்தின் கீழ் நாம் கீழ்காணும் பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளோம்.*

- *கொலன்னாவயிலும் அதை சூழவுள்ள பகுதியிலும் காணப்படுகின்ற கால்வாய் தொகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டமை*
- *சந்திரிக்கா குமாரதுங்க மாவத்தை ஓரமாக உத்தேச நடபாதை அமைக்கப் பட்டமை*
- *அங்கொட ஏரிப் பிரதேசத்தை சூழுவுள்ள பகுதி அகழ்ந்து துப்புரவுசெய்தல் மற்றும் நிலக்காட்சிப்படுத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டமை*
- *சலமுல்ல வீடமைப்புக் கருத்திட்ட உத்தேச கேபியன் சுவர், பெட்டி வடிவான மதகு என்பன நிர்மாணிக்கப்பட்டமை*
- *கொழும்பு வட பிரதேசத்தில் கால்வாய் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டமை*
- *கித்துல்பாஹுவப் பகுதியில் நிலக்காட்சிப்படுத்தல் பணிகள் மேற்கொள்ளப் பட்டமை*

**கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவிவு**





*சந்திரிக்கா குமாரதுங்க மாவத்தை ஓரமாகவுள்ள உத்தேச நடபாதை*











*அங்கொடப் பிரதேச அபிவிருத்திப் பணிகள்*

## 04.0 பொல்கொட கால்வாய்ப் பகுதியிலும் மற்றும் அதை சூழவுள்ள சுற்றுப்புறப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட வெள்ளப்பெருக்குத் தணிப்பு மற்றும் நிலக்காட்சிப்படுத்தல் பணிகள்

*பொல்கொடக் கால்வாய் கொழும்புக் கால்வாய் முறைமையிலுள்ள பிரதான கால்வாய்களில் ஒன்றாகும். வெள்ளப்பெருக்குப் பாதிப்புகளைக் குறைத்தல், சட்டவிரோதமான செயற்பாடுகளைத் தடுத்தல், கால்வாயின் நீரோட்டக் கொள்திறன்களை அதிகரித்தல், நீர் தேங்கி நிற்கக்கூடிய பிரதேசங்களைப் பாதுகாத்தல் என்பன இந்தக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். சுற்றுப்புறங்களின் மேம்பாடுகள் இந்தக் கால்வாயை சுத்தமாக வைத்திருக்க உதவியாக அமையும்.*

*குறித்த ஆண்டிற்காக இந்தக் கருத்திட்டத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 100.00 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் மொத்தப் பெறுமானம் 100.23 மில்லியன் ரூபாவாகும்.*

*மேற்குறித்த கருத்திட்டத்தின் கீழ் நாம் கீழ்காணும் பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளோம்.*

- *அத்திடியப் பிரதேசத்திலும் அதை சூழவுள்ள பகுதிகளிலும் காணப்படுகின்ற நீர் நிலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டமை*
- *பொது இடவசதிகள் மற்றும் நிலக்காட்சிப் பகுதி என்பன அபிவிருத்தி செய்யப் பட்டமை*
- *ரத்மலான விமாநிலையத்தின் உட்புறக் கால்வாய் அகழ்ந்து துப்புரவு செய்யப் பட்டமை*
- *கல்கிஸ்ஸ பௌத்த மகளிர் கல்லூரி உத்தேச கரைப் பாதுகாப்பு கேபியன் சுவர் நிர்மாணிக்கப்பட்டமை*
- *பொல்கொடக் கால்வாய் ஓரமாக கால்வாய் கரைப் பாதுகாப்பு கேபியன் சுவர் நிர்மாணிக்கப்பட்டமை*




*அத்திடியப் பகுதி*






*அத்திடிய ஏரி III*



*அத்திடிய ஏரி II*

## *05.0 பாராளுமன்றத்தின் மேல் நீரேந்து பிரதேசங்களிலும் அதை சூழவுள்ள பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட வெள்ளப்பெருக்கு கட்டுப்பாட்டு, சுற்றாடல் மேம்பாட்டு மற்றும் நிலக்காட்சிப்படுத்தல் பணிகள்*

*பாராளுமன்ற வளாகத்திலும் மற்றும் அதை சூழவுள்ள பகுதிகளிலும் நிகழும் வெள்ளப்பெருக்குகளைத் தணித்தல், பசுமை நகர எண்ணக்கருவின் நிமித்தம் சுற்றாடலை மேம்படுத்துவதன் மூலம் மேல் நீரேந்து பரப்பில் காணப்படும் நீர் நிலைகளைப் பாதுகாத்தல் என்பன இந்தக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி எதிர்-பாராத விதத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பாராளுமன்ற வளாகமும் கூட நீரில் மூழ்கிய சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற மேல் நீரேந்து பரப்பில் நீரைத் தேக்கி வைக்கக்கூடிய அளவுக்கு போதிய கொள்ளளவு காணப்படவில்லை என்பதைப் புலப்படுத்தியது. சுற்றுப்புறப் பகுதிகள் நீரில் மூழ்கும் அபாய நிலையைத் தடுப்பதற்காக இந்தக் கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.*

*குறித்த ஆண்டிற்காக இந்தக் கருத்திட்டத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 150.00 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் மொத்தப் பெறுமானம் 156.00 மில்லியன் ரூபாவாகும்.*

*மேற்குறித்த கருத்திட்டத்தின் கீழ் நாம் கீழ்காணும் பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளோம்.*

- *கிம்புலாவெலவிலும் அதை சூழவுள்ள பகுதியிலும் வடிகாலமைப்புத் தொகுதி அபிவிருத்தி செய்யப்பட்டமையும் மற்றும் நிலக்காட்சிப்படுத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டமையும்*
- *'அபி வெனுவன் அபி' என்ற உணவு விடுதியும் அந்த உணவு விடுதிக்கான கிம்புலாவெல வாகனத் தரிப்பிடமும் நிர்மாணிக்கப்பட்டமை*
- *பெலவத்தையில் விளையாட்டு மைதானப் பகுதி உருவாக்கப்பட்டமை*
- *பத்தரமுல்ல தியத்தா உயன நடபாதை நிர்மாணம் மற்றும் நிலக்காட்சிப்படுத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டமை*
- *பத்தரமுல்ல பொல்துவ வீதி ஓரமாக வாகத் தரிப்பிடம் நிர்மாணிக்கப்பட்டமை*
- *ராஜகிரிய சரண மாவத்தைக் கால்வாய் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டமை*
- *பெலவத்த - அக்குரேகொட நீர்க் குட்டை அகழ்ந்து துப்புரவு செய்யப்பட்டமை*
- *பாராளுமன்ற மேல் நீரேந்து பரப்பினதும் அதை சூழவுள்ள பகுதிகளினதும் வடிகாலமைப்பு முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டமையும் நிலக்காட்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டமையும்*
- *நீர் தேங்கி நிற்கக்கூடிய ஏரியும் வோட்டர் எஜ் பகுதியிலுள்ள அதன் சுற்றுப் புறங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டமை*
- *கிம்புலாவெல வாகனத் தரிப்பிடமும் மற்றும் வடிகாலமைப்பு முறைமையும் நிர்மாணிக்கப்பட்டமை*
- *தியவன்னாவ ஏரி நிலப்பகுதி உட்புறத்தில் நடபாதை நிர்மாணிக்கப் பட்டமை*
- *ருக்மல்கம பன்சலை நிலக்காட்சிப்படுத்தல் பணியும் மற்றும் ஏரி அகழ்ந்து துப்புரவாக்கல் பணியும் மேற்கொள்ளப்பட்டமை*





*வோட்டர்ஸ் எஜ் பகுதி அபிவிருத்திப் பணிகள்*









*கிம்புலாவெலப் பகுதி வடிகாலமைப்பு மேம்பாடு மற்றும் நிலக்காட்சிப்படுத்தல் பணிகள்*



*ருக்மல்கம தம்விஜயலோக்க விகாரை உத்தேச ஏரி*



## *06.0 கிருளப்பண - ஹீன் எல பிரிவாக்கல் அடங்கலாக ஹீன் எல சதுப்புநிலப் பகுதி ஓரமாகவும், பாகொட பகுதியிலும் மற்றும் அதை சூழவுள்ள பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட வடிகாலமைப்பு மேம்பாடு சார்ந்த பணிகளும் மற்றும் நகர அபிவிருத்தி பணிகளும்*

*வெள்ளப்பெருக்கு ஆபத்துக்களிலிருந்து கொழும்புப் பெரும்பாகப் பகுதியை (கொ.பெ.ப.) பாதுகாப்பதற்கான நோக்கில் வெள்ளப்பெருக்கு நீரைத் தேக்கி வைக்கக் கூடிய பகுதிகளாக ஒதுக்கும் நிமித்தம் இ.கா.மீ.அ.கூ. மூலம் இந்த சதுப்பு நிலங்கள் சுவீகரிக்கப்பட்டன. எனினும், காலத்தின் மாற்றத்தினால் அத்துமீறல்களும் சட்டவிரோதமான முறையில் காணிகளை மண்ணிரப்பி எடுக்கும் செயற்பாடுகளும் நிகழ்ந்து, உண்மையான நிலங்களின் அளவுகள் குறைந்துள்ளன. அத்துமீறிச் செய்யப்படுகின்ற செயற்பாடுகளிலிருந்து இந்த சதுப்பு நிலங்களைப் பாதுகாத்தல் இ.கா.மீ.அ.கூ. தாபனத்திற்கு பாரிய ஒரு சுமையாக மாறி வருகின்றது. ஆதலால் இந்த கருத்திட்டத்தை செயற்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. வெள்ளப்பெருக்குகள் கட்டுப்பாட்டின் நிமித்தம் சதுப்புநிலங்களைப் பாதுகாக்கும் பிரதான குறிக்கோள் இதனால் நிலை நாட்டப்பட்டுள்ளது. இது நகரத்தில் வசிக்கின்ற மக்களுக்கான ஒரு பொழுது போக்குப் பிரதேசமாகவும் விளங்குகின்றது.*

*இந்தக் கருத்திட்டத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 50.00 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 50.10 மில்லியன் ரூபாவாகும்.*

*மேற்குறித்த கருத்திட்டத்தின் கீழ் நாம் கீழ்காணும் பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளோம்.*

- *நாவல ஹீன்எலப் பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டமை*
- *கிருளப்பண பகுதியில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டமை*

 

***ஹீன்எல சதுப்புநிலப் பகுதி***

## *07. பேரவெவ ஏரியின் முழுப் பகுதியையும் சூழவுள்ள அதன் கால்வாய் உள்வருகை மற்றும் வெளிச்செல்கை வழிகளுக்கான அகழ்ந்து துப்புரவு செய்தல் மற்றும் புனரமைப்பு சார்ந்த பணிகள்*

*பேரவெவ ஏரியின் பல இடங்களிலும் இந்த ஏரியுடன் இணைந்த நீர் உள்வருகை மற்றும் நீர் வெளிச்செல் இடங்களிலும் கடுமையான அளவில் வண்டல் மண் படிந்துள்ளது. இந்த நிலைமை இந்த ஏரியின் பராமரிப்பு பணி, ஏரியிலும் கால்வாய் முறைமையிலும் கிடைக்கக்கூடிய பல பொழுதுபோக்கு செயற்பாடுகள் என்பவற்றை கடுமையானளவில் பாதித்துள்ளது. வண்டல் மண் படிவுகளை அகற்றி சுத்தப்படுத்துதல், பேரவெவ ஏரி நீரின் தரத்தை மேம்படுத்துதல், ஏரியையும் ஏரியுடன் இணைந்த நீர் உள்வரும் மற்றும் நீர் வெளிச்செல்லும் இடங்களையும் பராமரித்தல் ஆகியன இந்தக் கருத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இது தவிர, உத்தரானந்த வீதி ஏரியை அகழ்ந்து துப்புரவு செய்வதும் இதன் குறிக்கோளாகும்.*

*இந்தக் கருத்திட்டத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 100.00 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 100.11 மில்லியன் ரூபாவாகும்.*

*மேற்குறித்த கருத்திட்டத்தின் கீழ் நாம் கீழ்காணும் பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளோம்.*

- *4.1 ஏக்கர் பரப்பளவான நீர் நிலைப் பிரதேசம் அகழ்ந்து துப்புரவு செய்யப் பட்டமை*
- *பெஸ்தியன் மாவத்தை மிதக்கும் சந்தை அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப் பட்டமை*
- *மஹவத்த, தெமட்டகொட மற்றும் புனித செபஸ்தியன் கால்வாய் ஓரமாக உத்தேச கரைப் பாதுகாப்பு கேபியன் சுவர் நிர்மாணிக்கப்பட்டமை*
- *பேரவெவ ஏரிப் பகுதியை சூழவுள்ள பிரதேசத்தில் வடிகாலமைப்பு சார்ந்த மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டமை*



***பேரவெவ ஏரி***



***களணிப் பள்ளத்தாக்கு அற்றுப்படுகை (பேரவெவ)***



***காலி முகத்திடல் ஏரி***

## *08. மாளிகாவத்தை, அப்ல்வத்தை ஆகிய பகுதிகளிலும் அந்தப் பகுதிகளை சூழவுள்ள பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட வடிகாலமைப்பு சார்ந்த மேம்பாட்டுப் பணிகள்*

*'அப்பல்வத்தை' என்றழைக்கப்படும் காணி 1992 ஆம் ஆண்டு வரை நீர் தேங்கி நிற்கக்கூடிய ஒரு பிரதேசமாகப் பயன்பட்டது. ஆனாலும் கடந்த 20 ஆண்டு காலப் பகுதியின் போது இந்தப் பகுதி சரியான வடிகாலமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின்றி திட்டமிடப்படாத விதத்தில் பாரிய ஒரு நகரமயப் பிரதேசமாக மாறியுள்ளது. இது மிகவும் உயர்ந்த ஒரு வர்த்தக பிரதேசமாகும். இப்பிரதேசம் 'கெத்தாராம சர்வதேச கிரிகெட் விளையாட்டு மைதானத்தை' அண்மித்து அமைந்துள்ளது. இந்த நிலப் பரப்பினதும் இதை சூழவுள்ள பகுதியினதும் எதிர்கால அபிவிருத்தியின் உத்தேச வானலாவிய கட்டிட நிர்மாணக் கண்ணோட்டத்திற்கு இணங்க, இந்தப் பிரதேசத்திலும் மற்றும் இதை சூழவுள்ள பகுதிகளிலும் வாழுகின்ற மக்களின் வாழ்வாதார நிலையை மேம்படுத்துவதற்கு இது பங்களித்துள்ளது.*

*திண்மக் கழிவுகள் படிதல் மற்றும் வண்டல் மண் படிதல் ஆகியவற்றின் காரணமாக சிறு கால்வாய் முறைமை சரியான முறையில் இயங்குவதில்லை. இதனால் பெரிய கால்வாய் முறைமைகளின் பராமரிப்புப் பணிகள் பாதிக்கப் பட்டிருந்தன. கடும் மழை பெய்துள்ள நேரங்களில் மாளிகாவத்தை, அப்பல் வத்தை, கெத்தாராம ஆகிய பிரதேசங்களும் மற்றும் இந்தப் பிரதேசங்களை சூழவுள்ள பகுதிகளும் நீரில் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமையானது மக்களுக்கும் மற்றும் அவர்களின் உடமைகளுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்த வழிவகுக்கின்றது. கால்வாய்களினுள் குப்பை கூழங்களை இடுதல் மற்றும் கொழும்பு நகரத்திலும் அதை சூழுவுள்ள பகுதிகளிலும் கடந்த ஆண்டுகளாக மேலெழுந்த வாரியாக நிகழ்ந்து வந்துள்ள அபிவிருத்தி சார் துரித பணிகள் என்பனவற்றின் காரணமாக வடிகாலமைப்பு முறைமை தடைப்படுவதானது வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான பிரதான காரணியாக விளங்குகின்றது.*

*மேற்குறித்த கருத்திட்டத்தின் கீழ் நாம் கீழ்காணும் பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளோம்.*

- *அப்பல்வத்தைப் பிரதேசத்திலும் மற்றும் அதை சூழுவுள்ள பகுதிகளிலும் வடிகாலமைப்புத் தொகுதி அபிவிருத்திப் பணிகளும் மற்றும் நிலக்காட்சிப் படுத்தல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டமை*

*குறித்த ஆண்டிற்காக இந்தக் கருத்திட்டத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 10.00 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 10.07 மில்லியன் ரூபாவாகும்.*



*மாளிகாவத்தைக் கால்வாய்*



*அப்பல்வத்தைக் கால்வாய்*

### *09.0 லூனாவ கால்வாய் தொகுதியிலும், லூனாவ ஏரியிலும் அதை சூழவுள்ள பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட அகழந்து துப்புரவாக்கல் மற்றும் புனரமைப்பு சார்ந்த பணிகள்*

*லுனாவ ஏரி கொழும்பு மாவட்டத்தின் தென் பகுதியில் அமைந்துள்ளது. இது வட பகுதி தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகரப் பிரதேசத்திலிருந்து தென் பகுதி மொரட்டுவ மாநகரப் பிரதேசம் வரை 6.15 கி.மீ. நீளமுடைய ஏரியாகும். களப்பு அழிவுக்கு வழிவகுத்த நிலையில் இருந்ததால், அரசாங்கம் சர்வதேச நிதி உதிவியைக் கொண்டு 2000 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் லூனாவ சுற்றாடல் மேம்பாட்டு சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டத்தை ஆரம்பித்தது.*

*இந்தக் கருத்திட்டத்தின் கீழ் லூனாவ களப்பும் மற்றும் கால்வாய் தொகுதியும் அபிவிருத்தி செய்யப்பட்டன. இ.கா.மீ.அ.கூ. பிரதான கால்வாய் முறைமையின் பகுதியைப் பராமரித்து வருகின்றது.*

*களப்புப் பகுதியிலும் அதை சூழவுள்ள பிரதேசங்களிலும் மற்றும் பிரதான கால்வாய் முறைமையின் பாகத்திலும் அகழ்ந்து துப்புரவு செய்யப்படும் சில புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஒரு சமூகப் பொறுப்பு என்ற ரீதியில், நாம் பொது மக்களுக்கு இனிமையான ஒரு சுற்றாடல் வசதியை உருவாக்கும் நோக்கில் களப்புப் பகுதியையும் மற்றும் பிரதான கால்வாய் முறைமையின் பாகத்தையும் அகழ்ந்து துப்புரசெய்வதற்கு திட்டமிட்டுள்ளோம்.*

*லூனாவ களப்பினதும் பிரதான கால்வாய் முறைமையினதும் சில பாகங்களை புனர்நிர்மாணிப்பதற்காக 100.0 மில்லியன் ரூபா மொத்தத் தொகை அடங்கிய கருத்திட்டப் பிரேரணை மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 100.11 மில்லியன் ரூபாவாகும்.*

*இந்தக் கருத்திட்டத்தின் கீழ் இ.கா.மீ.அ.கூ. N-1 மற்றும் N1-iii ஆகிய பிரதான கால்வாய்களை அகழந்து துப்புரவு செய்தது. S-1 மற்றும் S-2 ஆகிய கால்வாய்களின் பராமரிப்புப் பணியையும் மற்றும் லூனாவ களப்புப் பகுதியின் நிலக் காட்சிப்படுத்தல் பணியையும் மேற்கொண்டது.*



***N1 கால்வாய்***



***N1-III கால்வாய்***



*S1 கால்வாய்*



*S2 கால்வாய்*

***10.0 ஏரிகளையும் குட்டைகளையும் உருவாக்குதல், சுற்றுப்புறக் கால்வாய் பகுதிகளை அகழ்ந்து துப்புரவாக்குதல் ஆகிய செயற்பாடுகளின் மூலம், நீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்களின் கெள்ளளவுக்கு வசதி செய்யும் பொருட்டு நீர் தேங்கி நிற்கக்கூடிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு மற்றும் மேம்பாடுகள் சார்ந்த பணிகள்***

*கொழும்புப் பெரும்பாகப் பிரதேசம் நீரில் மூழ்குவதைப் பாதுகாக்கும் வகையில் இந்த சதுப்புநிலங்கள் நீரைத் தேக்கி வைக்கக்கூடிய பிரதேசமாக இனங்காணப் பட்டுள்ளன. எனினும் சட்டவிரோதமான முறையில் காணிகளை மண்ணிரப்பி எடுக்கும் செயற்பாட்டினால் இந்த சதுப்புநிலங்கள் பரப்பளவு குறைந்துள்ளது. ஆகையால் இத்தகைய சட்டவிரோதமான செயற்பாடுகளிலிருந்து பாதுகாத்தல் மற்றும் பொது மக்களுக்கு ஒரு பொழுதுபோக்குப் பிரதேசத்தை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களின் நிமித்தம் இந்தக் கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.*

*கொழும்பு மாவட்டத்தின் சனத்தொகை வளர்ச்சி நாளுக்கு நாள் துரிதமாக அதிகரித்து வருகின்றது. நீரைத் தேக்கி வைக்கக்கூடிய பிரதேசங்கள் சட்ட விரோதமான கட்டிடங்கள் அடங்கலான நிர்மாண செயற்பாட்டின் காரணமாக பெருமளவில் குறைந்து வருகின்றன. சீமெந்து பரவப்படுகின்ற பிரதேசங்கள் அதிகளவில் அதிகரித்துள்ளது. மேட்டுநில நீர் நிலைகளின் காரணமாக சம அளவில் குறையச்செய்யும் குறைந்தளவான ஊடுருவலும் காணப்படுகின்றது. நீர் வழிந்தோடும் மேற்பரப்புகள் இதனால் பாதிக்கப்படுகின்றன. கொழும்பு மாவட்டத்தின் அதிகளவான தாழ்நிலப் பிரதேசமும் மழை நீரோட்ட வீதத்தில் செல்வாக்குச் செலுத்தியது. இந்தப் பிரதேசங்களில் தற்போது மழை நீர்*

*வடிகாலமைப்பு முறைமையை நிர்மாணிப்பது கடினமாகும். அபிவிருத்திக் கருத் திட்டங்கள் அதிகமான காலத்தை எடுக்கலாம். சட்டவிரோதமாக மண்ணிரப்பி எடுத்தல், சட்டவிரோத நிர்மாணங்கள் என்பவற்றின் காரணமாக, உண்மையாக மதிப்பிடப்பட்ட வரவுசெலவுத்திட்டத் தொகையைப் பார்க்கிலும் அதிகளவான செலவும் ஏற்படலாம்.*

*மேலும், தற்காலிகமாக மழை நீரைத் தேக்கி வைக்கக்கூடிய பிரதேசங்களின் அளவுகள், அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளுக்கு காணிகளை மண்ணிரப்பி எடுப்பதால் குறைந்துள்ளன. அத்துமீறி வசிக்கின்றவர்களினால் நகரமும் அந்த நகரத்தில் வாழுகின்ற மக்களும் வெள்ளப்பெருக்கு ஆபத்துகளுக்கு தள்ளப்படும் நிலை காணப்படுகின்றது. வெள்ளப்பெருக்களிலிருந்து மக்களைப் பாதுகாத்தல் மற்றும் பொது மக்களுக்கு ஒரு பொழுதுபோக்குப் பிரதேசத்தை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களின் நிமித்தம் இந்தக் கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.*



*இந்தக் கருத்திட்டத்திலிருந்து கிடைக்கும் என எதிர்பார்த்த நன்மைகள் பின்வருமாறு:*

- *அடிக்கடி நிகழும் வெள்ளப்பெருக்குகளை தடுப்பதால் வதிவிட நிலை மேம்படுதல்*
- *வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்பு*
- *வெளப்பெருக்கினால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதன் மூலம் நகரத்திலும் நகரத்தை சூழவுள்ள பகுதிகளிலும் பொருளாதார செயற்பாடுகளுக்கான வசதி*
- *சுலபமான மழை நீர் வடிகாலமைப்பின் மூலம் வாழ்க்கைத் தரம் மேம்படுதல்*
- *நீர் தேங்கி நிற்கும் தன்மை குறைதல் மற்றும் நீரிலிருந்து ஏற்படும் நோய்கள் குறைதல்*
- *கருத்திட்டத்திலுள்ள வீதிகள் மேம்பாடைந்து சுலபமான போக்குவரத்து வசதி ஏற்படுதல்*

*குறித்த ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 75.0 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 80.63 மில்லியன் ரூபாவாகும்.*

*இந்தக் கருத்திட்டத்தின் பிரதான செயற்பாடுகள்*



- *சட்டவிரோதமான முறையில் காணிகளை மண்ணிரப்பியெடுத்தலை அகற்றுதல்*
- *சட்டவிரோதமான நிர்மாணங்களை இடித்து அகற்றுதல்*
- *பொழுதுபோக்கு சார்ந்த செயற்பாடுகளை அதிகரிக்கும் பொருட்டு அண்மித்த நீர் நிலைகளில் அழகுபடுத்தல் வேலைகளை மேற்கொள்ளல்*
- *ஏற்கெனவேயிருக்கின்ற சதுப்புநிலங்களை மேலும் அத்துமீறிக் குடியேறுவதில் இருந்து பாதுகாத்தல்*
- *நீர் மாசடைதலைத் தடுப்பதற்கான திண்மக் கழிவு அகற்றல், கழிவு நீர் அகற்றல் ஆகிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல்*
- *நீர் தேங்கி நிற்கக்கூடிய தேவையான கொள்ளளவைப் பேணுதவதன் மூலம் வெள்ளப்பெருக்குகளைக் குறைத்தல்*
- *ஈரநிலங்களையும் உயிரியல் சுற்றாடலையும் பாதுகாத்தல்*
- *பொழுதுபோக்கு சார்ந்த செயற்பாடுகளுக்காக சூழவுள்ள பகுதிகளை அழகு படுத்தல்*
- *நீர் தேங்கி நிற்கக்கூடிய பிரதேசங்களை அத்துமீறிக் குடியேறுதல் மற்றும் சட்டவிரோதமான முறையில் காணிகளை மண்ணிரப்பியெடுத்தல் முதலிய செயற்பாடுகளிலிருந்து பாதுகாத்தல்*



***சதுப்புநிலப் பிரதேசங்கள்***



***சட்டவிரோத நிர்மாணங்கள்***

## 11.0 கொழும்பு மாவட்டத்திற்கு வெளியால் மேற்கொள்ளப்பட்ட வெள்ளப் பெருக்குத் தணிப்பு மற்றும் மழை நீர் வடிகாலமைப்புக் கருத்திட்டங்கள்

*நகர அபிவிருத்திக் கருத்திட்டப் பிரதேசத்திலும் அதை சூழவுள்ள பகுதிகளிலும் நிகழுகின்ற வெள்ளப்பெருக்குகளைத் தணித்தல், 'அனுராதபுர கும்பிச்சன்குளம், குருனாகல் தித்தவெல் குளம்' மற்றும் 'அம்பாந்தோட்டை சூரியவெவ, ஜரவல ஆகிய குளங்கள்' போன்ற குளங்களைப் புனர்நிர்மாணித்தல் ஆகியன இந்தக் கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.*

*ஏரிகளைப் புனர்நிர்மாணித்தல், வண்டல் மண் படிவுகளை அகற்றுதல் மற்றும் அத்துமீறிக் குடியேறுபவர்களினால் சட்டவிரோதமான முறையில் மண்ணிரப்பி எடுக்கப்பட்ட பகுதிகளை அகழந்து துப்புரவாக்குதல், குளக் கட்டு ஓரமாக நடை பாதையை அமைத்தல், சுற்றாடலை சுத்தமாக வைத்திருத்தல், அபிவிருத்தி சம்பந்தப்பட்ட கால்வாய் முறைமையின் சிறந்த இணைப்பை ஏற்படுத்துதல் முதலியன இந்தக் கருத்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.*

*ஏரிகளில் நீர் தேங்கி நிற்கக்கூடிய கொள்ளளவை அதிகரித்தல், மேலும் அத்து மீறல் செயற்பாடுகளிலிருந்து சுற்றுப்புறப் பகுதிகளைப் பாதுகாத்தல், பொழுது போக்கு சார்ந்த செயற்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு அண்மித்த பகுதி நீர் நிலைகளை அழகுபடுத்துதல், நகர அபிவிருத்திற்காக காணிகளை மண்ணிரப்பி எடுத்தல் மற்றும் சுற்றுப்புறப் பிரதேசங்களின் அபிவிருத்தி முதலிய மாற்றத்தின் காரணமாக ஏற்கெனவேயிருக்கின்ற ஏரிகளையும் கால்வாய் முறைமைகளையும் மேம்படச்செய்தல் என்பன இந்தக் கருத்திட்டத்தின் ஏனைய நன்மைகளில் உள்ளடங்குகின்றன.*

*குறித்த ஆண்டு நிமித்தம் இந்தக் கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 440.0 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 440.09 மில்லியன் ரூபாவாகும்.*

*இந்த முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் நாம் பின்வரும் கருத்திட்டங்களை நிறைவுசெய்துள்ளோம்.*

- *குருனாகல் நகரப் பிரதேசத்தை சூழவுள்ள பகுதி ஏரிகளின் அபிவிருத்தி மற்றும் நிலக்காட்சிப்படுத்தல் பணி*
- *அனுராதபுரத்திலுள்ள கும்பிச்சன்குளத்தின் அபிவிருத்தி*

- *அம்பாந்தோட்டை சூரியவெவ கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரி சார்பான ஏற்கெனவேயிருக்கின்ற ஏரிகளில் மீளபிவிருத்தி*
- *தெனியாய புஷ்பாராம விகாரைக்கான உத்தேச கேபியன் சுவர், குழாய் வடிவ மதகு மற்றும் வடிகாலமைப்பு முறைமை என்பவற்றின் நிர்மாணம்*
- *உத்தேச மழை நீர் வடிகாலமைப்பு முறைமை - இமாதுவ நகர அபிவிருத்திக் கருத்திட்டம்*
- *அம்பாந்தோட்டை ஜரவல உத்தேச அபிவிருத்திப் பணி*
- *அம்பாந்தோட்டைப் பிரதான வீதி வடிகாலமைப்பு முறைமைக்கான ஏரிகள், கால்வாய்கள் என்பவற்றின் நிர்மாணம்*
- *போலவலானவில் அமைந்துள்ள ஆசியாவுக்கான XVI ஆம் போப்பாண்டவர் கலாசார நிலையத்திலுள்ள உத்தேச நீர்க் குட்டை அபிவிருத்தி*
- *புவக்தெனிய மாஓயா உப கால்வாய் உத்தேச நடை பாலத்தின் நிர்மாணம்*
- *குருனாகல், நாவின்ன கருதுகஸ் சந்தி இயற்கை நெல் வயலை சுற்றி அமையும் உத்தேச நடை பாதை நிர்மாணம்*
- *வாரியபொல ஸ்ரீ சுமங்கல பிரிவெனா ஏரி அபிவிருத்தி*
- *காலி மாநகர ஒல்லாந்தர் கால கால்வாய் உத்தேச வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணி*

***குருனாகல் நகரப் பிரதேசத்தை சூழவுள்ள பகுதி ஏரிகளின் அபிவிருத்தி மற்றும் நிலக்காட்சிப்படுத்தல் பணி***


LAKE 'C'
LAKE 'B'
LAKE 01
LAKE 'A'
DETAIL 'A'
DETAIL 'B'
LAYOUT PLAN
SCALE 1:3000
SRI LANKA LAND RECLAMATION DEVELOPMENT CORPORATION
PROJECT : PROPOSED WALK PATH & LAKE IMPROVE
PROJECT AT KURUNEGALA
TITLE : LAYOUT PLAN








*அனுராதபுரத்திலுள்ள கும்பிச்சன்குளத்தின் அபிவிருத்தி*








***போலவலானவில் அமைந்துள்ள ஆசியாவுக்கான XVI ஆம் போப்பாண்டவர் கலாசார நிலையத்திலுள்ள உத்தேச நீர்க் குட்டை அபிவிருத்தி***







***<u>திறைசேரி மானியங்களின் கீழ் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள்</u>***

***கால்வாய் பராமரிப்புப் பணிகள்***

*1. கொழும்பு நகரத்திலும் அதை சூழவுள்ள பகுதிகளிலும் காணப்படுகின்ற பிரதான கால்வாய்களினதும் சிறு கால்வாய்களினதும் பராமரிப்பு*

- *கொழும்பு வடக்கு (ஒறுகொடவத்த) பிராந்திய அலுவலகத்தின் கீழ் வருகின்ற பிரதான கால்வாய்களினதும் சிறு கால்வர்களினதும் பராமரிப்பு*
- *கொழும்பு தெற்கு (கிருளப்பண) பிராந்திய அலுவலகத்தின் கீழ் வருகின்ற பிரதான கால்வாய்களினதும் மற்றும் சிறு கால்வாய்களினதும் பராமரிப்பு*

- *கொழும்பு கிழக்கு (கிரிமண்டல மாவத்தை) பிராந்திய அலுவலகத்தின் கீழ் வருகின்ற பிரதான கால்வாய்களினதும் சிறு கால்வாய்களினதும் பராமரிப்பு*




## 2. *முத்துராஜவெல ஹமில்டென் கால்வாயின் பராமரிப்பு*

*கொழும்புத் தளத்திலுள்ள பிரதான கால்வாய் முறைமையானது அநேகமாக ஒரு இயற்கை வடிகாலமைப்பு முறைமையாக விளங்குகின்றது. இந்தக் கால்வாய் முறைமைகளிலிருந்து வெளியாகிச்செல்லும் நீர் தெஹிவளை - வெல்லவத்தை கடல் பகுதியில் கலக்கின்றது. ஒரு சிறிய நீர் வெளிச்செல் பகுதி மோதரவிலும் மற்றும் களணி ஆற்றுக்கு வழிந்து செல்லும் இரண்டு நீர் வெளிச்செல் பகுதிகள் நாகலகம வீதியிலும் அம்பதலவிலும் காணப்படுகின்றன. இது தவிர, மழை நீர் பேரவெவ ஏரியின் நீர் வெளிச்செல் பகுதியினூடாக கடலில் கலக்கின்றது.*

*30 நிமிடங்கள் மழை பெய்தாலே கொழும்பு நகரத்தின் பிரதான வீதிகள் நீரில் மூழ்கின்றன. இது வாகன நெரிசல்களுக்கு காரணமாக அமைகின்றது. இதனால் நகரத்தின் நாளாந்த பொருளாதார செயற்பாடுகள் தடைப்படுகின்றன.*

*வெள்ளப்பெருக்குகளினால் ஏற்படும் பாதிப்புகளைத் தணிப்பதற்கும் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குமாக நடுத்தர கால நடவடிக்கைகளின் கீழ், அரசாங்கம் கொழும்புப் பெரும்பாகப் பிரதேசங்களில் அதிகளவு வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்படும் பகுதிகளிலுள்ள அபிவிருத்தி அடையாத அல்லது பழைய கால்வாய் முறைமைகளை மேம்படுத்தும்.*

*உள்ளூர் வெள்ளப்பெருக்குகளைத் தடுப்பதற்கான பிரதான, இரண்டாம்நிலைக் கால்வாய் தொகுதிகளின் மேம்பாட்டுப் பணிகள் உள்ளூர் ரீதியில் ஏற்படுகின்ற வெள்ளப்பெருக்குகளைத் தடுக்கும் நோக்கில் கொழும்பு மாநகர சபையினதும் ஏனைய உரிய முகவர்நிலையங்களினதும் ஈடுபாட்டுடன் மேற்கொள்ளப்படும்.*

*ஆகையால், குறித்த கருத்திட்டத்தின் கீழ் கொழும்பு நகரத்தை கவர்ச்சியான ஒரு நகரமாக மட்டும் அன்றி அதனை வெள்ளப்பெருக்குக்கு ஈடுகொடுக்கக் கூடிய ஒரு நகரமாகவும் மாற்றியமைத்து, மொத்தத்தில் வெள்ளப்பெருக்குக்கு ஒரு தீர்வை வழங்கும் வகையில் கொழும்பு நகரத்திலுள்ள வெள்ளப்பெருக்கு மற்றும் வடிகாலமைப்பு முகாமைத்துவத்தினது பெரும்பான்மையான ஆக்கக்கூறுகள் செயற்படுத்தப்படும்.*

*கொழும்பு நகரத்தின் பிரதான கால்வாய் முறைமை 45 கி.மீ. நீளமுடையது. இது நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்டு 1979 ஆம் ஆண்டில் எமது கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. இந்த பிரதான கால்வாய் முறைமை கொழும்புப் பெரும்பாக வெள்ளப்பெருக்கு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் கட்டம் I இன் கீழ் புனர்நிர்மாணிக்கப்பட்டது. தியவன்னாவ ஓயா 1980 ஆம் ஆண்டில் ஒரு ஏரியாக மாற்றப்பட்டது. இதன் பராமரிப்புப் பணிக்கு எமது கூட்டுத்தாபனம் பொறுப்பாகவுள்ளது.*

*இது தவிர, 2001 ஆம் ஆண்டு முதல் எமது கூட்டுத்தாபனத்திற்கு சுமார் 20 கி.மீ. நீளமான கொழும்பு நகரத்திலுள்ள சில சிறு கால்வாய்களின் பராமரிப்புப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.*

*களணி கங்கையிலிருந்து நீர் கொழும்பு களப்பு வரை செல்கின்ற ஹமில்டென் கால்வாயின் (14.5 கி.மீ. நீளமான) பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது.*

*கூட்டுத்தாபனம் ஒறுகொடவத்த (கொழும்பு வடக்கு), கிரிமண்டல மாவத்தை (கொழும்பு கிழக்கு), கிருளப்பண (கொழும்பு தெற்கு) மற்றும் முத்துராஜவெல ஆகிய நான்கு இடங்களிலுள்ள தனது பிராந்திய அலுவலகங்களை நிருவகித்து வருகின்றது. மேற்பரப்பை சுத்தம் செய்தல், கால்வாய்களை அகழ்ந்து துப்புரவு செய்தல், கேபியன் பாதுகாப்புப் பெட்டிகளைப் பயன்படுத்தி கால்வாய் கரைப் பகுதிகளைப் பாதுகாத்தல் என்பன கால்வாய்களின் பராமரிப்புப் பணிகளில் உள்ளடங்குகின்றன. ஆட்களைக் கொண்டு சுத்தம் செய்வது தவிர, கால்வாய் மற்றும் கால்வாய் கரைகள் என்பவற்றை அகழ்ந்து துப்புரவு செய்யும் பொருட்டு கூட்டுத்தாபனம் அகழந்து துப்புரவாக்கும் இயந்திரங்கள், ட்ரக் வண்டிகள், பெbக்கோக்கள் மற்றும் அகழ்வு இயந்திரங்கள் போன்ற இயந்திராதிகளை ஈடுபடுத்துகின்றது.*

*குறித்த ஆண்டிற்கு இந்தக் கருத்திட்டத்தின் நிமித்தம் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 369.20 மில்லியன் ரூபாவாகும். நிறைவேற்றப்பட்ட பணிகளின் பெறுமானம் 433.22 மில்லியன் ரூபாவாகும்.*

- ***கொழும்பு வடக்கு (ஒறுகொடவத்த) பிராந்திய அலுவலகத்தின் கீழ் வருகின்ற பிரதான கால்வாய்களினதும் சிறு கால்வர்களினதும் பராமரிப்பு***





பிரதான வடிகாலமைப்புக் கால்வாய்



தெமட்டகொட கால்வாய்



மகவத்தைக் கால்வாய்



பிரதான கால்வாய் இணைப்பு



கொலன்னாவ வட கால்வாய்



உத்ரானந்த வீதிக் கால்வாய்

- ***கொழும்பு தெற்கு (கிருளப்பண) பிராந்திய அலுவலகத்தின் கீழ் வருகின்ற பிரதான கால்வாய்களினதும் மற்றும் சிறு கால்வர்களினதும் பராமரிப்பு***





*தெஹிவளைக் கால்வாய்*



*வெல்லவத்தைக் கால்வாய்*



*பொல்கொடக் கால்வாய்*



*தெஹிவளைக் கால்வாய் (கேபியன் சுவர் பலப்படுத்தல் பணி)*



*தெஹிவளை நீர் வெளிச்செல் பகுதி*



*வெல்லவத்தை நீர்வெளிச்செல் பகுதி*

- ***கொழும்பு கிழக்கு (கிரிமண்டல மாவத்தை) பிராந்திய அலுவலகத்தின் கீழ் வருகின்ற பிரதான கால்வாய்களினதும் சிறு கால்வர்களினதும் பராமரிப்பு***





ஹீன் எல



ஹீன் எல சதுப்புநிலம்



கிருளப்பணக் கால்வாய்



டெரின்டன் வட கால்வாய்



பாகொட பூங்கா சுற்றுப்புறக் கால்வாய்



கமகேவத்தை சுற்றுப்புறக் கால்வாய்

***2. முத்துராஜவெல ஹமில்டன் கால்வயின் பராமரிப்புப் பணி***













***வெரஸ் கங்கை மழை நீர் வடிகாலமைப்பு சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டம்***

***வலயம் 03 - பெல்லன்வில***

*பெல்லன்விலவிலும் அதை சூழவுள்ள பகுதிகளிலும் ஏற்படும் வெள்ளப்பெருக்கு சார்ந்த பிரச்சினைகளைக் குறைப்பதற்காக இந்தக் கருத்திட்டம் செயற்படுத்தப் பட்டது.*

*மதிப்பிடப்பட்ட பெறுமானம்: 686.23 மில்லியன் ரூபா (மேலதிக வேலைகள் உள்ளடங்கலாக வரிகள் நீங்கலாக)*

- *ஆரம்பிக்கப்பட்ட நாள்: 2013 மார்ச் மாதம்*
- *கருத்திட்டத்தின் நிலை: கருத்திட்டம் நிறைவுசெய்யப்பட்டு இன்று பராமரிப்பு சார்ந்த பணிகள் நிகழ்கின்றன*
- *மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம்: 723.25 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
- *2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் : 723.25 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
- *பணியின் நோக்கெல்லை*
  - *பிரதான கால்வாய்களை அகழ்ந்து துப்புரவு செய்தல்*
  - *சிதைந்த கட்டிட வடிகாலமைப்புகளை நிர்மாணித்தல்*
  - *மதகுகள், குறுக்குக் கட்டுமாணங்கள், கேபியன் நிர்மாணங்கள் முதலிய நிர்மாணங்கள்*















***வாடிக்கையாளர் கருத்திட்டங்கள்***

1. ***மோதரவில வடிகாலமைப்பு மேம்பாடு - பானந்துறை ஒன்றிணைந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கட்டம் II***

   *மோதரவிலப் பகுதிகளில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு சார்ந்த பிரச்சினைகளைக் குறைப்பதற்காக இந்தக் கருத்திட்டம் செயற்படுத்தப் பட்டது.*

   - *வாடிக்கையாளர்: களுத்துறை மாவட்ட செயலகம்*
   - *மதிப்பிடப்பட்ட பெறுமானம்: 54.60 மில்லியன் ரூபா (மேலதிக வேலைகளுடன் வரிகள் நீங்கலாக)*
   - *ஆரம்பிக்கப்பட்ட நாள்: 2013.06.23*
   - *கருத்திட்டத்தின் நிலை: செயற்படுத்தப்பட்டு வருகின்றது*
   - *மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம்: 32.2 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
   - *2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் : 6.9 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
   - *பணியின் நோக்கெல்லை*
     - *பிரதான கால்வாய்களை அகழ்ந்து துப்புரவு செய்தல்*
     - *சிதைந்த கட்டிட வடிகாலமைப்புகளை நிர்மாணித்தல*
     - *மதகுகள், குறுக்குக் கட்டுமாணங்கள், கேபியன் நிர்மாணங்கள் முதலிய நிர்மாணங்கள்*




## 2. *தங்காலை கிரமஓயா நிரல் பூங்கா மற்றும் தடுப்புச் சுவர் நிர்மாணம்*

- *வாடிக்கையாளர்: இடர் முகாமைத்துவ நிலையம்*
- *மதிப்பிடப்பட்ட பெறுமானம்: 93.03 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
- *ஆரம்பிக்கப்பட்ட நாள்: 2014 மே*
- *கருத்திட்டத்தின் நிலை: செயற்படுத்தப்பட்டு வருகின்றது*
- *மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம்: 62.9 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
- *2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம்: 62.9 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*

- *பணியின் நோக்கெல்லை*
    - *கால்வாய் கரைப் பகுதிகள் பாதுகாப்புக்கான கேபியன் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல்*
    - *கிரமஒயா ஓரமாக நிரல் பூங்காவை நிர்மாணித்தல்*
    - *நிரல் பூங்காவிலும் சுற்றுப்புறங்களிலும் கருங்கற்களை வலையினுள் இட்டு கட்டுமானங்களை நிர்மாணித்தல்*





### 3. பாதுக்க விளையாட்டு மைதான உத்தேச வடிகாலமைப்பு முறைமை மற்றும் மேம்பாடு

- *வாடிக்கையாளர்: நகர அபிவிருத்தி அதிகார சபை*
- *மதிப்பிடப்பட்ட பெறுமனம்: 20.65 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
- *ஆரம்பிக்கப்பட்ட நாள்: 2014.07.04*
- *கருத்திட்டத்தின் நிலை: செயற்படுத்தப்பட்டு வருகின்றது*
- *மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம்: 10.9 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
- *2014 ஆம் ஆண்டு கலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 10.9 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
- *பணியின் நோக்கெல்லை*
    - *விளையாட்டு மைதானத்திலும் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளிலும் நில அபிவிருத்தி, டேர்பிங் மற்றும் வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணிகள் அடங்கலான நில மேம்பாட்டுப் பணிகள்*
    - *விளையாட்டு மைதானத்திலும் சுற்றுப்புறப் பகுதிகளிலும் கால்வாய் மேம்பாட்டுப் பணிகள்*
    - *நிர்மாணம் மற்றும் கொங்றீட்டு வடிகாலமைப்புகள்*






 

4. ***எஹலியகொட உத்தேச விளையாட்டு மைதான நிர்மாணம் - நகர நிலைய அபிவிருத்தி***

- *வாடிக்கையாளர்: நகர அபிவிருத்தி அதிகர சபை*
- *மதிப்பிடப்பட்ட பெறுமானம்: 173.49 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
- *ஆரம்பிக்கப்பட்ட நாள்: 2014 யூலை*
- *கருத்திட்டத்தின் நிலை: செயற்படுத்தப்பட்டு வருகின்றது*
- *மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம்: 37.6 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
- *2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம்: 37.6 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
- *பணியின் நோக்கெல்லை*
  - *கிரவல் கற்கள் பரவப்பட்ட மண்படலத்துடன் கூடிய காணி அபிவிருத்தி*
  - *டேர்பிங் விநியோகமும் டேர்பிங் இடுதலும்*
  - *வடிகாலமைப்புக் கால்வாய்கள், பெட்டி வடிவான மதகுகள் நிர்மாணம்*
  - *மண்ணாலான கால்வாய்களின் மேம்பாட்டுப் பணி*
  - *நீர்க் குட்டையை அகழ்ந்து துப்புரவு செய்தல்*
  - *பிரதான அருவி வரை கீழருவிக் கால்வாய்களை துப்புரவு செய்தல்*





### 5. பத்தரமுல்ல அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கான காணி அபிவிருத்தி

*பத்தரமுல்ல அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கான காணியை அபிவிருத்தி செய்யும் பொருட்டு இந்தக் கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. கிரவல் கற்கள் பரவிய மண்படலம், டேர்பிங் விநியோகம் மற்றும் டேர்பிங் இடுதல் (கால்வாய் கரைப் பகுதி), வடிகலமைப்புக் கால்வாய்கள், மற்றும் பெட்டி வடிவான மதகுகள் என்பவற்றின் நிர்மாணம், கால்வாய்களை அகழ்ந்து துப்புரவு செய்தல், அபிவிருத்திப் பிரதேசத்திற்கான அணுகுவழியை நிர்மாணித்தல் முதலியன பணி அடங்கலாக காணியை அபிவிருத்தி செய்வது குறித்த இந்தக் கருத்திட்டத்தின் நோக்கெல்லையாக இருந்தது.*

- வாடிக்கையாளர்: அரசாங்க சேவைகள் ஆணைக்குழு
- மதிப்பிடப்பட்ட பெறுமானம்: 14.51 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)
- ஆரம்பிக்கப்பட்ட நாள்: 2014.05.02
- நிறைவுசெய்யப்பட்ட நாள்: 2014.11.30
- மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம்: 12.82 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)
- 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் :12.82 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)





### 6. *காலி ஹீனப்பந்தலவில் ஏற்கெனவே காணப்படுகின்ற கால்வாய்கள் மீளபிவிருத்தி*

*இந்தக் கருத்திட்டம் காலி ஹீன்பந்தல கால்வாயை அபிவிருத்தி செய்வதற்காக செயற்படுத்தப்பட்டது. ஏரியை அகழ்ந்து துப்புரவு செய்தல் மற்றும் கால்வாயை அகழ்தல் முதலிய பணிகள் அடங்கலாக கால்வாய் முறைமையை மேம்படுத்துவது இந்தக் கருத்திட்டத்தின் நோக்கெல்லையாக இருந்தது.*

- *வாடிக்கையாளர்: காலி மாவட்ட செயலகம்*
- *மதிப்பிடப்பட்ட பெறுமானம்: 4.88 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
- *ஆரம்பிக்கப்பட்ட நாள்: 2014.01.01*
- *நிறைவுசெய்யப்பட்ட நாள்: 2014.01.31*
- *மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம்: 3.94 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
- *2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் : 3.94 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*






## 7. மாகும்புர புதிய நகர அபிவிருத்திக் கருத்திட்டக் கட்டம் I இற்கான உத்தேச காணி மேம்பாட்டுப் பணிகள்

*புதிய நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் மாகும்புரவில் பல மாதிரி நிலையக் கட்டிடத்தொகுதியை நிர்மாணிக்கும் வகையில் காணிகளை மேம்படுத்தும் நிமித்தம் இந்தக் கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. குறித்த பகுதியிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் கிரவல் கற்கள் பரவிய மண்படலம், மணல் திண்டு முதலியவற்றைப் பயன்படுத்தி நிலத்திற்கு மண்ணிரப்புதல், வடிகலமைப்பு மேம்பாட்டு பணி என்பன போன்ற பணிகள் அடங்குகின்றன.*

- *வாடிக்கையாளர்: நகர அபிவிருத்தி அதிகார சபை*
- *மதிப்பிடப்பட்ட பெறுமானம்: 74.13 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
- *ஆரம்பிக்கப்பட்ட திகதி: 2014.10.16*
- *கருத்திட்டத்தின் நிலை: செயற்படுத்தப்பட்டு வருகின்றது*
- *மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம்: 36.83 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*
- *2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் : 36.83 மில்லியன் ரூபா (வரிகள் நீங்கலாக)*





***சொந்தக் கருத்திட்டங்கள்***

***1. கடற்கரை மணல் அகழ்ந்து குவித்து விற்பனை செய்யும் கருத்திட்டம்***

*நிர்மாணக் கைத்தொழிலில் அண்மையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் காரணமாக சிறந்த மணல் சேர்க்கைகளுக்கான கேள்வி துரிதளவில் அதிகரித்து வருகின்றது. ஆற்று மணல் சேர்க்கை இலங்கையில் மிகப் பரந்தளவில் பயன்படுத்தப்பட்டுள்ள மணலாகும். இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் நிமித்தம் மேலதிகமாக ஆற்று மணல் அகழப்படும் செயல் ஆற்றுப் படுக்கையின் ஆழத்தில் அதிகரிப்பு, நீர் திண்டு ஆழம் குறைதல், ஆறுகளினுள் உவர்ப்பு நீர் ஊடுருவுதல் போன்ற பல்வேறு வகை தீங்குகளுக்கு வழிவகுத்துள்ளது. இத்தகைய சுற்றாடல் பிரச்சினைகள் விளைவாக, குறிப்பாக பாதிக்கப்புக்குள்ளாக்கூடிய பகுதிகளில் ஆற்று மணல் அகழ்வை மட்டுப் படுத்துவது ஒரு கட்டாயத் தேவையாக இருக்கின்றது. ஒரு பரிகார நடவடிக்கை என்ற வகையில், அரசாங்கம் ஆற்று மணல் அகழ்வு மீது பல மட்டுப்பாடுகளை விதிக்கின்றது. இதனால் மணலின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படுகின்றது. இது பாவனையாளர்களை நேரடியாக அசௌகரிகத்திற்குள்ளாக்கியது மாத்திரமன்றி, நிர்மாணக் கைத்தொழிலின் முழுமொத்த நிலைபெறுதகு தன்மையிலும் மறைமுகத் தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக நிர்மாணம் சார்ந்த விலை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது.*

*மீளப்பலப்படுத்திய கொங்கிறீட்டுப்படலத்திற்கு வெறுமனே இட்டுச்சென்றுள்ள கடல் மணல் பாவனையை தனிநபர்களும் அரச துறை வாடிக்கையாளர்களும் குறைந்த அளவிலேயே அங்கீகரிப்பதாக, மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னோடி மதிப்பாய்வு வெளிப்படுத்தியது. மேலும், முத்துராஜவெலவில் குவிக்கப்பட்டிருந்த கடல் மணல் முதலில் பாவனைக்கு எடுக்கப்பட்டது. பின்னர் புதிய கடல் மணல் களஞ்சியங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இந்தக் களஞ்சியங்களில் இருக்கும் மணல் மழை நீர் பட்டு அரித்துச்செல்லப்படுகின்றது. வித்தியாசமான கண்ணோட்டங்களிலிருந்து நோக்கும் போது கடல் மணலின் நிலைபெறுதகு தன்மை பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்கு மேலும் ஆய்வுகள் அவசியப்படுகின்றன. ஆற்று மணல் அகழ்வினால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புகளுடன் ஒப்பிடும் போது கடல் மணல் அகழ்வின் காரணமாக எழும் சாத்தியமான சுற்றாடல் பாதிப்புகள் மிக குறைந்தளவில் காணப்படுகின்றன.*

*இந்த மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதன் விளைவாக, உரிய நேரத்திலும் உரிய அளவிலும் மணலைப் பெற்றுக்கொள்வது நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற தரப்புகளுக்கு பாரிய ஒரு பிரச்சினையாகக் காணப்படுகின்றது. எமது கூட்டுத் தாபனம் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக சுற்றாடலையும் மற்றும் நிர்மாணக் கைத்தொழிலின் நிலைபெறுதகுதன்மையையும் பாதுகாப்பதற்கான ஒரு சேவை சார்ந்த பணியாக நியாயமான விலைகளில் கடல் மணலை சந்தைக்கு விடுவிக்கும் ஒரு கருத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.*









## *2. தமது பாகாப்புப் படைகளைக் கொண்டு இலங்கைக் கடற்படையும் சி.பா.பி. பிரிவும் நல்கிய ங்களிப்பு*

*கடந்த ஆண்டுகளில் எமது கூட்டுத்தாபனம் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் வெள்ளப்பெருக்குகளினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கும் பொருட்டு இலங்கைக் கடற்படை மற்றும் சிவில் பாதுகாப்புப் பிரிவு போன்ற பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து பணியாற்றியுள்ளது.*

*நிரல் அமைச்சு வழங்கிய அறிவுரைகளின் பிரகாரம், அவ்வப்பொழுது பாதுகாப்புப் படைகள் எமது கருத்திட்டங்களில் சம்பந்தப்பட்டு பணியாற்றின. பாதுகாப்புப் படைகள் விஷேட சந்தர்ப்பங்களில் பின்வரும் கடமைகளில் ஈடுபட்டுள்ளன.*

- *இலங்கைக் கடற்படை மேற்பார்வைப் பணியில் சம்பந்தப்பட்டு, கொழும்புக் கால்வாய்ப் பகுதிகளில் தமது உயிர் காப்பு ஊழியர்களைக் கொண்டு போக்கு-வரத்து வழங்கியது.*
- *அமைச்சின் கீழ் நிகழ்ந்த விஷேட நிகழ்வுகளின் போது, இலங்கைக் கடற்படை குறிப்பாக மினுக்கல் வேலைகளின் இலக்கைப் பூர்த்திசெய்ததுடன், அபிவிருத்தி செய்த இந்த நகரப் பகுதிகளை சரியான முறையில் நிருவகிப்பதற்கும் உதவி செய்தது.*
- *ஒரு மாதாந்த அடிப்படையிலான கொடுப்பனவில் சிவில் பாதுகாப்புப் பிரிவு (சி.பா.பி.) 2011 ஆம் ஆண்டு முதல் கொழும்பு வட கால்வாய்களின் பராமரிப்புப் பணிக்காக எம்முடன் இணைந்து தனது ஊழியர்களை ஈடுபடுத்தியது. அந்த அடிப்படையில் உண்மையான பணியை அந்த ஊழியர்கள் நிறைவு செய்தனர்.*

### *ஆராய்ச்சி மற்றும் வடிகவமைப்புகள் பிரிவு*

### *உசாதுணை சார்ந்த சேவைகள்*

*எமது கூட்டுத்தாபனம் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்காக மழை நீர் வடிகாலமைப்புத் திட்டங்கள், மழை நீர் வடிகாலமைப்புத் தலைமைத் திட்டங்கள், கட்டிடக்கலை சார்ந்த வடிவமைப்புகள், கட்டிடங்கள் மற்றும் பாலங்கள் ஆகிய நிர்மாணங்களுக்கான நிர்மாணம் சார்ந்த வடிவமைப்புத் திட்டங்கள் என்பவற்றைத் தயாரித்தல் முதலிய அம்சங்களில் உசாதுணை சார்ந்த பணியைப் பொறுப்பேற்று நிறைவேற்றுகின்றது.*

***பொறியியல் மூலப்பொருட்கள் பரிசோதனை ஆய்வுகூடம்***

*எமது கூட்டுத்தாபனத்தின் பொறியியல் மூலப்பொருட்கள் பரிசோதனை ஆய்வு கூடம் அரச மற்றும் தனியார் ஆகிய இரண்டு துறைகளினதும் நிறுவனங்களுக்காக புவித்-தொழில்நுட்ப ஆய்வுகள், நீரின் தரப் பரிசோதனை, மண், கொங்கிறீட்டுக் கனவளவுக் குற்றிகள் மற்றும் சீமெந்துக் கற்கள் என்பவற்றின் பரிசோதனை முதலிய ஆய்வு விடயங்களை மேற்கொள்கின்றது. 2014 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப் பட்ட பணியின் பெறுமானம் 16.9 மில்லியன் ரூபாவாகும்.*

***நிர்மாண வடிவமைப்புகளும் நிர்மாண மேற்பார்வையும்***

*எமது கூட்டுத்தாபனம் கட்டிடங்கள், வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் பாலங்கள் முதலியவற்றுக்கான நிர்மாண வடிவமைப்புகளையும், இவற்றின் நிர்மாணம் சார் மேற்பார்வைப் பணியையும் பொறுப்பெற்று நிறைவேற்றுகின்றது.*

***சலமுல்ல குறை வருமான வீடமைப்புக் கருத்திட்டம் - நகர அபிவிருத்தி அதிகார சபை***




*சேரிப்புற வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிக்கு இணங்க, ந.அ.அ.ச. மேற்குறித்த கருத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இது குறைந்த வருமானமுடைய குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய வீட்டுத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான ஒரு சுழச்சிச்சாவி அடிப்படையிலான கருத்திட்டமாகும். இந்தக் கருத்திட்டத்தில் 12 மாடிக் கட்டிடத் தொகுதியின் நிர்மாண மற்றும் வடிவமைப்புப் பணிகள் அடங்குகின்றன. இதன் கீழ் 18 வீடுகள் அடங்கிய ஒரு கட்டிடமும் (தொகுதி A) மற்றும் ஒவ்வொரு மாடியிலும்*

*33 வீடுகள் அடங்கிய 02 கட்டிடங்களும் (தொகுதிகள் B,C) உள்ளடங்கும். இதன் மொத்த வீடுகளின் எண்ணிக்கை 1008 ஆகும்.*

*கட்டடக்கலை சார்ந்த வடிவமைப்பு, நிர்மாண வடிவமைப்புகள் மற்றும் நிர்மாண மேற்பார்வைப் பணிகள் என்பன குறித்த ஆண்டு காலப் பகுதியில் நிறைவேற்றப் பட்டன. குறித்த இந்தக் கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நிறைவு செய்யப்பட்டது.*

***தலைமை அலுவலகத்திற்கான புதிய ஒரு கட்டிட நிர்மாணம்***

*எமது கூட்டுத்தாபனம் தனது தலைமை அலுவலகத்திற்கு புதிய ஒரு கட்டிடத்தை நிர்மாணித்தது. கட்டடக்கலை சார்ந்த நிர்மாணத் திட்டங்கள், சேவை வரைபுகள் என்பவற்றைத் தயாரித்தல், நிர்மாண மேற்பார்வை முதலிய பொறுப்புகள் இந்தப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டன. குறித்த பணிகள் 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டன. உசாதுணை சார்ந்த பணிக்காக மதிப்பிடப்பட்ட செலவு கருத்திட்டத்தின் ஆகுலெவில் 7% வீதமாகும். இந்தக் கருத்திட்டத்தை 2015 ஆம் ஆண்டு மே மாதம் அளவில் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.*






***நிலையான பரிசோதனைக்கான தேசிய நிலையம் -***
***அணுசக்தி அதிகார சபை***

*இது சுழற்சிச்சாவி அடிப்படையிலான ஒரு கருத்திட்டமாகும். இதில் ஒரு 4 மாடிக் கட்டிடமும் (தொகுதி A), ஒரு தனி மாடி ஆய்வுகூடமும் (தொகுதி B) மற்றும் ஒரு 3 கட்டிடமும் (தொகுதி C) உள்ளடங்கும். A கட்டிடத்தொகுதியின் கட்டடக்கலை, நிர்மாண வடிவமைப்புகள் மற்றும் நிர்மாண மேற்பார்வை என்பவற்றுக்கான எமது உசாதுணைக் கட்டணம் 15 மில்லியன் ரூபாவாகும். 'A' கட்டிடத்தொகுதியின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

- ***தொலைத்தொடர்புகள் ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவு - அம்பாந்தோட்டைக் கட்டிடம்***



*எமது கூட்டுத்தாபனம் இந்தக் கட்டிடத்தின் உசாதுணை தரப்பாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. இது ஒரு ஏழு மாடிக் கட்டிட நிர்மாணமாகும். மொத்தக் கருத்திட்ட ஆகுசெலவு 2, 379 மில்லியன் ரூபாவாகும். கட்டடக்கலை, நிர்மாண வடிவமைப்பு ஆகியன சார்ந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. நிர்மாண மேற்பார்வை நிகழ்கின்றது. 2014 ஆம் ஆண்டிற்கான உசாதுணைக் கட்டணம் 53 மில்லியன் ரூபாவாகும்.*

- ***பெலியத்த பொது வசதிகள் கட்டிடத்தொகுதி***



*இந்தக் கருத்திட்டத்திற்கான கேள்வி ஒப்பந்தம் கூட்டுஆதன அமைப்பில் வழங்கப் பட்டுள்ளது. இது ஒரு நான்கு மாடிக் கட்டிடத்தொகுதியாகும். பெலியத்த பிரதேச சபை இதன் வாடிக்கையாளர் தரப்பாகும். ஆனால் உள்ளூராட்சி அதிகார சபைகள் அமைச்சு இந்தக் கருத்திட்டத்திற்கு நிதியளிக்கும். கருத்திட்ட ஆகுசெலவு 570 மில்லியன் ரூபாவாகும். 2014 ஆம் ஆண்டிற்கான எமது உசாதுணைக் கட்டணம் 15 மில்லியன் ரூபாவாகும். கட்டடக்கலை மற்றும் நிர்மாண வடிவமைப்புப் பணிகள் முற்றிலும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

***வடிகாலமைப்புத் திட்டங்கள்***

***ஊறுபொக்க நகர அபிவிருத்திக் கருத்திட்டம்***

*மேற்குறித்த கருத்திட்டம் 0.3 மில்லியன் ரூபா உசாதுணைக் கட்டணத்திற்காக எமது கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டது. வடிவமைப்புப் பணி நிறைவு செய்யப் பட்டுள்ளது.*

***அக்குரஸ்ஸ நகர அபிவிருத்திக் கருத்திட்டம்***

*வடிவமைப்புப் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.*

***கேகாலை உத்தேச பஸ் டிபோவுக்கான வடிவமைப்பு***

*உசாதுணைக் கட்டணம் 1.08 மில்லியன் ரூபாவாகும். வடிவமைப்புப் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.*

***புறக்கோட்டைக் கடைக் கட்டிடத்தொகுதி (சாமாஸ் கட்டிடம்)***

*மேற்குறித்த கருத்திட்டத்திற்கான உசாதுணைக் கட்டணம் 0.1 மில்லியன் ரூபா ஆகும். நிர்மாண வடிவமைப்புப் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.*

***எஹலியகொட நகர அபிவிருத்திக் கருத்திட்டம்***

*மேற்குறித்த கருத்திட்டம் 0.3 மில்லியன் ரூபா உசாதுணைக் கட்டணத்திற்காக எமது கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டது. வடிவமைப்புப் பணி நிறைவு செய்யப் பட்டுள்ளது. கருத்திட்ட மேற்பார்வை நிகழ்ந்து வருகின்றது.*

***கின்னியா ந.ச. எல்லைகளுக்கான மழை நீர் வடிகாலமைப்புத் திடடம் - கின்னியான ந.ச.***

*மேற்குறித்த கருத்திட்டம் 1.1 மில்லியன் ரூபா உசாதுணைக் கட்டணத்திற்காக எமது கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டது. வடிவமைப்புப் பணி நிறைவு செய்யப் பட்டுள்ளது. சுற்றாடல் முகாமைத்துவ செயல்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.*

***திறைசேரி மானியக் கருத்திட்டங்கள்***

***சதுப்புநிலங்கள் பிரகடனம்***

*எமது கூட்டுத்தாபனம் மாகாண அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தின் கீழ் சதுப்புநிலங்களைப் பிரகடனப்படுத்தி வர்த்தமானியில் பிரசுரிக்கும் பணியை ஆரம்பித்துள்ளது. மேல் மாகாணம், தென் மாகாணம் மற்றும் மத்திய மாகாணம் ஆகிய மாகாணங்கள் ஏற்கெனவே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. ஊவா, வட-மேல், சபரகமுவ மற்றும் வட மத்திய மாகாணம் ஆகிய மாகாணங்களின் சதுப்பு நிலங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இந்த சதுப்புநிலங்களைப் பிரகடனப்படுத்தும் பொருட்டு வர்த்தமானிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், அந்தந்த உரிய சதுப்புநிலங்களின் உள்ளூராட்சி மன்ற அதிகார எல்லைகள் இனங்காணப்பட்டு வருகின்றன. 2014 ஆம் ஆண்டிற்கான திறைசேரி ஒதுக்கீடு 0.5 மில்லியன் ரூபாவாக இருந்தது.*

***களுஒயா ஆற்றுப்படுகைக்கான நீர் மட்டம் மற்றும் நீர் வெளியீட்டு அளவீடுகள்***

*ஒரு தரவுத் தரளத்தைத் தயாரிக்கும் பொருட்டு நீர் மட்டங்களும் நீர் வெளியீட்டு அளவீடுகளும் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. இந்தத் தரவுகள் தற்போதைய வடிகாலமைப்பு ஆய்வுகளின் நிமித்தம் பயன்படுத்தப்படுகின்றன. இந்தத் தரவுகள் செயற்படுத்தப்படவுள்ள மழை நீர் வடிகாலமைப்பு மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் போதும் கூட பயன்படுத்தப்படலாம்.*

***வெரஸ் கங்கை ஆற்றுப்படுகைக்கான நீர் மட்டம் மற்றும் நீர் வெளியீட்டு அளவீடுகள்***

*வெரஸ் கங்கை மழை நீர் வடிகாலமைப்பு சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் நிமித்தம் தயாரிக்கப்படும் மாதிரியை உறுதிசெய்துகொள்வதற்கான ஒரு தரவுத் தளத்தைத் தயாரிக்கும் பொருட்டு நீர் மட்டங்களும் நீர் வெளியீட்டு அளவீடுகளும் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.*

***பல வகை வடிகாலமைப்புத் திட்டங்கள்***

*வோட்டர்ஸ் எஜ் மற்றும் கிம்புலாவெல ஆகிய இடங்களில் திறைசேரி நிதியளித்த பணிகளுக்கான வடிகாலமைப்புத் திட்டங்களை இந்தப் பிரிவு தயாரித்து நிறைவு செய்துள்ளது.*

***வெரஸ் கங்கை கங்கை மழை நீர் வடிகாலமைப்பு சுற்றாடல் மேம்பாட்டுக் கருத் திட்டம்***

*கொழும்பு நகரத்தினதும் அதன் சுற்றுப்புறங்களினதும் துரித நகரமயமாக்கல் பணி எதிர்பாராத விதத்தில் காணிகளை மண்ணிரப்பியெடுக்கும் செயற்பாடுகளுக்கு வழிவகுத்துள்ளது. அண்மையில், மழை பெய்த காலங்களில் பெரும் வெள்ளப் பெருக்குகள் ஏற்பட்டுள்ளன. இந்த வெள்ளப்பெருக்குப் பிரச்சினை வருடாந்தம் உக்கிரமடைந்து வருகின்றது. இ.கா.மீ.அ.கூ., JICA குழு உதவியைக் கொண்டு கொழும்பு மாநகரப் பிராந்தியத்திற்கான பரந்த ஒரு தலைமை வடிகாலமைப்புத் திட்டத்தைத் தயாரித்தது. பொல்கொடவின் ஒரு உப நீரேந்து பரப்பான வெரஸ் கங்கை ஆற்றுப்படுக்கைக்கு வெள்ளப்பெருக்குகளைத் தணிப்பதற்காக அதிகளவு முன்னுரிமை அளிக்க வேண்டும் என இந்த வடிகாலமைப்புத் திட்டம் தொடர்பான ஆய்வில், சாத்தியவள ஆய்வு பற்றிய அதிகமான ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. ஆகையால், மேற்குறித்த கருத் திட்டம் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.*

*வெள்ளப்பெருக்கைத் தணிப்பது இந்தக் கருத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இந்தக் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் மெற்கொள்ளப்படுகின்றன.*

- *ஏற்கெனவேயிருக்கின்ற கால்வாய்த் தொகுதிகளை விசாலமாக்குதல்*
- *கால்வாய்க் கரைப் பகுதிகளைப் பாதுகாத்தல்*
- *வெள்ளப்பெருக்கு நீரைத் தேற்கி வைக்கக்கூடிய பிரதேசங்களைப் பாதுகாத்தல் மற்றும் ஏரிகளை உருவாக்குதல்*
- *ஏற்கெனவேயிருக்கின்ற மதகுகள் மற்றும் பாலங்கள் என்பவற்றை மேலும் மேம்படச்செய்தல்*
- *புதிய கட்டுமானங்களை நிர்மாணித்தல்*

*முழுக் கருத்திட்டமும் பல கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நுகோகொட - ரத்தனப்பிட்டிய கால்வாய், பொரலஸ்கமுவ வட மற்றும் தென் கால்வாய்கள், மகா எல, பொல்கொடக் கால்வாய் என்பவற்றின் மேம்பாடு மற்றும் வெரஸ் கங்கையை அகழந்து துப்புரவு செய்தல் ஆகிய பணிகள் கட்டம் I இல் உள்ளடங்குகின்றன. குறித்த கருத்திட்டத்தை செயற்படுத்துகின்ற முகவர்நிலையம் நிரல் அமைச்சின் செயல்நோக்கில் வருகின்ற இ.கா.மீ.அ.கூ. தாபனமாகும்.*

*கருத்திட்டத்தின் மொத்தப் பெறுமானம் 14,227 ஆயிரம் மில்லியன் ரூபாவாகும். இதற்கு திறைசேரிப் பிணையுத்தரவாதத்துடன் தேசிய சேமிப்பு வங்கியினால் நிதி அளிக்கப்படுகின்றது. காணிகளை சுவீகரிப்பது தொடர்பில் மொத்தமாக ஏற்படும் 1400 மில்லியன் ரூபா ஆகுசெலவும் மொத்தக் கருத்திட்டப் பெறுமானத்தில் அடங்கும். பாதிக்கப்படும் சகல தரப்புகளுக்கும் உதவுவதற்கான விஷேட நஷ்ட - ஈட்டுப் பொதி தயாரிக்கப்பட்டது. குறித்த கருத்திட்டத்தின் செயற்படுத்துகைக்கும் நஷ்டஈட்டுப் பொதிக்கும் அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டது. கருத்திட்டப் பிரதேசத்தின் புவித்-தொழில்நுட்ப அய்வு 2012 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப் பட்டது.*

*தேவையான சகல அங்கீகாரங்களும் பெறப்பட்ட பின்னர் கட்டம் I இன் பணிகள் 2013 ஆம் ஆண்டில் அரம்பிக்கப்பட்டன.*

*நிர்மானங்களுக்குரிய பொருத்தமான ஒப்பந்தத் தரப்புகளைத் தேர்ந்தெடுக்கும் நிமித்தம் தேர்ந்தெடுத்த பொதிகளுக்காக 2013 ஆம் ஆண்டில் போட்டித்தன்மை அடிப்படையிலான கேள்வி விலை மனுக்கள் அழைக்கப்பட்டன. ஆரம்ப கட்டமாக, 3056 மீற்றர் நீளமான நுகோகொட - ரத்தனப்பிட்டிய கால்வாயின் மேம்பாட்டுப் பணிகள் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. இந்தப் பணிகள் நிகழ்ந்து வருகின்றன. 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் இறுதியளவில் குறித்த நீளத்தில் 46% வீதமான பாகம் நிறைவு செய்யப்பட்டது. அஸ்பால்ட்டு வீதி நிர்மாணம், பக்க வடிகாலமைப்புக் கட்டுமாணங்களின் நிர்மாணம் அடங்கலாக தகர தூணிட்டு கால்வாய்க் கரைப் பகுதிகளின் பாதுகாப்பை மேம்படுத்துதல், கேபியன் சுவரை அமைத்து கால்வாய்க் கரைப் பகுதிகளை மேம்படுத்துதல் மற்றும் கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்குதல் முதலிய பணிகள் இதில் அடங்குகின்றன. நுகோகொட ரத்னப்பிட்டிய கால்வாயின் மதகுகள் மற்றும் பாலங்கள் என்பன போன்ற குறுக்குக் கட்டுமாணங்களின் வடிவமைப்புப் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. நிர்மாணம் சார்ந்த பணிகள் 2014 ஆம் ஆண்டில் அரம்பிக்கப்பட்டன.*

***நுகோகொட ரத்தனப்பிட்டிய கால்வாய் (ரத்தனப்பிட்டிய பாலத்தின் கீழருவிப் பகுதி) ஓரமாக 100% வீதம் பணிகள் நிறைவு பெற்ற கேபியன் சவர் கால்வாய்ப் பாதுகாப்பு மற்றும் அஸ்பால்ட்டு இ.ப. வீதி மேம்பாட்டுப் பணிகள்***





***நுகோகொட ரத்தனப்பிட்டிய கால்வாய் (ரத்தனப்பிட்டிய பாலத்திற்கும் மற்றும் ப்லெக்போட் பாலத்திற்கும் இடையிலுள்ள கால்வாய்ப் பகுதி) ஓரமாக 90% வீதம் பணிகள் நிறைவு பெற்ற கேபியன் சவர் கால்வாய்ப் பாதுகாப்பு மற்றும் அஸ்பால்ட்டு இ.ப. வீதி மேம்பாட்டுப் பணிகள்***





***நுகோகொட ரத்தனப்பிட்டிய கால்வாய் (அம்பகஹவத்தப் பாலத்திற்கும் மற்றும் சூரிய மல்வத்தப் பாலத்திற்கும் இடையிலுள்ள கால்வாய்ப் பகுதி) ஓரமாக நிகழ்ந்து வருகின்ற கேபியன் சவர் கால்வாய்ப் பாதுகாப்பு மற்றும் அஸ்பால்ட்டு இ.ப. வீதி மேம்பாட்டுப் பணிகள்***





*வெள்ளப்பெருக்குகள் தணித்தல் தவிர, நீரினால் பரவும் நோய்களைத் தடுத்தல் போன்ற நீர் நிலை முன்னரங்கு செயற்பாடுகள், அத்திடிய பறவைகள் சரணாலய பொழுதுபோக்கு செயற்பாடுகள் மற்றும் ஏனைய மறைமுக நன்மைகள் என்பனவும் எதிர்பார்க்கப்படுகின்றன. பெல்லன்வில சதுப்புநிலப் பாதுகாப்பு, பெல்லன்வில சதுப்புநில நீர் நிலை முன்னரங்கு பொழுதுபோக்கு செயற்பாடுகளை உருவாக்கல் ஆகிய பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. அண்மித்த பகுதியிலுள்ள காணிகள் பெறுமானமும் முழுக் கருத்திட்டமும் நிறைவடைந்த பின்னர் அதிகரித்துள்ளது என சாத்தியவள ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முடிவடையும் வரை மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் சுமார் 1500 மில்லியன் ரூபாவாகும்.*

***துள்ளி நடக்கும் நடபாதைகள் மற்றும் துவிச்சக்கரவண்டி ஓடு பாதைகள் என்பன போன்ற நீர் நிலை முன்னரங்கு பொழுதுபோக்கு செயற்பாடுகளுடன் 100% வீதம் நிறைவு செய்யப்பட்ட அத்திடிய பறவைகள் சரணாலயப் பிரதேச ஏரி மேம்பாடு***





***தற்பொழுது நிகழ்ந்து வரும் சூரியமல் வத்தைப் பிரதேச ஏரி மேம்பாட்டுப் பணிகள்***





*கட்டம் I ஐ மூன்றரை வருட காலப் பகுதியில் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது.*

***சதுப்புநில முகாமைத்துவப் பிரிவு***

*நகரமயமாக்கல் செயற்பாடுகளினால் இயற்கை வளங்களுக்கு எதிராக அதிகரித்து வருகின்ற ஆபத்து இடைவெளியை நிரப்பும் பொருட்டு 2013 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் இந்தக் கூட்டுத்தாபனத்தின் சதுப்புநில முகாமைத்துவப் பிரிவு தாபிக்கப் பட்டது. அபிவிருத்தித் திறமுறைத்திட்டங்கள் முக்கியமாக விழிப்புணர்வு இன்மை காரணமாக, பொதுவாக முக்கியமான உயிரியல் சுற்றாடல் முறைமைகளைப்*



*பேணும் தேவையை அநேகமாக பாராதீனப்படுத்துகின்றன. ஆகையால், இந்தப் பிரிவு சதுப்புநிலங்களைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு வேலையரங்குகளை நடத்தியதனூடாக உயிரியல் சுற்றாடல் மற்றும் சதுப்புநிலங்களின் உயிரியல் பல்லினத்தன்மை ஆகியன தொடர்பான ஆய்வை முன்னெடுத்தது. உயிரியல் பாதுகாப்புக் கண்ணோட்டத்தில், தலவத்துகொடவில் ஒரு முன்னோடிக் கருத்திட்டமாக உயிர் பல்லினத்தன்மை வாய்ந்த ஒரு ஆய்வுப் பூங்காவை நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*அராய்ச்சி நிலையங்கள், அய்வுகூடங்கள், மூலிகைப் பூங்காக்கள், வண்ணத்துப் பூச்சி பூங்காக்கள், நீர் குட்டைகள், இயற்கையான சுவடுகள், பறவைகளைப் பார்வையிடக்கூடிய கோபுரங்கள், வாகனத் தரிப்பிடம் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகள் என்பன இந்த ஆய்வுப் பூங்காவில் அடங்குகின்றன. கருத்திட்டத்தின் ஆரம்ப ரீதியில் மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு 25 மில்லியன் ரூபாவாகும். இந்தக் கருத்திட்டம் திறைசேரியின் நிதி உதவியில் செயற்படுத்தப்படுகின்றது.*

*எனினும் கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட ஆகுசெலவு பல சேர்வுகளினால் 50 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. மேற்குறித்த செயற்பாடுகளின் நிர்மாணப் பணி 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதனை 2015 ஆம் ஆண்டு நடுப் பகுதியளவில் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.*



*2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 34 மில்லியன் ரூபாவாகும். உலக சதுப்புநிலங்கள் தினக் கொண்டாட்டம், உலக சுற்றாடல் தினக் கொண்டாட்டம் முதலிய கொண்டாட்டங்களை முன்னிட்டு குறித்த ஆண்டு காலப் பகுதியில் பல மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்துமீறல்கள் மற்றும் அபிவிருத்திகள் என்பவற்றின் விளைவாக ஊர்வன, பல்லுயிரினங்கள் போன்றவற்றின் மீதான தாக்கம் பற்றிய சில முக்கியமான விரிவுரைகளும் குறித்த ஆண்டு காலப் பகுதியில் நிகழ்த்தப்பட்டன. பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், எமது கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள், எமது கூட்டுத்தாபன பிரிவு அலுவலக ஊழியர்கள் ஆகியோர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துகொண்டனர். இடைத்-தலைமுறைகளுக்காகவும் மற்றும் இடைத்-தலைமுறைகளின் நிலைபெறுதகு சாதனைகளுக்காகவும் பல உயிரினங்களைப் பாதுகாப்பதிலுள்ள செயற்பாடு போன்ற செயற்பாட்டின் முக்கியத்துவத்தை இந்த விரிவுரைகள் வலியுறுத்துவதாக அமைந்தன. குறித்த ஆண்டு காலப் பகுதியில் வெளிநாடுகளிலிருந்து மானிய உதவிகளும் கிடைத்தன.*



***கூட்டொத்துழைப்புடைய கருத்திட்டங்கள்***

***பல்கலைக்கழக மாணவர்களுடன் கூட்டிணைந்த கருத்திட்டங்கள்***

*2014 ஆம் ஆண்டில், சதுப்புநில முகாமைத்துவப் பிரிவு இலங்கையில் காணப்படும் பல்கலைக்கழகங்களுடன் ஒன்றிணைந்து சில கூட்டிணைந்த கருத்திட்டங்களை முன்னெடுத்தது. இதன் முதல் கட்டமாக, இந்தப் பிரிவு கொழும்புப் பல்கலைக்கழக 'சேவை கற்றல் நிகழ்ச்சித்திட்டத்துடன்' இணைந்து அதே பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு புவியியல் விஷேட பட்டதாரி மாணவர்களுக்கான ஒரு மாணவர் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தது.*

***சேவை கற்றல் நிகழ்ச்சித்திட்டம்***

*கல்வி சார்ந்த விடயங்களை கற்கின்ற அதே வேளையில் தன்னார்வ ரீதியில் சமூக சேவையில் ஈடுபடும் வகையில் பட்டதாரி மாணவர்களுக்கு வாய்ப்பை அளிக்கும் நோக்கில் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் பிரிவினால் குறித்த சேவை கற்றல் நிகழ்ச்சித்திட்டம் முதலில் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. எமது கூட்டுத்தாபனம் பல்கலைக்கழகங்களுடன் ஒன்றிணைந்து அவ்வாறான அத்தகைய கூட்டிணைந்த கருத்திட்டங்களை முன்னெடுத்த முதல் தடவை இதுவேயாகும். சதுப்புநில முகாமைத்துவத்துடன் தொடர்புடைய இரண்டு கருத்திட்டங்களை மேற்கொள்வதற்காக இரண்டு மாணவர் குழுக்கள் எமது கூட்டுத் தாபனத்துடன் இணைந்தன. தலவத்துகொடவிலுள்ள பல்லுயிரின ஆய்வுப் பூங்காவில் (BDSPT) ஒரு வண்ணத்துப் பூச்சிப் பூங்காவை நிர்மாணிப்பதற்கான ஒரு பணி ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. கொல்னனாவ சதுப்புநிலப் பகுதி சதுப்புநில முகாமைத்துவக் கருத்திட்டம் மற்றைய குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டது. அனைத்து மாணவர்களும் 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை 05 மாதங்களாக மேற்குறித்த கருத்திட்டத்தில் பணியாற்றி வருகின்றனர்.*

### *தலவத்துகொட பல்லுயிரின ஆய்வுப் பூங்காவிலுள்ள (BDSPT) ஒரு வண்ணத்துப் பூச்சிப் பூங்கா*

*இந்தக் குழுவில் ஒன்பது மாணவர்கள் பணியாற்றுகின்றனர். குறித்த வண்ணத்துப்பூச்சிப் பூங்காவை நிர்மாணிக்கும் பொருட்டு BDSPT இல் உள்ள தீவு 1 இல் ஏறக்குறைய 100 பேர்ச்சஸ் அளவான நிலப் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டது. வண்ணத்துப்பூச்சி பற்றிய கற்கை, உபசாரப் பானித் தாவரங்கள், ஆய்வுப் பூங்காவில் வண்ணத்துப்பூச்சியின் பல்லினத்துவத்தை அதிகரித்தல் ஆகியன பற்றி பார்வையாளர்களுக்கு விளக்கமளிக்கும் வகையிலான மாதிரி வண்ணத்துப்பூச்சிப் பூங்காவொன்றை நிர்மாணிப்பது கருத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். குறித்த கருத்திட்டத்தின் நிமித்தம் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 992,000.00 ரூபாவாகும். ஆரம்பத்தில், குறித்த பூங்கா நிர்மாணிக்கப்பட்ட அதே வேளையில் மாணவர்கள் இந்தப் பூங்காவில் வண்ணத்துப்பூச்சி பற்றிய ஒரு மதிப்பாய்வை நடத்தியதுடன், பல மதிப்பாய்வுகளையும் தொடர்ச்சியாக மேற்கொள்கின்றனர்.*




*உபசார மற்றும் பானித் தாவரங்கள் அடங்கிய பகுதி, வண்ணத்துப்பூச்சிகளின் வாழ்க்கை வட்டம் பற்றிய விளக்கப் பிரிவு, தகவல் பீடங்கள், ஓய்வெடுப்பதற்கான பகுதிகள், நாற்றுமேடை, சதுப்புநிலப் பகுதிகளையும் பாலங்களையும் உடைய ஒரு நீர்க் குட்டை என்பன பிரதானமாக இந்தப் பூங்காவில் அடங்குகின்றன. இங்கு நடுகைபண்ணப்பட்டுள்ள அநேகமான தாவரங்கள் சுதேசிய தாவரங்களாகும். இங்கு ஆக்கிரமித்து வளரும் தாவரங்கள் ஏதும் கிடையாது. தாவரங்கள் நடுகை பண்ணப்படுவதற்கு முன்னர், சதுப்புநிலப் பிரதேசத்தில் வளராத தாவரங்களுக்கு பூங்காவிலுள்ள மண் மிகவும் பொருத்தமுடையதாக இல்லாததால், மாணவர்கள் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி மண்ணை வளப்படுத்துவதற்கான ஒரு விஷேட மண் வளமாக்கும் முறையியலைப் பிரயோகித்தனர்.*

*BDSPT மாணவர்கள் நாளாந்தம் பணியாற்றினார்கள். இவர்கள் ஊழியர்களின் உதவியைக் கொண்டு சகல பணிகளிலும் ஈடுபட்டனர். சுமார் 95% வீதமான பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. மரங்களை நடுதல், நிர்மாணங்களை நிர்மாணித்தல் ஆகிய அநேகமான பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

**ஸ்தலத் திட்டம்**













***கொலன்னாவ சதுப்புநிலக் கருத்திட்டம்***

*கொலன்னாவ சதுப்புநிலப் பகுதி சதுப்புநில அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவக் கருத்திட்டப் பணிகள் இந்தக் கருத்திட்டத்தில் அடங்குகின்றன. கருத்திட்டத்திற்கு மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 200,000.00 ரூபாவாகும். ஆரம்பத்தில் முழுக் கொலன்னாவ சதுப்புநிலப் பிரதேசத்திற்குமென முழுமையான ஒரு கருத்திட்டப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் கால வரையறையினால் அந்தக் கருத் திட்டக் காலப் பகுதியில் ஆரம்பக் கட்டப் பணிகள் மாத்திரம் நிறைவு செய்யப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. குறித்த ஆரம்ப கட்டம் 'சதுப்புநிலக் கற்கை நிலையம்' எனப் பெயரிடப்பட்டிருந்தது. சதுப்புநிலங்கள் பற்றிய ஆய்வுகளுக்கான ஒரு இடத்தை ஏற்பாடுசெய்து வழங்குதல், அதிகளவான பார்வையாளர்களை ஈர்த்தல், கொலன்னாவ சதுப்புநிலப் பகுதியில் குடியேற்றங்களை மீளத்தாபித்தல் என்பன இந்தக் கட்டத்தின் குறிக்கோள்களாக இருந்தன. இயற்கையான சுவடுகள், தகவல் பீடங்கள் அடங்கிய திறந்த கற்கைப் பிரதேசங்கள் என்பன இந்தக் கற்கை நிலையத்தில் பிரதானமாக உள்ளடங்குகின்றன. சதுப்புநிலம் சார் முகாமைத்துவத் திறமுறைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கொலன்னாவ சதுப்புநில கள ஆய்வுகளுக்கு உதவுவது இந்தக் கற்கை நிலையத்தின் பிரதான நோக்கமாகும். கருத்திட்டக் காலப் பகுதியில் இது வரை, இயற்கையான சுவடுகள், 50 நபர்கள் அமரக்கூடிய வசதிகளுடைய திறந்த கற்கைப் பிரதேசம், ஆசனங்களுடன் கூடிய ஒய்வெடுப்பதற்கான பகுதிகள், பாலங்கள் என்பன ஏற்கெனவே நிர்மாணிக்கப் பட்டுள்ளன. வாழ்விடங்களை மீளத்தாபிக்கும் பொருட்டு கால்வாய்க் கரைப் பகுதி ஓரமாக நீர்க் குட்டை ஆப்பள் மரங்கள் துண்டு ரீதியாக அகற்றப்பட்டன. சுதேசிய சதுப்புநில தாவரங்கள் பிரதியீட்டுத் தாவர இனங்களாக அறிமுகப்படுத்தப்பட்டன. சுமார் 95% வீதமான கருத்திட்டப் பணிகள் எற்கெனவே 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் முடிவடைவதற்கு முன்னர் நிறைவு செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் நிறைவு செய்யப்படவுள்ளன.*



***திறந்த கற்கைப் பிரதேசம்***



***நீர்க் குட்டை ஆப்பள் மரங்கள் அகற்றல்***

 

*இயற்கையான சுவடுகளை நிர்மாணித்தல்*

***பல்கலைக்கழக மாணவர் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டம்***

*எமது கூட்டுத்தாபனத்தின் சதுப்புநில முகாமைத்துவப் பிரிவு 2014 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஒரு தொழில்வாய்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தையும் ஆரம்பித்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பத்தொன்பது புவியியல் பட்டதாரி மாணவர்கள் வாரத்திற்கு மூன்று நாட்கள் என்ற அடிப்படையில் 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை ஐந்து மாத காலங்களாக இந்தப் பிரிவுக்காகப் பணியாற்றி வருகின்றனர். சில மாணவர்கள் தலைமை அலுவலகத்தில் பணியாற்றுகின்றனர். மேலும் சில மாணவர்கள் தலவத்துகொட உயிரியல் பல்லின ஆய்வுப் பூங்காவில் (BDSPT) பணியாற்றுகின்றனர். இவர்கள் பிரதானமாக BDSPT இல் காணப்படும் வரைபடம் தயாரித்தல் மற்றும் களப் பணி ஆகிய அலுவலகப் பணிகளில் (காணி அனுமதி, சட்டவிரோதமாக காணிகளை மண்ணிரப்பியெடுத்தல் சம்பந்தமான கோவைகள்).*

*பேரவெவ ஏரியின் நீரின் தரம் குறைவதற்கான ஒரு தீர்வைக் கண்டுகொள்ளும் நிமித்தம் குறித்த ஆண்டு காலப் பகுதியில் இந்தப் பிரிவினால் மற்றுமொரு முக்கிய பணி நிறைவேற்றப்பட்டது. விடயம் தொடாரபான உள்நாட்டு மற்றும் சர்வதேச நிபுணர்களிடமிருந்து பல பிரேரணைகள் கிடைத்தன. பிரதானமாக பாசி அதிகளவு அடர்த்தியாகப் படர்ந்திருப்பது நீர் மாசடைவதற்கான காரணியாக இனங்காணப் பட்டுள்ளது. அகழ்ந்து துப்புரவாக்கல், பயனுள்ள நுண்ணங்கிகளை சேர்த்தல், பாசி கொல்லிகளைப் பயன்படுத்துதல், காற்றோட்ட வசதிகளை செய்து வழங்குதல் முதலிய அம்சங்கள் ஒரு ஆராய்ச்சி அளவில் மேற்கொள்ளப்பட்டன. ஒரு மிதக்கும் சதுப்புநில வசதியை நிர்மாணிக்கும் அம்சம் முக்கியமான பிரேரணைகளில் ஒரு பிரேரணையாக விளங்கியது. இவை இன்னும் ஆய்வு கட்டத்திலுள்ளன.*

***எல்லையை மீளத்திறத்தலும் சட்டவிரோதமான நிர்மாணங்களை அகற்றலும்***

*2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட எல்லைகளை மீள்திறக்கும் நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியான இடம்பெற்று வந்தன. இந்த நடவடிக்கை 2015 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்வுள்ளது. கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 60 மில்லியன் ரூபாவாகும். 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 25 மில்லியன் ரூபாவாகும்.*

***சதுப்புநில முகாமைத்துவத் திறமுறைத்திட்டத்தைத் தயாரித்தல்***

*பாதுகாப்பும் பராமரிப்பும் சார்ந்த ஏதாவது ஒரு கருத்திற்குச் செல்ல முன்னர், உயிர் பல்லினத்தைப் பாதுகாப்பதில் நிலையான ஒரு முகாமைத்துவத் திறமுறைத்திட்டம் அவசியம் என்ற அம்சம் இனங்காணப்பட்டுள்ளது. ஆகையால், ஒரு சதுப்புநில முகாமைத்துவத் திறமுறைத்திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால், குறித்த விடயத்தில் கிடைக்கக்கூடிய அறிவு அரிதாகவிருந்தது. எனவே, குறித்த பணியை வெளித்தரப்புகளுக்கு ஒப்படைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. குறித்த கருத்திட்டம் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற் படுத்தப்படும் கொழும்புப் பெரும்பாக நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கருத் திட்ட முகாமைத்துவப் பிரிவினால் (PMU) வழங்கப்பட்டது. அக்கறை விடய வெளிப்படுத்துகைகள் (EOI) ஆரம்பத்தில் 2014 ஆம் ஆண்டு அழைக்கப்பட்டன. ஒரு தொழில்நுட்ப, நிதி மதிப்பீட்டின் மூலம் 'SIGNES' தேர்ந்தெடுக்கப்பட்டது. கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 229,855.00 அ.டொ. ஆகும். ஒப்பந்தத்தை வழங்கும் நடபடிமுறை தொடர்கின்றது.*

***காணிகள் துப்புரவாக்கல் பணி***

*இன்று அரைவாசிக்கு அதிகமான மக்கள் சரியான வடிகாலமைப்பு முறைமை இன்றி அழியக்கூடிய அபிவிருத்தி அடைந்து வருகின்ற நகரப் பிரதேசங்களில் வசிக்கின்றனர். இந்த நிலைமை குறிப்பாக தாழ்நிலப் பிரதேசங்களில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு ஏதுவாக அமைகின்றது. ஆகையால் பொறியியல் சார்ந்த நீரியல் கலைக்கு இணங்க சரியான வடிகாலமைப்பு முறைமையைப் பெற்றுக்கொடுப்பது மிக முக்கியமானதாகும்.*

*சதுப்புநில முகாமைத்துவப் பிரிவு ஒரு திட்டமிடல் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வடிகாலமைப்பு வசதிகளின் செயற்படுத்துகைக்கு அமைய தாழ்நில அபிவிருத்தி நிமித்தம் அங்கீகாரங்களை வழங்கியும், வடிகாலமைப்பு சார் பிரேரணைகளையும் முன்வைத்தும் இந்தப் பணியை மேற்கொண்டு வருகின்றது. இந்தப் பிரிவு காணி துப்புரவாக்கல் பணிக்காக 2014 ஆம் ஆண்டில் 6.7 மில்லியன் ரூபா தொகையைப் பெற்றுக்கொண்டது.*

*ஒரு கோவையைத் திறப்பதற்கும் மற்றும் காணி அபிவிருத்தியின் நிமித்தம் எமது கூட்டுத்தாபனத்தின் விதிமுறைகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைவாக அந்த கோவையைத் தொடர்ந்து பேணுவதற்கும் விருப்பத்தைத் தெரிவிக்கின்ற கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும் ஒரு கோரல் கடிதம் சமர்ப்பிக்கப்படுமானால் வயல் காணிகளின் அபிவிருத்தி கருத்திற் கொள்ளப்படலாம். வயல் காணி அல்லாத காணிகளின் அபிவிருத்தி நிமித்தம் உரிய விண்ணப்பதாரர் (தனியார் சொத்து) கோவைகளைத் திறந்துகொள்ளலாம். திட்டமிடல் குழுவின் தீர்மானம் அந்தந்த உரிய விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். திட்டமிடல் குழு அங்கீகாரங்களை வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் தேவையான அங்கீகாரமும் இணக்கமும் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

***விஷேட கருத்திட்டங்கள் பிரிவு***

***1. கொழும்புப் பெரும்பாக நகர அபிவிருத்திக் கருத்திட்டம்***

*நிதியிடும் முகவர்நிலையம்: உலக வங்கி*

*2010 ஆம் ஆண்டில் கடும் வெள்ளப்பெருக்குகள் ஏற்பட்டன. இதன் காரணமாக கொழும்பின் முக்கியமான வர்த்தக மற்றும் நிருவாக நிலையங்கள் நீரில் மூழ்கின. இதன் விளைவாக அதிகளவான பொருளாதார இழப்புகள் ஏற்பட்டன. இந்த நிலைமை இயற்கை அழிவுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் நகரத்தின் ஆற்றலை அதிகரிப்பதற்கான தேவையை சுட்டிக்காட்டியது. வடிகாலமைப்பு முறைமையின் கொள்ளளவு போதாமை, வடிகாலமைப்பு முறைமைகளின் பராமரிப்பின்மை, வெள்ளப்பெருக்குகளைத் தடுக்கும் ஆற்றல் வாய்ந்த பிரதேசங்களில் சட்டவிரோத முறையில் அத்துமீறிக் குடியேறுதல், கைத்தொழில் ரீதியான மாசடைவு, அடிக்கடி அதி-தீவிர புயல்காற்றுகளுக்கு வழிவகுக்கக்கூடிய துரிதமாக மாறி வருகின்ற காலநிலை மாதிரிகளுடன் இணைந்த அம்சங்கள் அனைத்தும் நகரத்தில் வெள்ளப் பெருக்கு ஆபத்துக்களை அதிகரிக்கக்கூடிய காரணிகளாகக் காணப்படுகின்றன. இத்தகைய பிரச்சினைகள் சமாளிக்கப்படவில்லை என்றால் கொழும்பு நகரத்தை முக்கியமான வெற்றிகரமான ஒரு மாநகரப் பகுதியாக மாற்ற முடியாது.*

*கொழும்புப் பெரும்பாக நகர அபிவிருத்திக் கருத்திட்டம் கொழும்பு நீரேந்துபரப்புப் பிரதேசங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்குகளைக் குறைப்பதற்கும், கொழும்பு, தெஹிவளை-கல்கிஸ்ஸ, ஸ்ரீ ஜயவர்த்தனபுரக் கோட்டே ஆகிய நான்கு உள்ளூராட்சி அதிகாரப் பிரிவுகளின் வெள்ளப்பெருக்குத் தணிப்பு ஆற்றலை வலுப்படுத்துவதற்கும், தேர்ந்தெடுத்த முக்கியமான தொடர் கருத்திட்டங்களின் ஊடாக உள்நாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள் என்பவற்றுக்கு முன்னுரிமையளித்து அத்தகைய வசதிகளையும் மற்றும் சேவைகளையும் பேணிப்*

*பராமரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அதே நேரம் புனர்நிர்மாணிப்பதற்கும் எதிர் பார்க்கின்றது. இந்தக் கருத்திட்டம் முக்கியமாக பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவினால் நிருவகிக்கப் படுகின்றது.*

*இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் (இ.கா.மீ.அ.கூ.) கீழ் செயற்படுத்தப்படுகின்ற முக்கியமான ஆக்கக்கூறு யாதெனில் வெள்ளப்பெருக்கு மற்றும் வடிகாலமைப்பு முகாமைத்துவமாகும். இது கொழும்புப் பெரும்பாகத்திலுள்ள வடிகாலமைப்புத் தொகுதியை மேம்படுத்த இனங்காணப் பட்டுள்ள முன்னுரிமை சார்ந்த வெள்ளப்பெருக்குகள் மற்றும் வடிகாலமைப்பு முறைமையின் புனர்நிர்மாணத்திற்கும் மேம்பாட்டிற்கும் உதவும். இந்தக் கருத் திட்டம் பிரதானமாக ஏற்கெனவேயிருக்கின்ற வடிகாலமைப்புத் தொகுதியின் நீர் வெளிச்செல்லக்கூடிய ஆற்றல்களை அதிகரித்தல், புதிய நீர் திருப்புகைக் கால்வாய் மார்க்கங்களையும் நீரிறைக்கும் இயந்திர வசதிகளுடைய நிலையங்களையும் அறிமுகப்படுத்துதல் போன்ற அம்சங்களில் முக்கிய கவனத்தைச் செலுத்தும்.*

*நீரைத் தேக்கி வைக்கக்கூடிய பிரதேசங்கள்/சதுப்புநிலப் பகுதிகள், கால்வாய் முறைமைகளின் இயக்கப் பராமரிப்பு விடயங்கள் என்பவற்றை முகாமை செய்து கண்காணித்தல், முகவர்நிலையங்களுக்கு இடையில் நிலவும் ஒருங்கிணைப்பைக் கண்காணித்து அதனை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம், வடிகாலமைப்புத் தொகுதிகள் நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடிய தன்மையை உறுதிசெய்து கொள்வதற்கு ஒரு முக்கிய ஆக்கக்கூறாக விளங்குகின்ற ஒன்றிணைந்த வெள்ளப் பெருக்கு முகாமை அபிவிருத்திற்கும் குறித்த கருத்திட்டம் உதவியாக அமையும்.*

***செயற்படுத்தப்பட்டு வருகின்ற கருத்திட்டங்களின் முன்னேற்றம் பற்றிய விபரம்***

- ***தெஹிவளைக் கால்வாயின் கால்வாய்க் கரைப் பகுதிப் பாதுகாப்பு நிர்மாணப் பணிகள்***

*ஒப்பந்த இலக்கம்:- MCUDP/SLLRDC/W/01*

*ஒப்பந்தத் தரப்பு:- ஸ்குயர் மெக் என்ஜினியரிங் (ப்ரைவட்) லிமிற்றட் கம்பனி*

*ஒப்பந்தப் பெறுமானம்:- ரூ.193, 846,838.92*

*ஆரம்பத் திகதி:- 2013.05.20*

*கருத்திட்டத்தின் காலம்:- 12 மாதங்கள்*

*வழங்கப்பட்ட நீடிப்பு காலம்:- 6 வாரங்கள்*

*தெஹிவளைக் கால்வாய் கொழும்பு ஆற்றுப்படுகைப் பிரதேசத்திலிருந்து மழை நீரை நேரடியாக கடலுக்குக் கடத்துகின்ற முக்கிய மழை நீர் வடிகாலமைப்புக் கால்வாய் முறைமைகளில் ஒரு கால்வாயாகும். கால்வாயின் கரைப் பகுதிகள் இரண்டும் கேபியன் சுவர்களினால் பாதுகாக்கப்பட்டுள்ளன. கால்வாய் தொடங்கும் இடத்திலிருந்து காலி வீதிப் பாலம் வரை உருக்குத் தகட்டு தூண்களையுடைய பாதுகாப்பு சுவர்களும் அமைக்கப்பட்டுள்ளன. காலி வீதியிலுள்ள பாலத்திலிருந்து புகையிரத பாதை வரை நீண்டுசெல்கின்ற குறித்த கால்வாயானது மண்ணாலான பாதுகாப்பற்ற கால்வாயாகக் காணப்படுகின்றது. கால்வாய்ப் படுக்கைப் பகுதியில் பல இடங்களிலுள்ள கற்பாறை மீது வளர்ந்த்திருக்கின்ற காடுகள், புகையிரதப் பாலத்திற்கு நீர்வழிந்தோடுவதைத் தடுப்பதற்கான மேலருவிப் பகுதி பாதுகாப்பு சுவர்களின்மை என்பன இந்த மழை நீர் வடிகாலமைப்பு நீர் வெளிச்செல்லும் கால்வாயின் கொள்ளளவுக்கு தடையாக அமைவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.*

*குறித்த கால்வாயின் மொத்த நீளம் 3.8 கி.மீ. ஆகும். நீர் சங்கமிக்கும் பொல்கொட கல்வாய் வரையான அகலம் ஏறக்குறைய 10 மீற்றர்களாகும். அதன் பின்னர் 24 மீற்றர்கள் வரைக்கும் மற்றும் அதற்கு அதிகமாகவும் வேறுபடுகின்றது. காலி வீதிப் பாலத்திற்கும் புகையிரதப் பாலத்திற்கும் இடையிலுள்ள தூரம் முறையே 17 மற்றும் 15 மீற்றர்களாகும்.*

***கருத்திட்டத்தின் குறிக்கோள்கள்***

*i. கால்வாய்க் கரைப் பகுதிகளை உறுதியாகத் திட்டப்படுத்தி, அதன் மூலம்:*

- *கால்வாயை நெறிப்படுத்தி கால்வாயின் நீர் காவிச்செல்லும் கொள்ளளவை அதிகரித்தல்*
- *கால்வாய்க் கரைப் பகுதிகளை மண்ணரிப்பிலிருந்து பாதுகாத்தல்*
- *கால்வாய்க் கரைப் பகுதிகளில் அத்துமீறிக் குடியேறுவதைத் தடுத்தல், இரண்டு பக்கங்களிலும் ஆகக்குறைந்தது 3.5 மீற்றர் அகலமான இயக்கப் பராமரிப்பு வீதிகளை அமைப்பதன் மூலம் பராமரிப்பை இலகுபடுத்தல்*

*ii. கால்வாய்ப் படுக்கைப் பிரதேசத்திலுள்ள குறித்த கற்பாறையில் வளர்ந்திருக்கின்ற காடுகளை அகற்றி கால்வாய்ப் படுக்கை மட்டத்தை 1.0 m MSL (திட்டமிட்டபடி) என்ற அளவுக்கு உயர்த்துதல்.*

*2014 திசம்பர் 31 ஆம் திகதி வரையான நிதி முன்னேற்றம்:- ரூ. 128,230,214.30*

*2014 திசம்பர் 31 ஆம் திகதி வரையான பௌதீக முன்னேற்றம்:- 90%*

*கருத்திட்டத்தை நிறைவுசெய்ய எதிர்பார்க்கும் திகதி:- 2015 சனவரி 31*






- ***அளுத்மாவத்தை மதகு, மோதரை பெட்டி வடிவ வடிகாலமைப்பு வசதி, மோதரை சுருங்கவழி, சாக்கடை வாயில்கள் நிர்மாணம், மோதரைக் கடலுக்கு நீர் வெளிச்செல் பகுதிக் கால்வாய்க் கரை மேம்பாடுகள், பிரதான கால்வாய்களினது கால்வாய்க் கரைப் பகுதிகள் பாதுகாப்பு***

*ஒப்பந்தம் : MCUDP/SLLRDC/W/02*

*ஒப்பந்தத் தரப்பு: எட்வெர்ட் என்ட் க்றிஸ்ட்டி*

*ஒப்பந்தப் பெறுமானம் : ரூ. 409,971,109.35*

*ஆரம்பத் திகதி: 2012.11.27*

*கருத்திட்டத்தின் காலம்: 18 மாதங்கள்*

*பிரதான கால்வாய் முறைமை கொழும்புப் பெரும்பாக வெள்ளப்பெருக்குக் கட்டுப் பாட்டு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் கட்டம் I இன் கீழ் 1990 ஆம் ஆண்டுகளின் ஆரம்பப் பகுதியில் புனர்நிர்மாணிக்கப்பட்டது. ஆறு வீதிக் குறுக்குக் கட்டுமாணங்களுடைய திறந்த கால்வாய், நிலகீழ் ஆர்சி பெட்டி வடிவ வடிகாலமைப்பு வசதி, மோதரை சுரங்கவழி மற்றும் கடலுக்கு நீர்வெளிச் செல்லும் வசதி என்பன பிரதான கால்வாயில் அடங்கும். குறித்த கால்வாயின் நீளம் 1.7 கி.மீ. ஆகும். அடிப்பாகத்தின் சராசரி அகலம் 8 மீற்றராகும். கால்வாயின் அடிமட்டத்தின் அளவு -1.0 மீ MSL என்ற அளவாகும். கால்வாய்க் கரையின் மேற்பகுதியின் அளவு +2.0 மீ MSL என்ற அளவாகும்.*

***கருத்திட்டத்தின் குறிக்கோள்கள்***

*பின்வருவனவற்றை மேற்கொள்வதன் மூலம்:*

- *மோதரை மாவத்தை வீதிப் பாலத்தை இடித்துவிட்டு மீள்நிர்மாணித்தல்*
- *மோதரை சுரங்கவழி நீர்வெளிச்செல் பகுதியையும் மற்றும் நீர் உட்செல் பகுதியையும் நெறிப்படுத்தி செவ்வைப்படுத்துதல்*
- *பிரதான வடிகாலமைப்பின் பாதுகாப்பற்ற கரைப் பகுதிக்கு கேபியன் சுவர்களை நிர்மாணித்தல்*

*மோதரை சரங்வழி நீர்வெளிச்செல் பகுதியின் நீர் காவிக்கொள்ளளவை ஆகக்கூடிய அளவுக்கு அதிகரித்து மீள்தாபித்தல்.*

*2014 திசம்பர் 31 ஆம் திகதி வரையான நிதி முன்னேற்றம்: ரூ.313,798,246.20*

*பௌதீக முன்னேற்றம்:100%*

*கருத்திட்டம் நிறைவுபெறும் திகதி: 2014 ஒற்றோபர் 31*













- ***புனித செபெஸ்தியன் தென் கால்வாயின் கரைப் பகுதிப் பாகாப்பு நிர்மாணம்***

*ஒப்பந்தம் இலக்கம்: MCUDP/SLLRDC/W/03A*
*ஒப்பந்தத் தரப்பு: எக்செஸ் இன்ஜினியரிங் பிஎல்சி*
*ஒப்பந்தப் பெறுமானம்: ரூ. 259,750,715.74*
*ஆரம்பத் திகதி: 2014.10.27*
*கருத்திட்டத்தின் காலம்: 18 மாதங்கள்*

*புனித செபெஸ்தியன் தென் கால்வாய் கொழும்புப் பெரும்பாக வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாட்டு மற்றும் மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் I ஆம் கட்டத்தின் கீழ் புனர்நிர்மாணிக்கப்பட்டது. திறந்த கால்வாய், ஏழு எண்ணிக்கையான குறுக்குக் கட்டுமாணங்கள் மற்றும் நீரிறைக்கும் வசதிகளுடைய நிலையத்துடன் கூடிய தென் பூட்டு மதகு என்பன இதில் அடங்குகின்றன.*

*குறித்த கால்வாயின் நீளம் 2.0 கி.மீ. ஆகும். அடிப்பாகத்தின் அகலம் 10 மீற்றர் முதல் 22 மீற்றர் உயரம் வரை வித்தியாசப்படுகின்றது.*

***கருத்திட்டத்தின் குறிக்கோள்கள்***

*கால்வாய்க் கரைப் பகுதிகளை உறுதியாகத் திட்டமிட்டு அதன் மூலம்:*

- *கால்வாயை நெறிப்படுத்தி கால்வாயின் நீர் காவிச்செல்லும் கொள்ளளவை அதிகரித்தல்*
- *கால்வாய்க் கரைப் பகுதிகளை மண்ணரிப்பிலிருந்து பாதுகாத்தல்*
- *கால்வாய்ப் படுக்கை மட்டத்தை -1.0 m MSL என்ற (திட்டமிடப்பட்டவாறு) என்ற அளவுக்கு உயர்த்துதல்*

*2014 திசம்பர் 31 ஆம் திகதி வரையான நிதி முன்னேற்றம்: ரூ. 31,790,636.72*
*பௌதீக முன்னேற்றம்: 1.16%*
*கருத்திட்டத்தை நிறைவுசெய்ய எதிர்பார்க்கும் திகதி: 2016 எப்ரல் 18*









***MCUDP திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படவுள்ள ஏனை உப கருத்திட்டங்கள்***

- *புனித செபெஸ்தியன் தென் பூட்டு மதகுகளினதும் மற்றும் நீரிறைக்கும் நிலையத்தினதும் வடிவமைப்பும் கட்டுமானமும்*
- *மோதரை புதிய சரங்கவழியின் வடிவமைப்பும் கட்டுமானமும்*
- *டொரிங்டன் கால்வாயின் வடிவமைப்பும் கட்டுமானமும்*
- *கொலன்னாவ கால்வாய்ப் பிரிவின் வடிவமைப்பும் கட்டுமானமும்*
- *மாதிவெல கிழக்கு நீர்திருப்புகைத் திட்டத்தின் மேம்பாடுகள் - கட்டம் I*
- *மாதிவெல கிழக்கு நீர்திருப்புகைத் திட்டத்தின் மேம்பாடுகள் - கட்டம் II*
- *புனித செபெஸ்தியன் புதிய தென் நீர்திருப்புகைக் கட்டுமான நிர்மாணம்*
- *புனித செபெஸ்தியன் வட கால்வாய் புனர்நிர்மாணம்*
- *வெல்லவத்தைக் கால்வாயின் புனர்நிர்மாணமும் காலி வீதிப் பாலத்திற்கான போக்குவரத்து மேம்பாடுகளும்*
- *தெமட்டகொடக் கால்வாயின் புனர்நிர்மாணம்*
- *ஒன்றிணைந்த வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாட்டு முகாமைத்துவ முறைமையைத் தாபித்தல்*
- *படகு சேவை, படகுகளை நிறுத்தக்கூடிய இடவசதிகள், நடை பாலங்கள் முதலியன உள்ளிட்ட வடிகாலமைப்பு முறைமை முகாமைத்துவ மேம்பாடுகள்*

*மேற்குறித்த உப கருத்திட்டங்களுக்கான எண்ணக்கரு வடிவமைப்பு அறிக்கைகள் தயாரித்தல், உத்தேச தலையீட்டு நடவடிக்கைகள் பற்றிய விரிவான வடிவமைப்புத் திட்டங்களை மேற்கொள்ளல், கேள்வி விலை ஆவண வரைவுகளைத் தயாரித்தல், ஆகுசெலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல், கேள்வி விலை மனுக்களை அழைத்தல் என்பன போன்ற விடயங்கள் நிகழ்ந்து வருகின்றன.*

## 2. கொலன்னாவப் பிரதேச செயலகப் பிரிவுக்கான வடிகாலமைப்பு பற்றிய ஆய்வு

*நிதியிடும் முகவர்நிலையம்: அரசாங்கத் திறைசேரி*

*கொலன்னாவப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அதிகமான பாகங்கள் களணி ஆற்றின் வெள்ளப்பெருக்குத் திடலில் அமைந்துள்ளன. இந்தப் பிரதேசத்தின் சில பகுதி வெள்ளப்பெருக்குப் பாதுகாப்பு அணைக்கட்டினால் (ஹாவாட் அணைக்கட்டு என்றழைக்கப்படுகின்ற) பாதுகாக்கப்பட்டுள்ளது. களணி ஆற்றிலிருந்து உருவாகும் வெள்ளப்பெருக்கிலிருந்து கொழும்பு நகரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு இந்த அணைக்கட்டு 1935 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டது. களணி ஆறு வரையான வெள்ளப்பெருக்கு அணையின் வெள்ளப்பெருக்கு மேலருவிப் பிரதேசத்திலிருந்து ஒரு பகுதி (பாதுகாப்பற்ற பகுதி) வடிகாலமைப்பு ஆய்வுக்காகக் கருத்திற் கொள்ளப் படும்.*

**கருத்திட்டத்தின் குறிக்கோள்கள்**

*கொலன்னாவ நீரேந்துபரப்பில் அடிக்கடி நிகழுகின்ற வெள்ளப்பெருக்குகளைக் குறைப்பதற்கும், உட்கட்டமைப்பு வசதிகளையும் சேவைகளையும் நிருவகித்தல், மேம்படச்செய்தல், புனர்நிர்மாணித்தல் ஆகியவற்றின் நிமித்தம் கொலன்னாவ நகரப் பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு உதவுவதற்குமான ஒரு விஷேட அடைவு கால வடிகாலமைப்பு பற்றிய ஒரு ஆய்வை மேற்கொள்வது இதன் குறிக்கோளாகும்.*

*கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு: ரூ.20 மில்லியன்*

*கருத்திட்டத்தின் காலம்: 18 மாதங்கள்*

*2014 திசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி முன்னேற்றம்: ரூ.11 மில்லியன்*

*2014 ஆம் ஆண்டிற்கான பௌதீக முன்னேற்றம்:55%*




***நிர்மாணப் பிரிவு***

1. ***நகர மீளுருவாக்கல் கருத்திட்டம் - கொழும்பு 6 மயுறா இடத்தில் கொழும்பு நகர 120 வீட்டு அலகுகள் நிர்மாணம் - நகர அபிவிருத்தி அதிகார சபை நிதிடும் கருத்திட்டம்***
   *இந்தக் கருத்திட்டம் கொழும்பு மாநகர மீளுவாக்கல் கருத்திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் செயற்படுத்தப்பட்டது. எமது கூட்டுத்தாபனம் இதற்கான நிர்மாணப் பணியைப் பொறுப்பேற்றுக்கொண்டது.*



***பக்க உயர்வுத் தோற்றம்***

*குறித்த கருத்திட்டம் 385 மில்லியன் ரூபா மொத்த ஆகுசெலவில் 120 வீடுகளுடைய 12 மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணியில் சம்பந்தப்படுகின்றது. ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு படுக்கை அறைகள், சமையலறை, அமரும் அறை, குளியலறை மற்றும் விராந்தை என்பன உள்ளடங்கியிருக்கும். கட்டிடத்தின் மொத்த நிலப்பரப்பு 84,000 சதுர அடியாகும்.*



***ஒரு வீட்டின் கூறுகள்***







***வெளிப்புற நிலக்காட்சிப்படுத்தல் பணி***





*நிர்மாணப் பணி (கட்டம் I) மற்றும் மினுக்கல் வேலை (கட்டம் II) ஆகிய பணிகள் 2014 ஆம் ஆண்டு மே மாதம் இறுதியளவில் நிறைவு செய்யப்பட்டன.*

*2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 199 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 448 மில்லியன் ரூபாவாகும்.*

### 2. *நகர மீளுவாக்கல் கருத்திட்டம் - கொழும்பு நரகம் - கொலன்னாவ சலமுல்ல 1008 வீட்டு அலகுகளின் நிர்மாணம் - நகர அபிவிருத்தி அதிகார சபை நிதியிடும் கருத் திட்டம்*

*இந்தக் கருத்திட்டம் கொழும்பு நகர மீளவாக்கல் திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் செயற்படுத்தப்பட்டது. எமது கூட்டுத்தாபனம் இந்தக் கருத் திட்டத்திற்கான வடிவமைப்பு நிர்மாண ஒப்பந்தத் தரப்பாக விளங்கியது. A, B, C ஆகிய மூன்று கட்டிடங்களின் நிர்மாணம் இந்தக் கருத்திட்டத்தில் அடங்குகின்றது. இந்த மூன்று கட்டிடங்களினதும் ஒவ்வொரு கட்டிடமும் பன்னிரெண்டு மாடிகள் உடைய கட்டிடங்களாகும். கட்டிடத்தொகுதி A இல் பதினெட்டு வீடுகளையும், கட்டிடத்தொகுதி B, C ஆகியன ஒவ்வொரு மாடியிலும் வீடுகளையும் கொண்டு காணப்படும்.*

*ஆதாரத் தூணிடும் வேலை அடங்கலாக மதிப்பிடப்பட்ட மொத்தக் கருத்திட்ட ஆகுசெலவு 2726.56 மில்லியன் ரூபாவாகும்.*





*ஒவ்வொரு வீடும் இரண்டு படுக்கை அறைகளையும், வசிக்கும் அறையையும், சமையல் அறையையும், பொருட்கள் அறையையும், கழிவறையையும் மற்றும் விராந்தையையும் கொண்டு காணப்படும்.*









***ஒரு வீட்டில் அடங்கும் கூறுகள்***







***கூரையின் மேற்பகுதி***

*குறித்த கருத்திட்டம் 2011 ஆம் ஆண்டு எப்ரல் மாதத்தில் அரம்பிக்கப்பட்டது. கட்டிடத் தொகுதி A, கட்டிடத்தொகுதி B, C ஆகியவற்றின் மேல்கட்டுமானப் பணிகள் 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் நிறைவு செய்யப்பட்டன. கட்டிடத் தொகுதி A இற்காக மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 563.26 மில்லியன் ரூபாவாகும். கட்டிடத்தொகுதி B, C ஆகியவற்றுக்காக மேற்கொள்ளப் பட்ட பணியின் பெறுமானம் 394.63 மில்லியன் ரூபாவாகும்.*

***B, C ஆகிய கட்டிடத்தொகுதிகளின் முகப்புத் தோற்றம்***




### ***3. வெதமுல்ல களணி அணுசக்தி அதிகார சபை நிலையான பரிசோதனைக்கான உத்தேச தேசிய நிலையம் - கட்டிடத்தொகுதி 'A' - அணுசக்தி அதிகார சபை நிதியிடும் கருத்திட்டம்.***

*இந்தக் கருத்திட்டத்தில் அணுசக்தி அதிகார சபையின் நிலையான பரிசோதனை தேசிய நிலைய (NCNDT) மூன்று மாடிக் கட்டிட நிர்மாணப் பணி அடங்குகின்றது.*

*இ.கா.மீ.அ. கூ. வடிவமைப்பு நிர்மாண ஒப்பந்தத் தரப்பாக விளங்கியது. கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 309 மில்லியன் ரூபாவாகும். குறித்த கருத்திட்டம் 2012 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பணி 2014 ஆம் ஆண்டு ஒற்போபர் மாதத்தில் நிறைவுசெய்யப்பட்டது.*






*2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 250 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 416 மில்லியன் ரூபாவாகும்.*

**4. அம்பாந்தோட்டை அபிவிருத்தி நிதியத்தினால் நிதியிடப்படும் அம்பாந்தோட்டை சூரியவெவ மீள்குடியேற்ற வீடமைப்புக் கருத்திட்டத்திற்கான உத்தேச 2 மாடி வீட்டுக் கட்டிடத்தொகுதி நிர்மாணம்**

*இந்தக் கருத்திட்டத்தில் 15 வீடுகளின் நிர்மாணப் பணி உள்ளடங்குகின்றது. ஒவ்வொரு வீடும் வசித்தல் அறை, குடும்ப அறை, படுக்கை அறைகள் (03), ஒரு வாகனக, கூரை மச்சு, சமையலறை மற்றும் குளியல் அறைகள் (02) என்பவற்றைக் கொண்டிருக்கும்.*





*இந்தக் கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகை 117.69 மில்லியன் ரூபாவாகும். இந்தக் கருத்திட்டம் 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப் பட்டது. இது 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் நிறைவு செய்யப்பட்டது.*











*2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 28 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 102 மில்லியன் ரூபாவாகும்.*

**5. நகர அபிவிருத்தி அதிகார சபை நிதியிடும் பாதுக்க சந்தை வளாக உத்தேச கால்வாய் நடைபால நிர்மாணம்**

*மேற்குறித்த கருத்திட்டம் ஐந்து ஒப்பந்தங்களாக இ.கா.மீ.அ. கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. அதாவது நடை பாலம், கால்வாய் நிர்மாணம், எற்கெனவே காணப்படும் பாதுக்க சந்தை வளாக கால்வாய் முறைமையின் மீள்அபிவிருத்தி (கட்டம்I) மற்றும் கேபியன் தடுப்புச் சுவர்களின் நிர்மாணம் உள்ளிட்ட கட்டம் II, கட்டம் III மற்றும் கட்டம் IV ஆகியவற்றின் பணிகள் என்பன இதில் உள்ளடங்கும்.*

*குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 36.82 மில்லியன் ரூபாவாகும். இந்தக் கருத்திட்டம் 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப் பட்டது. இது 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிறைவு செய்யப்பட்டது.*









*2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 11 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 33 மில்லியன் ரூபாவாகும்.*

## 6. நகர அபிவிருத்தி அதிகார சபை நிதியிடும் ஹொரண நகர அபிவிருத்திக் கருத் திட்டம் - கட்டம் II

*மேற்குறித்த கருத்திட்டம் ஹொரண நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் செயற்படுத்தப்படுகின்றது. குறித்த கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 112.48 மில்லியன் ரூபாவாகும். உத்தேச தடுப்புச் சுவர்கள், இரண்டு மாடிக் கட்டிடம் ஆகியவற்றின் நிர்மாணம் பேரூந்து வரிசை ஒழுங்கு மற்றும் சம்பந்தப்பட்ட நிர்மாணங்கள் முதலிய இதில் உள்ளடங்குகின்றன.*

*குறித்த கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத்திட்டத்தை 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அளவில் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முடிவடையும் வரை மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 11.9 மில்லியன் ரூபாவாகும்.*





### 07. நகர அபிவிருத்தி அதிகார சபை நிதியிடும் உத்தேச கேகாலை பேரூந்து நிலையத்திற்கான காணி அபிவிருத்திக் கருத்திட்டம்

மேற்குறித்த கருத்திட்டம் தொடார்பான கேள்வி ஒப்பந்தம் நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டது. குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 98.88 மில்லியன் ரூபாவாகும். 130 மீற்றர் அகலமும் 280 மீற்றர் நீளமும் உடைய உத்தேச தடுப்புச் சுவர்களின் நிர்மாணம், 81.5 மீ நீளமான மேற்பரப்பு கூழாங்கற்களான கால்வாய் நிர்மாணம், 80 மீ நீளமான பக்க வடிகாலமைப்பு வசதி நிர்மாணம், 8.5 மீ நீளமான உத்தேச பெட்டி வடிவ மதகு, 85 மீ நீளமான பாதுகாப்பு சுவர் நிர்மாணம் முதலிய நிர்மாணப் பணிகளும் காணிகள் நிரப்பல் வேலைகளும் இதில் அடங்குகின்றன.

இந்தக் கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டு அகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இது 2015 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் அளவில் நிறைவு செய்யப்படவுள்ளது.

2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முடிவடையும் வரை மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 8 மில்லியன் ரூபாவாகும்.







## 08. நகர அபிவிருத்தி அதிகார சபை நிதியிடும் களுத்துறை உத்தேச கடைக் கட்டிடத்தொகுதி

*மேற்குறித்த கருத்திட்டம் களுத்துறை நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. பொது மக்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு கடைத் தொகுதிகளின் நிர்மாணப் பணி குறித்த கருத்திட்டத்தின் நோக்கெல்லையில் அடங்குகின்றது.*

*குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட சுமாரான ஆகுசெலவு 344 மில்லியன் ரூபாவாகும். இதன் நிர்மாணப் பணிகள் 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இந்தக் கருத்திட்டத்தை 2016 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் அளவில் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முடிவடையும் வரை மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 1.95 மில்லியன் ரூபாவாகும்.*

***09. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் கீழ் உத்தேச பெலியத்த நகர வசதி நிலைய நிர்மாணம்***

*மேற்குறித்த கருத்திட்டம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் மூலம் பெலியத்த நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த இந்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 569.25 மில்லியன் ரூபாவாகும். இதில் எந்திரவியல், மின்சார மற்றும் குழாய் பொருத்தும் வேலைகள் அடங்கலாக 4 மாடி வர்த்தகக் கட்டிட நிர்மாண ஆகுசெலவும் அடங்குகின்றது.*

*குறித்த கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத்திட்டத்தை 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் அளவில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.*

***10. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கீழ் பொல்வத்தை பிரதான களஞ்சியசாலைக்கான எல்லைச் சுவர், காப்பாளர் கொட்டகை மற்றும் வேலி என்பவற்றின் நிர்மாணம்***

*மேற்குறித்த கருத்திட்டம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் எமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 5.57 மில்லியன் ரூபாவாகும். இதில் மேற்பரப்பு கூழாங்கற்களாலான கொத்தன் சுவர்கள், செங்கற்களாலான சுவர்கள் அடங்கலாக எல்லைச் சுவர், தடுப்புச் சுவர், காப்பாளர் கொட்டகை ஆகியவற்றின் நிர்மாணம் மற்றும் மினுக்கல் வேலை ஆகியவற்றுக்கான செலவுகளும் அடங்குகின்றன. குறித்த கருத்திட்டம் 2013 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் நிறைவு செய்யப்பட்டது.*

*2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 4.8 மில்லியன் ரூபாவாகும்.*

**11.இ.கா.மீ.அ.கூ. தாபனத்திற்கான அலுவலகப் புதிய கட்டிடம், இ.கா.மீ.அ.கூ. தலைமை அலுவலகத்தின் தென் பகுதிக்கான நிலகீழ் மதகு ஆகியவற்றின் நிர்மாணமும் இ.கா.மீ.அ.கூ. நிலக்காட்சிப்படுத்தல் பணிகளும்**

*குறித்த கட்டிடம் G+4+கூரையைக் கொண்ட கட்டிடமாகும். இந்தக் கட்டிடத்தில் 03 அலுவலக மாடிகள், கேட்போர்கூடம் மற்றும் வாகன நிறுத்தல் ஆகிய வசதிகள் காணப்படுகின்றன. இந்தக் கட்டிடத்தின் மொத்தப் பரப்பளவு 20710 சதுர அடிகளாகும். இதற்காக மதிப்பிடப்பட்ட பெறுமானம் 110 மில்லியன் ரூபாவாகும். கட்டுமான மற்றும் சேவை வரைபுகளைத் தயாரிக்கும் பணி ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டது. இதற்கான நிர்மாணப் பணிகள் நிர்மாணப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டன.*

*2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பணியின் பெறுமானம் 68.29 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட மொத்தப் பெறுமானம் 161.12 மில்லியன் ரூபாவாகும்.*

*இந்தக் கருத்திட்டத்தை 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் அளவில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்தின் II ஆம் கட்டப் பணிகள் நிகழ்ந்து வருகின்றன. இந்த நிகழ்ந்து வருகின்ற பணிகளின் ஆகுசெலவு 90.0 மில்லியன் ரூபாவாகும்.*





### *12. கிம்புலாவெல உடற்பயிற்சி வசதிகளின் உத்தேச புனர்நிர்மாணம்*

*இந்தக் கட்டிடம் இரண்டு மாடிகளைக் கொண்டமைந்ததாகும். இதில் உடற்பயிற்சி பகுதி, பழச்சாறு நிலையம், சுகயீன அறை, உடைகளை மாற்றப் பயன்படுகின்ற அறைகள், அலுவலகப் பகுதி மற்றும் சிகை அலங்கார நிலையம் என்பனவும் உள்ளடங்கியிருக்கின்றன. இதற்கான மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 32.08 மில்லியன் ரூபாவாகும்.*

*குறித்த கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் அளவில் நிறைவு செய்யப் பட்டது.*









### 13.அனுராதபுரம் சுற்றுலா விடுதி (கட்டம் I) நிர்மாணம்

*குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 40.65 மில்லியன் ரூபாவாகும். இதில் தேவையான சிவில் வேலைகள், குழாய் பொருத்தல், எந்திர மற்றும் மின்சார வேலைகள் முதலிய அனைத்தும் அடங்கலாக 02 கட்டிடத் தொகுதிகள் (வகை C மற்றும் வகை E) ஒரு இரண்டி மாடிக் கட்டிடத்தின் செலவுகள் உள்ளடங்குகின்றன.*

*குறித்த கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத்திட்டம் 2015 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் அளவில் நிறைவு செய்யப் படவுள்ளது. 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முடிவடையும் வரை மேற்கொள்ளப் பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 4.33 மில்லியன் ரூபாவாகும்.*

### *14.அத்திடிய அலுவலகக் கட்டிடத்திற்கான புனர்நிர்மாணப் பணிகள்*

*மேற்குறித்த கருத்திட்டம் இ.கா.மீ.அ.கூ. கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப் படுகின்றது. இந்தக் கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 3.23 மில்லியன் ரூபாவாகும். இந்தக் கருத்திட்டத்தில் உட்பகுதியில் அறைகளாகப் பிரித்தல், பன்படுத்தல் வேலைகள், குழாய் பொருத்தல், வர்ணந்தீட்டும் வேலைகள், வடிகாலமைப்பு பழுதுபார்ப்புகள் என்பன உள்ளடங்குகின்றன.*





*குறித்த கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத்தில் நிறைவு செய்யப்பட்டது. 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முடிவடையும் வரை மேற்கொள்ளப்பட்ட பணியின் திரண்ட பெறுமானம் 3.99 மில்லியன் ரூபாவாகும்.*

### *15.கிரிமண்டல மாவத்தை களஞ்சியசாலை நிர்மாணம்*

*கூட்டுத்தாபனத்திற்கு மூலப்பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான வசதி நிமித்தம் களஞ்சியசாலை நிர்மாணப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த கருத் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த ஆகுசெலவு 3.78 மில்லியன் ரூபாவாகும். இதில் சிவில் வேலைகள் அனைத்தும் அடங்கலாக உருக்குக் கூரைக் கட்டுமாணக் கட்டிடத்தின் செலவுகள் அடங்குகின்றன.*

*குறித்த கருத்திட்டம் 2014 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முடிவடையும் வரை மேற்கொள்ளப்பட்ட பணித் திரண்ட பெறுமானம் 2.66 மில்லியன் ரூபாவாகும்.*





***பெறித்தொகுதிகள், உபகரணங்கள் பிரிவு***

*கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பொறித்தொகுதிகள், இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் அனைத்தினதும் இயக்கப் பராமரிப்பு விடயங்களுக்கு இந்தப் பொறித் தொகுதிகள், உபகரணங்கள் பிரிவு பொறுப்பாகவுள்ளது.*

*வாடிக்கையாளர்கள் சார்பில் அகழந்து துப்புரவாக்கும் கருத்திட்டங்களை ஏற்று நிறைவேற்றல், இயந்திராதிகள் முதலியவற்றை வாடகைக்கமர்த்தல், பாரிய உருக்கு நிர்மாண வேலைகள் முதலியன மேற்கொள்ளப்பட்ட ஏனைய வகைப் பணிகளில் அடங்குகின்றன.*

*2014 ஆம் ஆண்டின் போது இந்தப் பிரிவு பின்வருவன அடங்கலாக பல அகழ்ந்து துப்புரவாக்கல் மற்றும் பாரிய உருக்கு நிர்மாணப் பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்தது.*

1. *வெரஸ் கங்கைக் கருத்திட்டத்தின் கீழ், பெல்லன்வில மழை நீர் தேற்கி வைக்கும் ஏரியை அகழ்ந்து துப்புரவாக்கல்.*
2. *வெரஸ் கங்கைக் கருத்திட்டத்தின் கீழ், தெல்கந்தை சந்திக்கு அருகிலுள்ள ஏரியை அகழ்ந்து துப்புரவாக்கல்.*
3. *கொத்தலாவெல, அம்பாந்தோட்டை சூரியவெவ பாதுகாப்பு கல்லூரிகளில் அமைந்துள்ள இரண்டு ஏரிகளை அகழந்து துப்புரவாக்கல்.*
4. *அனுராதபுரம் கும்பிச்சங்குள நீர்ப்பாசன ஏரியை அகழந்து துப்புரவாக்கல்.*
5. *குருனாகல் தித்தவெல்ல குளத்தை அகழ்ந்து துப்புரவாக்கல்.*

*2014 ஆம் ஆண்டில், உலக வங்கி நிதியிட்ட கொழும்புப் பெரும்பாக நகர அபிவிருத்தி கருத்திட்டத்திலிருந்து எமது கூட்டுத்தாபனத்திற்கு பாரிய மூலப்பொருட்களை ஏற்றிச் செல்லக்கூடிய பல வாகனங்கள் வழங்கப்பட்டன. குவி ட்ரக் வண்டிகள் (3 கியுப்கள் மற்றும் 5 கியுப்கள்), ட்ரக்டெர்கள், தண்ணீர் பவுசர்கள் மற்றும் பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய ஒரு சில வாகனங்கள் என்பன இந்த வாகனங்களில் அடங்குகின்றன.*

*கிடைத்த இயந்திராதிகளின் பெறுமானம் சுமார் 250 மில்லியன் ரூபாவாகும். இந்த இயந்திராதிகளைப் பயன்படுத்தியதால், வெளிவிநியோகத் தரப்புகளிடமிருந்து அதிக எண்ணிக்கையான வாடகைக்கு எடுக்கும் தேவையை கூட்டுத்தாபனத்தினால் குறைக்க முடிந்தது.*



***MCUDP இன் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட போக்குவரத்து வாகனங்கள்***



***காலி முகத்திடலில் கையளிக்கும் வைபவம்***

*புதிய இயந்திராதிகளின் பராமரிப்பு விடயங்களுக்காக புதிய ஒரு வேலைப்பட்டறைக் கட்டிடம் நிர்மாணிப்பட்டது.*

*வெரஸ் கங்கை I ஆம் கட்ட மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் கீழ் பெல்லன்வில சதுப்புநில ஏரியை அகழந்து துப்புரவாக்கும் பணியும் 2014 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது.*



*வெரஸ் கங்கைக் கருத்திட்டத்தின் இயந்திராதிகள்*



*பெல்லன்வில ஏரியை அகழ்ந்து துப்புரவாக்கல்*



*அடுத்தடுத்துக் காத்திருக்கும் டிப்பெர் வண்டிகள்*



*போலவலன ஏரி*

*பொறித்தொகுதிகள், உபகரணங்கள் பிரிவின் வேலைப்பட்டறை எந்திரய வேலைக்கும் பாரிய உருக்கு நிர்மாண வேலைகளுக்குமான வசதிகளைக் கொண்டுள்ளது. இந்தக் கூட்டுத்தாபனம் வடிவமைப்பு நிர்மாண அடிப்படையில், பூங்காக்களுக்கும் மற்றும் நடை பாதைகளுக்கும் சூரிய ஒளிக் கம்பங்களை நிர்மாணித்து விநியோகித்தமையை இந்தப் பிரிவு 2014 ஆம் ஆண்டில் அடைந்த சாதனைகளில் முக்கியமான ஒரு சாதனை எனக் குறிப்பிடலாம். எமது கூட்டுத்தாபனம் வெளித்தரப்பு வாடிக்கையாளர்களுக்கும் சூரிய ஒளிக் கம்பங்களை விநியோகித்து, அதன் மூலம் வருமானத்தை ஈட்டியது.*









*இரும்பாலான வில்வளைவுப் பால மிதக்கும் சந்தை*

*பெல்லன்விலவில் சூரிய ஒளிக் கம்பங்களைப் பொருத்துதல்*

***காணிகள் சந்தைப்படுத்தல் பிரிவு***

*வெள்ளப்பெருக்குகள் நீங்கிய ஒரு சுற்றாடலில் கைத்தொழில், வர்த்தகம் மற்றும் வீடமைப்பு ஆகிய நோக்கங்களுக்கு அவசியமான புதிய காணிகளை உருவாக்குதல் எமது கூட்டுத்தாபனத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒரு குறிக்கோளாகும். எமது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அடைவதில் இந்தப் பிரிவானது அதே விடயம் தொடர்பான தனது சொந்தக் குறிக்கோள்களை அடைந்துள்ளது.*

1. *காணிகளின் விற்பனைகளினதும் குத்தகைகளினதும் ஊடாக வருமான ஈட்டலை அனுகூலப்படுத்தல்.*

2. *வருமான இலக்குகளை அடைந்துகொள்ளும் பொருட்டு அபிவிருத்தி நோக்கங்கள் நிமித்தம் இனங்காணப்படும் காணிகளை உரித்தளித்தல்.*

3. *வெள்ளப்பெருக்குகளைக் குறைக்கும் பொருட்டு நீர் தேங்கிநிற்கும் இடங்களிலும் மேல் மாகாணத்திற்கு வெளிப் பகுதிகளிலும் சட்டவிரோதமாக காணிகளை மண்ணிரப்பியெடுத்து அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகளைக் குறைத்தல்.*

*மேற்குறித்த குறிக்கோள்களை அடையும் பொருட்டு, காணிகள் சந்தைப்படுத்தல் பிரிவு பின்வருவனவற்றை நிறைவேற்றும்.*

(i) *அபிவிருத்தி நோக்கங்களுக்குப் பொருத்தமான காணிகளை சுவீகரித்தல்.*

(ii) *அத்தகைய நிலங்களின் பாதுகாவலர் என்ற வகையில் கொழும்புப் பெரும்பாக வெள்ளப்பெருக்கு சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டத்திற்குத் தேவையான நீரைத் தேற்கி வைக்கக்கூடிய காணிகளை முகாமை செய்தல்.*

(iii) *காணிகள் பிரித்தல் தொடர்பான வழிகாட்டல்களின் பிரகாரம் காணிகளைப் பிரித்து வழங்குதல்.*

(iv) *2006 இன் காணிகள் திருத்தல் சட்டத்தின் பிரகாரம் சதுப்பு நிலங்களைப் பிரகடனப்படுத்தல்.*

(v) *அத்தகைய அபிவிருத்திகளின் போது பாதிக்கப்படுகின்ற சட்டவிரோதமான குடியிருப்பாளர்களை மீளக்குடியமர்த்தல் மற்றும் அவர்களுக்கு உறுதிகளை வழங்குதல்.*

*காணிகளின் பிரித்தல் முறையானது பின்வருமாறு அமையும்:*

***(i) நீண்டகாலக் குத்தகைகள்***

*குறிப்பாக BOI அங்கீகார கருத்திட்டங்களுக்கான காணிகள் 30 அல்லது 50 ஆண்டுகள் என்ற நீண்டகால குத்தகை அடிப்படையில் காணிகள் பிரித்து ஒதுக்கப்படும்.*

***(ii) நேரடி விற்பனைகள்***

*அரசாங்க நிறுவனங்களுக்கு அவற்றின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் காணிகளை விற்பனை செய்வது என்பது காணிகள் ஒதுக்கீட்டு நடவடிக்கையில் முக்கிய ஒரு பிரச்சினையாக விளங்குகின்றது.*

***(iii) வீடமைப்புக்கான முழுமையான விற்பனைகள்***

*தனியாட்களின் வீடமைப்பு நோக்கங்களுக்கு உதவுதல், வீட்டுக் கட்டிடத் தொகுதிகளை ஏலத்தில் அல்லது கேள்வி விலை மனு மூலம் விற்பனை செய்வது காணிகளைப் பிரித்து ஒதுக்கும் மற்றுமொரு முறையாகும்.*

***(iv) குறுங்காலக் குத்தகைள்***

*தேவைகளைப் பொறுத்து காணிகளின்/கட்டிடங்களின் ஒதுக்கீடு குறுங்கால / தற்காலிக அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.*

*காணிகளைப் பிரித்து ஒதுக்கும் முறையைப் பொறுத்து, அதற்குத் தேவையான அங்கீகாரங்களுடன் மேற்குறித்த காணிகளின் விற்பனை/குத்தகை விடயங்கள் மேற்கொள்ளப்படும்.*

***புதிய காணிகளைச் சுவீகரித்தல்:***

*நீரைத் தேற்கி வைக்கக்கூடிய கொள்ளளவுகளை அதிகரிக்கும் நோக்கில் கொழும்பிலும் மற்றும் சுற்றுப்புறங்களிலும் மேற்கொள்ளப்படும் புதிய அபிவிருத்திப் பணிகளுக்கு உதவும் நிமித்தம் ஏறக்குறைய 25 ஏக்கர்கள் அளவில் தளங்கம, களப்பாலுவாவ மற்றும் அங்கொட ஆகிய பகுதிகளில் பல காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தவிர, பாராளுமன்ற ஏரியின் நீர் தேங்கி நிற்கக் கூடிய ஒரு மேல்நீரேந்து பரப்பாக 70 ஏக்கர் அளவான சதுப்புநிலங்களும் சுவீகரிக்கப்பட்டு வருகின்றன.*

*சதுப்புநில முகாமைத்துவக் கருத்திட்டத்திற்கு கொலன்னாவப் பிரதேசத்தில் சுமார் 227 ஏக்கர் அளவான காணிகளையும் மற்றும் கால்வாய் அபிவிருத்திற்காக முத்துராஜவெல பகுதியில் கி.மீ. நீளமான காணித் துண்டையும் பெற்றுக்கொள்வதற்கும் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.*

***சதுப்புநிலங்களைப் பிரகடனப்படுத்தல்:***

*காணிகள் திருத்தல் சட்டத்தின் 2 b (1) மற்றும் 4A (1) ஆம் ஆகிய பிரிவுகளின் கீழ், காணிகள் சந்தைப்படுத்தல் பிரிவு நாட்டில் சதுப்புநிலங்களையும் மற்றும் கால்வாய் ஒதுக்கங்களையும் பிரகடனப்படுத்தும் விடயத்தைக் கவனித்து வருகின்றது.*

*தற்பொழுது மேல் மாகாணம், ஊவா மாகாணம் மற்றும் மத்திய மாகாணம் ஆகிய மாகாணங்களில் சதுப்புநிலங்களைப் பிரகடனப்படுத்தும் பணிகள் நிறைவு செய்யப் பட்டுள்ளன. வடமேல், சபரகமுவ, வட மத்திய மாகாணங்களில் சதுப்நிலங்களைப் பிரகடனப்படுத்தும் விடயங்கள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏனைய மாகாணங்களிலும் கட்டம் கட்டமாக சதுப்புநிலங்கள் பிரகடனப்படுத்தப்படும்.*

***சட்டவிரோதக் குடியிருப்பாளர்களை மீளக்குடியமர்த்தல்:***

*கூட்டுத்தாபனம் பறிமுதல்செய்த சதுப்புநிலப் பிரதேசங்களில் சட்டவிரோதமாகக் குடியிருந்த குடியிருப்பாளர்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஒழுங்குகளையும் இந்த காணிகள் சந்தைப்படுத்தல் பிரிவு மேற்கொண்டுள்ளது. அத்தகைய கருத்திட்டங்கள் அத்திடிய, தளகொட்டுவவத்தை - கிருளப்பண, ஒறுகொடவத்தை, முத்துராஜவெல - வத்தளை, வெதமுல்ல - களணி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ளன. அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அத்தகைய குடும்பங்களுக்கு காணிகளின் உறுதிகளை மாற்றிக் கையளிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

***காணிகளின் விற்பனைகளும் குத்தகைகளும் :***

*எமது கூட்டுத்தாபனம் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணி விற்பனைகளிருந்து/ குத்தகைகளிலிருந்து சுமார் 203 மில்லியன் ரூபா தொகையான ஒரு காசுப்பாய்ச்சலைப் பெற்றுள்ளது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையிடமிருந்து கிடைத்த 20 மில்லியன் ரூபாவும், இலங்கை விமானப் படையின் காணிக்காக தெஹிவளை பிரதேச செயலாளர் அலுவலகத்திலிருந்து கிடைத்த 51 மில்லியன் ரூபாவும், வீ.அ.அ.ச. உப ஒப்பந்தத் தரப்பிடமிருந்து கிடைத்த 44 மில்லியன் ரூபாவும் இந்தக் காசுப்பாய்ச்சலில் அடங்குகின்றன.*

*2014 ஆம் ஆண்டில் காணி விற்பனைகளிலிருந்தும் காணிகளின் குத்தகைகளிலிருந்தும் கிடைத்த காசுப்பாய்ச்சல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 30% வீத அதிகரிப்பைக் கொண்டுள்ளது. காணிகளின் விற்பனைகளிலிருந்தும் காணிகளின் குத்தகைகளிலிருந்தும் 2015 ஆம் ஆண்டிற்கு எதிர்பார்த்த வருமானம் 300 மில்லியன் ரூபாவாகும்.*

***மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு***

***பயிற்சியும் அபிவிருத்தியும்***

*கூட்டுத்தாபனத்திலுள்ள தனியாட்களின் செயலாற்றுகையை மேம்படுத்துவதை இலக்காகக்கொண்டு, கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய பயிற்சி, அபிவிருத்தித் தொழிற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டிற்கான தொழில் வகுதிகளின் அடிப்படையில் பயிற்சிக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு பின்வருமாறு காணப்படும்.*




*2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புதிய மனித வளங்கள் தொடர்பான தகவல் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மாதாந்த திட்டமிடப்பட்ட, உண்மையான பயிற்சி நடைமுறைகளுடன் ஒப்பிடும் போது அதே காலப் பகுதியில், தனியான ஒரு பயிற்சி அபிவிருத்தி சார்ந்த தரவுத்தளமும் செயற்படுத்தப்பட்டது.*

*இது தவிர, 2013 ஆம் ஆண்டு முதல், பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் பயிற்சி அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளீர்க்கப்பட்டன.*

- *பொதுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்*
- *கூட்டுத்தாபனத்தின் சமூகப் பொறுப்புப் பணி (CSR)*
- *ஓய்வு மற்றும் வெளிக்கள ரீதியான செயற்பாடுகள்*

*2014 ஆம் ஆண்டில் பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவு செய்யப் பட்டுள்ளன.*

| தொ.இல. | விபரம் | பங்குபற்றியவார்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | உள்நாட்டுப் பயிற்சி | 113 |
| 02. | வெளிநாட்டுப் பயிற்சி அமர்வு | 34 |
| 03. | உள்ளகப் பயிற்சி | 210 |
| 04. | ஆரம்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 120 |

*2014 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஏற்பட்ட உண்மையான செலவு 2,142,201.00 ரூபாவாகும். அதே வேளை வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்பட்ட உண்மையான செலவு 3,679,990.00 ரூபாவாகும்.*

**ஆட்சேர்த்தலும் பதவியுயர்வுகளும்**

*முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி கூட்டுத்தாபனத்தின் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கான (ஆ.தி.) அங்கீகாரங்களை வழங்கியுள்ளது.*

*முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வழிகாட்டல்களின் பிரகாரம், எமது கூட்டுத்தாபனத்தின் அங்கீகரித்த ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு சில வகுதிகளின் நிமித்தம் 2013 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 06 ஆம் திகதியும் 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் திகதியும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.*

*ஆட்சேர்ப்பு நடைமுறைத் திட்டம் எமது கூட்டுத்தாபனத்தில் கிடைக்கக்கூடிய சேவைத் தேவைப்பாட்டிற்கு அமைய இந்த கூட்டுத்தாபனத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஏற்ப நிரந்தர அல்லது ஒப்பந்த அடிப்படை ஆகிய இரண்டில் ஒரு அடிப்படையில் பொருத்தமான நபர்களை கவர்தல், தேர்ந்தெடுத்தல், நியமித்தல் ஆகிய முழுமொத்த நடவடிக்கையையும் குறிப்பீடுசெய்கின்றது.*

*பிரதிப் பொது முகாமையாளர் (மனித வள அபிவிருத்தி), ஏனைய பிரதிப் பொது முகாமையாளர்கள் மற்றும்/அல்லது ஆட்சேர்ப்பு நிபுணர்கள் ஆகியோரினால் உள்ளக ரீதியில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், ஆட்சேர்ப்பின் ஒரு பாகமாக நிரல் அமைச்சிலிருந்து அமைச்சின் பிரதிநிதி ஒருவரும் ஆட்சேர்ப்பின் போது கலந்து கொள்கின்றார்.*

*2014 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட பதவிகளின் சுருக்க விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.*

| | பதவி | தேர்ந்தெடுக்கப் பட்ட விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை | ஆட்சேர்த்துக்கொள்ளப் பட்ட விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | நிரந்தர | ஒப்பந்த |
| 1 | சிவில் பொறியியலாளர் தரம் II | 17 | 16 | 1 |
| 2 | சுற்றாடல் விஞ்ஞானி | 1 | 1 | - |
| 3 | உதவிக் கணிய அளவையாளர் | 9 | 9 | - |
| 4 | கனரக இயந்திர இயக்குநர் | 4 | 4 | - |
| 5 | பொறியியல் உதவியாளர் | 20 | 20 | - |
| 6 | சுற்றாடல் உத்தியோகத்தர் | 1 | 1 | - |
| 7 | சமூக சேவை உத்தியோகத்தர் | 1 | 1 | - |
| 8 | பொறியியலாளர் (மண் வளங்கள், அகழ்வு) | 2 | 2 | - |
| 9 | உயிரியல் சூழலியலாளர் | 2 | 2 | - |
| 10 | முகாமைத்துவக் கணக்காளர் | 1 | 1 | - |
| 11 | பிரதான கணக்காளர் | 1 | 1 | - |
| 12 | கணக்காளர் ( REDECO ஊடாக) | 1 | - | 01 |
| 13 | கணக்குகள் உதவியாளர் | 1 | 1 | - |
| 14 | காணி உதவியாளர் (முகாமைத்துவப் பயிலுநராக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட) | 8 | 8 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | களஞ்சிய உதவியாளர் | 1 | 1 | - |
| 16 | நிலஅளவையாளர் | 1 | - | 01 |
| 17 | பெறியியலாளர் (திட்டமிடல், வடிவமைப்பு) | 1 | - | 01 |
| 18 | உள்ளகக் கணக்காய்வு உதவியாளர் | 2 | 2 | - |
| 19 | முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்/ தொழில்நுட்பம் சாராத | 19 | 19 | - |
| 20 | கனரக வாகன சாரதி (லொறி/டிப்பெர்) | 24 | 24 | - |
| 21 | கனரக வாகன சாரதி (ட்ரக்டெர்) | 14 | 13 | 01 |
| 22 | வாகன நடத்துநர்/உதவியாளர் | 18 | 08 | 10 |
| 23 | கொழுப்பிடுபவர் | 11 | - | 11 |
| 24 | படகு இயக்குநர் | 03 | 03 | - |
| 25 | வேலை மேற்பார்வையாளர் (சிவில்) | 07 | 07 | - |
| 26 | வேலை மேற்பார்வையாளர் (எந்திர) | 02 | 02 | - |
| 27 | வாகனங்கள் திருத்துநர் | 02 | 02 | - |
| 28 | வரையுநர் | 14 | 14 | - |
| 29 | கனரக இயந்திராதிகள் இயக்குநர் | 09 | 06 | 03 |
| 30 | இலகு வாகன சாரதி | 13 | 13 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | பணியாள் | 01 | 01 | - |
| 32 | நிலஅளவைத் தொழிலாளர் | 06 | 06 | - |
| 33 | களத் தொழிலாளர் | 04 | 04 | - |
| 34 | சிற்றூழியர் மேற்பார்வையாளர் | 09 | 09 | - |
| 35 | ஒட்டுநர் | 03 | 03 | - |
| 36 | பாதுகாப்புப் பராமரிப்புத் தெழிலாளர் | 02 | - | 02 |
| 37 | பாதுகாப்பு உத்தியோகத்தர் | 01 | - | 01 |
| 38 | முறைமை இயக்குநர் | 01 | 01 | - |
| | **முழுமொத்தம்** | **237** | **206** | **31** |

பதவியுயர்வு என்பது சிறந்த செயலாற்றுகைக்காக ஊழியர் ஒருவர் பெறுகின்ற ஒரு வெகுமானமாக இருக்கலாம். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து எமது கூட்டுத்தாபனத்தின் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு (அ.தி.) அங்கீகாரங்கள் கிடைக்கும் வரை இந்தப் பதவியுயர்வு விடயம் ஒரு சில வருடங்கள் தாமதித்துள்ளது.

குறித்த ஆ.தி. இற்கான அங்கீகாரங்கள் கிடைத்த பின்னர், 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் கூட்டுத்தாபனம் ஊழியர்களை பொருத்தமான பதவிகளுக்கும் மற்றும் தரங்களுக்கும் உள்ளீர்க்கும் மற்றும் பதவியுயர்த்தும் விடயத்தை ஆரம்பித்தது.

**செயலாற்றுகை முகாமைத்துவம்**

ஊழியர்களின் ஈடுபாடு, அபிவிருத்தி, செயலாற்றுகை என்பவற்றை அனுகூலப்படுத்த செயலாற்றுகை முகாமைத்துவ நடபடிமுறை மேற்கொள்ளப்படுகின்றது.

செயலாற்றுகை முகமைத்துவ நடபடிமுறையானது கூட்டுத்தாபனத்தின் நலனுக்காக ஊழியர்கள் சிறந்த முறையில் பணியாற்றக்கூடியவர்களாக இருப்பதற்கு தனியாள் உற்பத்தித்திறனையும் நடபடிமுறையையும் மேம்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப் படும் எதிர்பார்ப்புகளையும் மற்றும் தொழில் பொறுப்புக்களையும் வகைப்படுத்துவதை

அனுமதிக்கின்றது. ஊழியர்களுக்கு அவர்களின் அபிவிருத்தியில் உதவுதல், வருடாந்த செயலாற்றுகையை மீளாய்வுசெய்வதில் செயலாற்றுகையையும் முன்னேற்றத்தையும் சாரம்சப்படுத்துதல், தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்கி பின்னூட்டல்களை பெறல், ஊழியர்கள் அவர்களின் தொழில்களை வினைத்திறன் வாய்ந்ததாக மேற்கொள்வதற்கு அவசியமான பயிற்சி, வளங்கள் மற்றும் கருவிசாதனங்கள் என்பனவற்றின் கிடைப்புத் தன்மையை உறுதிசெய்தல், தெளிவான குறிக்கோள்கள், நோக்கங்கள் என்பவற்றின் தொடர்பாடல் முதலிய அம்சங்களின் மூலம் இது அடையப்படுகின்றது.

இதன் பயனாக, அந்தந்தப் பிரிவுத் தலைவர்களின் சிபாரிசுகளுடன் 2013 ஆம் ஆண்டு முதல் புதிய ஒரு செயலாற்றுகை முறைமையை அறிமுகப்படுத்தியதனூடாக வருடாந்த அடிப்படையில் அனைத்து ஊழியர்களினதும் செயலாற்றுகைகள் கண்காணிப்பட்டு வருகின்றன.

**ஊழியர் படை**

2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியிலிருந்த ஆளணி பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| பதவி | சம்பளக் குறியீடு | அங்கீக ரிக்க ப்பட்ட ஆளணி | ஏற்கெனவேயுள்ள ஆளணி | | |
|---|---|---|---|---|---|
| | | | நிரந்தர | அமைய | ஒப்பந்த |
| பொது முகாமையாளர் | HM 2-2 | 01 | 01 | - | - |
| மேலதிகப் பொது முகாமையாளர் | HM 2-1 | 02 | 01 | - | 01 |
| பிரதிப் பொது முகாமையாளர் | HM 1-3 | 11 | 11 | - | 01 |
| உதவிப் பொது முகாமையாளர் | HM 1-1 | 14 | 10 | - | 01 |
| முகாமையாளர் வகுதி | MM 1-1 | 121 | 92 | - | 06 |
| கனிஷ்ட முகாமையாளர் வகுதி | JM 1-1 | 52 | 44 | - | - |
| அமூலாக்கல் உத்தியோகத்தர் | MA 5-1 | 01 | - | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இணைந்த அலுவலர் வகுதி | MA 3 | 53 | 45 | - | - |
| முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப வகுதி | MA 2-2 | 141 | 133 | - | - |
| முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத வகுதி | MA 1-2 | 210 | 186 | - | - |
| ஆரம்ப மட்ட வகுதி - திறன் தேர்ச்சிபெற்ற | PL 3 | 313 | 331 | - | 06 |
| ஆரம்ப மட்ட வகுதி - திறன் அரைத் தேர்ச்சிபெற்ற | PL 2 | 103 | 101 | - | - |
| ஆரம்ப மட்ட வகுதி - திறன் தேர்ச்சிபெறாத | PL 1 | 504 | 479 | 02 | 26 |
| **முழுமொத்தம்** | | **1526** | **1434** | **02** | **41** |

***வழங்கல்கள் பிரிவு***

*குழுப் பணி, பயனுள்ள திட்டமிடல், அதிகாரப் பகிர்வு, ஆகுசெலவு குறைத்தல் முதலியவற்றினூடாக வழங்கல்கள் பிரிவு ஆகுசெலவு நிலைய அமைப்பிலிருந்து ஒரு இலாபம் ஈட்டும் நிலையமாக மாறி வருகின்றது.*

*2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பாரிய செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.*

| **விடயம்** | **2013 (எண்ணிக்கை)** | **2014 (எண்ணிக்கை)** |
|---|---|---|
| அலுவலகப் பொருட்கள் கொள்வனவு | 2808 | 3446 |
| பொறியிடப்பட்ட கேள்வி விலை மனுக்கள் | 598 | 798 |
| பொருட்கள் வாங்கல் | 75 | 73 |

| | | |
|---|---|---|
| கொள்வனவுக் குழுப் பத்திரங்கள் | 965 | 2046 |
| கொள்வனவுப் பெறுமானம் | 4500 மில்லியன் ரூபா | 4500 மில்லியன் ரூபா |

கொள்வனவு விடயங்களின் எண்ணிக்கை 1081 ஆல் அதிகரித்த போதிலும், இந்தப் பிரிவு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஒரே அளவிலேயே (4500 மில்லியன்) கொள்வனவு ஆகுசெலவைப் பேணியது. பயனுள்ள, வினைத்திறன் வாய்ந்த கேள்வி நடைமுறை, கட்டிட மூலப்பொருட்கள், உடனே பயன்படக்கூடிய சீமெந்துக் கற்கள் ஆகியன பற்றிய வருடாந்த விலைகளை மதிப்பிடுதல், இயந்திராதிகளை வாடகைக்கு அமர்த்துதல், நியாயமான கொள்வனவு முறைமை, விநியோகத் தரப்புகளின் அளவை அதிகரித்தல் முதலியவற்றினூடாக இது மேற்கொள்ளப்பட்டது.

***அடைந்த புதிய சாதனைகள்:***

1. வர்த்தக அபிவிருத்திக் கூட்டங்களின் பெறுமதியான சில பயன்கள்
   - புதிய மத்திய களஞ்சியக் கட்டிடத்தொகுதி
   - கிம்புலாவெல உடற்பயிற்சி வசதி

2. வினைத்திறன், பயன் மற்றும் உற்பத்தித்திறன் என்பவற்றை அதிகரிப்பதன் மூலம் வழங்கல்கள் பிரிவு மாற்றமடைந்தமை.

***சட்டப் பிரிவு***

இந்தச் சட்டப் பிரிவானது 1968 இன் 15 ஆம் இலக்க இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் (இ.கா.மீ.அ.கூ.) சட்டத்தினாலும் அதனைத் தொடர்ந்து அந்தச் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களினாலும் கூட்டுத் தாபனத்திற்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தத்துவங்களின் கீழ் தொழிற்பட்டு வருகின்றது.

***கவனிக்கப்படும் சட்ட அம்சங்கள் பின்வருமாறு:***

1. *காணிகள் சுவீகரித்தல், அபிவிருத்தி, குடியேறல் மற்றும் மீள்குடியேற்றல்.*

2. *காணிகள் அபிவிருத்தி, பொதுமக்கள் ஆலோசனை, குறை வருமானமுடைய குடியிருப்புப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு சட்ட உதவிகளை வழங்குதல் என்பன தொடர்பான சட்ட ஆவணங்களை வரைதல்.*

3. *கூட்டுத்தாபனத்தினால் நீதிமன்றங்களில் தொடரப்படுகின்றதும் அதே நேரம் கூட்டுத்தாபனத்திற்கு எதிராகத் தாக்கல்செய்யப்படுகின்றதுமான வழங்குகளில் கூட்டுத்தாபனத்தை சட்ட ரீதியில் பாதுகாத்தல்.*

4. *கூட்டுத்தாபனத்தின் நாளாந்தப் பிரச்சினை தொடர்பான சகல விடயங்களிலும் ஆலோசனை வழங்குதல்.*

5. *சட்டவிரோதமாக காணிகளை மண்ணிரப்பியெடுத்தல்கள், வடிகாலமைப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறுதல் ஆகிய அனைத்து செயற்பாடுகளுக்கு எதிராகவும், அதே நேரம் கால்வாய் ஒதுக்கப் பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் குடியிருப்பவர்கள், 2006 இன் 35 ஆம் இலக்கத் திருத்தல் சட்டத்தின் கீழும் மற்றும் இ.கா.மீ.அ.கூ. சட்டத்தின் கீழும் பிரகடனப் படுத்தப்பட்ட பிரதேசங்களிலுள்ள கால்வாய்களை மாசடையச்செய்யும் மக்கள் ஆகியோருக்கு எதிராகவும் சட்டநடவடிக்கையை எடுப்பதற்கு எமது கூட்டுத் தாபத்திற்கு அதிகாரத்தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.*

6. *புரிந்துணர்வு ஒப்பந்தம் (பு.ஒ.), விற்பனை உடன்படிக்கை, ஒப்பந்த/உசாதுணை உடன்படிக்கைகள், நீண்ட கால மற்றும் குறுங்கால குத்தகை உடன்படிக்கைள், உறுதிகள் மாற்றிக் கையளித்தல் சம்பந்தப்பட்ட சட்ட ரீதியான ஆவணங்கள், வெளிநாட்டு தொழில்வாய்ப்பு முறிகள் (சம்பளத்துடன்/சம்பளமற்ற), மோட்டார் வாகனக் கடன் ஒப்பந்தம், அற்றோனித் தத்துவ ஆவணம், காணி உரித்துக்கள் மற்றும் உடமைகள் தொடர்பான ஆவணங்கள், காணி அனுமதிச் சான்றிதழ்கள் முதலிய அனைத்து வகையான ஆவணங்களையும் தயாரித்து உறுதிப்படுத்துதல்.*

7. *இதனையடுத்து திருத்தங்கள் அடங்கிய சட்டமானது போதுமானதாகக் காணப் படவில்லை. ஆகையால், சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோனையுடன் தற்போதைய சட்டத்தைத் திருத்துவதற்கு அவசியம் எழுந்துள்ளது. அத்தகைய திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. அந்த*

*அமைச்சரவை அங்கீகாரத்திற்கு இணங்க, இ.கா.மீ.அ.கூ. வரைவு சட்டமூலம் சட்ட வரைஞர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.*

***பணிப்பாளர்களின் அறிக்கை***

*பணிப்பாளர்கள் 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் அறிக்கையையும் கணக்குகளையும் சமர்ப்பதில் மகிழ்ச்சியடைகின்றனர்.*

***பிரதான செயற்பாடுகள்***

*கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகள் இயக்கசார் மீளாய்விலும் (பக்கம் 6 முதல் 85 வரை) முழுமையான வருமானக் கூற்றிலும் (பக்கம் 88) விவரிக்கப் பட்டுள்ளன.*

***குறித்த ஆண்டின் இயக்கச்செயற்பாட்டு மீளாய்வு***

*இயக்கச்செயற்பாட்டு மீளாய்வானது குறித்த ஆண்டு காலப் பகுதியில் கூட்டுத் ததாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் ஒரு விரிவான மீளாய்வை முன்வைக்கின்றது.*

***புறழ்வு***

*2013 ஆம் ஆண்டில் காணப்பட்ட 2,503 மில்லியன் ரூபாவுடன் (1,025 மில்லியன் ரூபா திறைசேரி மானியங்கள் அடங்கலாக) (மீளெடுத்துரைக்கப்பட்ட) ஒப்பிடும் போது குறித்த ஆண்டு காலப் பகுதியில் காணப்பட்ட கூட்டுத்தாபனத்தின் புறழ்வு 3,243 மில்லியன் (3,243 மில்லியன் ரூபா திறைசேரி மானியங்கள் அடங்கலாக) ரூபாவாகும்.*

***இலாபம்***

*2013 ஆம் ஆண்டில் காணப்பட்ட ஒரு 178 மில்லியன் ரூபா இலாபத்துடன் (மீளெடுத்துரைக்கப்பட்ட) ஒப்பிடும் போது மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில் கூட்டுத்தாபனம் வரிக்கு முன்னர் 432 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியிருந்தது. முன்னைய ஆண்டில் வரிக்கும் கட்டணத்திற்கும் பின்னர் இருந்த 152 மில்லியன் ரூபா இலாபத்துடன் (மீளெடுத்துரைக்கப்பட்ட) ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டு வரிக்குப் பின்னருள்ள இலாபம் 347 மில்லியன் ரூபாவாகும்.*

***விவகாரங்களின் நிலை***

*கூட்டுத்தாபனத்தின் விவகார நிலை, நிதி நிலைக் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்டது போல் காணப்படுகின்றது.*

***சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்***

*குறித்த ஆண்டு காலப் பகுதியில் காணப்பட்ட அசையும் சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் என்பன கணக்குகளுக்கான 9 ஆம் குறிப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.*

***வரி விதித்தல்***

***வருமான வரி***

*2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அந்தச் சட்டத்திற்கான திருத்தங்களுக்கும் இணங்க வரி வதிப்பு நோக்கங்கள் நிமித்தம் சீராக்கப்பட்டவாறு குறித்த ஆண்டிற்கான இலாப அடிப்படையில் வருமான வரிக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.*

***பிற்போடப்பட்ட வரி***

*பொறுப்பு முறையியலின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரிக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படும். பிற்போடப்பட்ட வரிக் கணக்கு பின்வரும் விடயங்களைப் பிரதிபலிக்கும்.*

*i) தேய்மானக் கொடுப்பனவுகள் கோரப்படுகின்ற சொத்துக்களின் வரி நோக்கம் நிமிததம் பதிவழிக்கப்பட்ட பெறுமானத்திற்கும் அத்தகைய சொத்துக்களின் தேறிய புத்தகப் பெறுமானத்திற்கும் இடையில் காணப்படும் வித்தியாசத்திற்கு ஏற்புடைய வருமான வரி*

*ii) ஓய்வுதிய நன்மைகள் தொடர்பான நிதியேற்பாட்டிலிருந்து எழுகின்ற கால வித்தியாசத்திற்கு ஏற்புடைய வருமான வரி*

***பணிப்பாளர்களின் அறிக்கை (தொடர்ச்சி)***

***ஒப்பந்தங்களிலுள்ள பணிப்பாளர்களின் அக்கறை***

*நிதிக் கூற்றுக்களுக்கான 19 ஆம் குறிப்பில் வெளிப்படுத்திய விடயங்கள் தவிர, கூட்டுத்தாபத்துடன் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்களில் அல்லது செய்து கொள்வதற்கு உத்தேசமான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களுக்கு நேரடியான அல்லது மறைமுகமான அக்கறை ஏதும் கிடையாது.*

***நிகழும் விடயம்***

*ஒரு நிகழும் விடயமாக தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் ஆற்றலை கெண்டுள்ளது என்பது பணிப்பாளர்களின் அபிப்பிராயமாகும்.*

***நியதிச்சட்டமுறைக் கொடுப்பனவுகள்***

*அரசாங்கத்துடனும் மற்றும் ஊழியர்களுடனும் தொடர்புடைய நியதிச்சட்டமுறைக் கொடுப்பனவுகள் இன்று வரை சரியான வரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் திருப்தி கொள்கின்றனர்.*

***ஊழியர்கள்***

*2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் கூட்டுத்தாபனம் 1477 பேருக்கு தொழில்களை வழங்கியிருந்தது.*

***ஐந்தொகைக் கணக்குத் திகதிக்குப் பின்னர் எழும் நிகழ்வுகள்***

*ஐந்தொகைக் கணக்குத் திகதிக்குப் பின்னர் எழுகின்ற சகல பொருண்மையான நிகழ்வுகளும் கருத்திற்கொள்ளப்பட்டு, அந்தந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புகளில் உகந்த சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்துகைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.*

***வழமைக்கு மாறான விடயங்கள்***

*தனித்தனியான வெளிப்படுத்துகைகளைத் தேவைப்படுத்துகின்ற விதிவிலக்கான / வழமைக்கு மாறான தன்மையிலுள்ள கெடுக்கல்வாங்கல்கள் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புகளில் அறிக்கையிடப்பட்டுள்ளன.*

***கணக்காய்வாளர்கள்***

*கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம் 2014 ஆம் ஆண்டிற்கான கூட்டுத் தாபனத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்யும்.*

*பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி*

*இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்காக*

*செயலளார்*

*2015/05/12*

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. டீஈ-2/ஈ /எஸ்எல்எல்ஆர்டீசீ / 1/14/22
මබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2016 சனவரி 26

தலைவர்,
இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

**இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 35 ஆம் இலக்க இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1968 இன் 15 ஆம் இலக்க இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்தின் 17(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி**

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் துணைக்கம்பனிகளின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - கூட்டுத்தாபனம்**

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி**

மீளாய்வாண்டின் போது இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் கூட்டுத்தாபனத்தின் துணைக்கம்பனி ஒன்றாக

உள்ள வரையறுத்த நில மீட்டல் மற்றும் அபிவிருத்தி (தனியார்) கம்பனியுடன் ஒன்றிணைக்கப்பட்டிருந்தது. துணைக்கம்பனி தொடர்பான கூட்டுத்தாபனத்தின் உரிமையாண்மை அந்த துணைக்கம்பனி வழங்கிய பங்கு மூலதனத்தின் 80 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

### 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - கூட்டுத்தாபனம்

#### 2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

(i) நியமத்தின் பிரகாரம் விசேடமான சந்தர்ப்பமொன்றை விடுத்து வருமானம் மற்றும் செலவினங்கள் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படக்கூடாத போதிலும், அதற்கு முரணாக ரூபா 29,218,308 கூட்டுத்தொகையான நடைமுறையல்லாச் சொத்துக்கள், நடைமுறையல்லாத பொறுப்புக்களுக்கு எதிராக ஈடுசெய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய தொகுதிக்குரிய அறவிடப்பட வேண்டிய வருமான வரி ரூபா 5,123,000 தொகையானது நடைமுறைப் பொறுப்புக்களுக்கெதிராக ஈடுசெய்யப்பட்டு காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 6,894,452 நாணயமாற்று சீராக்கல் நட்டமொன்று ஏனைய செயற்பாட்டு வருமானத்திற்கு ஈடுசெய்யப்பட்டிருந்தது.

(ii) கூட்டுத்தாபனத்திற்குரிய முன்னைய ஆண்டின் பெறுமதிகளை காண்பிக்கும் போது மெதுவாக நகரும் இருப்புகளுக்கான நிதியேற்பாடாக ரூபா 49,344,000 காண்பிக்கப்பட்டிருந்ததெனினும், தொகுதிக்குரியதாக இப்பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தொகுதியின் உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்றில் காட்டப்பட வேண்டிய ரூபா 2,070,000 தொகையான செலுத்த வேண்டிய

இலாபப்பங்கு, வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் விழாக்களுக்காக செலவிடப்பட்ட செலவினங்களில் ரூபா 1,632,552 தொகையானது வேரெஸ் கங்கை செயற்திட்டத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 634,233 தொகை தியத உயன வளாகத்தின் செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தினால் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டியதாக நிலவிய ரூபா 63,057,537 மீதியினுள் உள்ளூராட்சி நிறுவனமொன்றிற்கும் தனியார் கம்பனியொன்றிற்கும் முறையே செலுத்த வேண்டிய ரூபா 1,050,000 மற்றும் ரூபா 862,545 ஆன மறைப் பெறுமதியொன்றும் உள்ளக்கப்பட்டிருந்தது.

(vi) முன்னோக்கிய ஆண்டில் தீர்க்கப்பட வேண்டிய அரச மானியம் ரூபா 695,327,000 மற்றும் குத்தகை முற்பணம் ரூபா 351,115,058 தொகையான பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் வேறாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 773,276,000 தொகையான பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்ட பெறுமதி, வியாபார இருப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த காரணத்தால் நடைமுறை சொத்துக்கள் அந்த தொகையால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02**

ரூபா 1,879,594,400 கிரயமான 2,269,563 கன மீற்றர் கடல் மணல் இருப்பின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய நிகரப் பெறுமதி கணக்கிடப்பட்டு கிரயத்துடன் ஒப்பிடப்பட்டு அவற்றுள் குறைந்த பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு பதிலாக மணல் இருப்பின் பெறுமதி கிரயத்தின் அடிப்படையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07**

(i) முன்னைய ஆண்டின் திரண்ட இலாபத்திற்கு கடந்த வருடத்தின் தவறுகளின் சரிப்படுத்தலாக சீராக்கம் செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 151,525,000 மற்றும் ரூபா 194,093,000 ஆன பிற்போடப்பட்ட வருமான சீராக்கங்கள் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு ஏற்பாடு, காசுப்பாய்ச்சல் கூற்றினுள் நிதி அல்லாத விடயத்தின் கீழ் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 04 விடயங்களின் மீதிகளை விரிவான வருமானக்கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளுடன் இணக்கம் செய்யும் போது ரூபா 404,245 வேறுபட்டது.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08**

மீளாய்வாண்டின் வருமானக் கூற்றிற்கு சீராக்கம் செய்ய வேண்டிய ரூபா 48,486,882 தொகையான நிதியேற்பாட்டு சீராக்கங்கள், முன்னைய ஆண்டின் சீராக்கமாக உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றிற்கு சீராக்கப்பட்டிருந்தது.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 11**

கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதிக்குரிய முறையே ரூபா 1,752,564,028 மற்றும் ரூபா 1,887,222,000 தொகையான நிர்மாணம் பூர்த்தி செய்யப்படாத பணிகள் தொடர்பில் வருமானங்களை இனங்காணல் மற்றும் ஒப்பந்தத்தின் பூர்த்தியாக்கல் சதவீதம் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12**

கூட்டுத்தாபனத்திற்குரிய முறையே ரூபா 38,231,000 மற்றும் ரூபா 46,967,000 தொகைகள் வருமான வரி மற்றும் பிற்போடப்பட்ட வரிக்கொடுப்பனவு தொடர்பில் நியமத்தின் 80(இ), 80(உ), 81(இ) மற்றும் 81(எ) ஆகிய பிரிவுகளின் பிரகாரம் போதியளவான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பாவனைக்கு உகந்த நிலையை அடைந்த தினம் முதல் பெறுமானத்தேய்விடப்பட வேண்டுமெனினும், கூட்டுத்தாபனத்தால் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதிக்குட்பட்ட காலாண்டு முதல் முன்னோக்கி பெறுமானத் தேய்விடும் கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2014 திசெம்பர் மாதம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 17,000,000 பெறுமதியான வாகனங்களுக்கான பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 19**

கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதிக்குரிய முறையே ரூபா 242,126,233 மற்றும் ரூபா 255,253,000 தொகையான ஊழியர் நலன் கொடுப்பனவு தொடர்பில் நியமத்திற்கமைய போதியளவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் ஊழியர் நலன் கொடுப்பனவு நிதியங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்வதற்கு அடிப்படையாகக் கொண்ட எடுகோள்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 20**

கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 695,326,546 தொகையான அரச மானியங்களை வழங்குவதற்கான நிபந்தனைகள் மற்றும் நிகழத்தக்கவைகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் போதியளவான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

(i) கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதிக்குரிய நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 501,354,118 தொகையான முதலீட்டுச் சொத்துக்கள் தொடர்பில் நியமத்தின் பிரகாரம் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) கூட்டுத்தாபனம் வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கியிருந்த காணி, கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களில் முதலீட்டுச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிராததுடன், அந்த

காணிகளின் பெறுமதி தொடர்பில் தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் முன்னைய வருடத்தின் வழுக்களின் சீராக்கமாக மீளாய்வாண்டின் அகழ்வு வருமானத்தில் மற்றும் செலவினத்தில் முறையே ரூபா 36,141,295 மற்றும் ரூபா 36,864,124 கழித்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் அகழ்வு வருமானம் மற்றும் செலவினம் மேற்கூறப்பட்ட பெறுமதிகளால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்காக பயன்படுத்தப்படும் கடல் மணலின் சந்தைப் பெறுமதி, கடல் மணல் விற்பனை வருமானமாக கணக்கீடு செய்யாது, மணல் விற்பனையிலான தேறிய இலாபமான ரூபா 5,310,473 கடல் மணல் விற்பனைப் பெறுமதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3.4 தெளிவுப்படுத்தப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பிற்போடப்பட்ட வரி பொறுப்பு ரூபா 6,453,851 ஆன போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் அப்பெறுமதி ரூபா 13,426,308 தொகையான சொத்தொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கென தயாரிக்கப்பட்டிருந்த வரி அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 4,651,159 ஆக போதிலும் செலுத்த வேண்டிய வருமான வரிக் கணக்கில் அம்மீதி ரூபா 16,933,452 பொறுப்பொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) தியத உயன புகையிரத சிற்றுண்டிச்சாலை செயற்திட்டத்திற்குரிய கிரயமாக மீளாய்வாண்டின் இறுதியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா

48,086,038 ஆன போதிலும் கூட்டுத்தாபனத்தின் அகழ்வு மற்றும் நில மீட்டல் பிரிவின் தகவலின் பிரகாரம் அதன் கிரயம் ரூபா 52,776,991 ஆகும்.

## 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 562,851,630 கடன்பட்டோர் மீதிகளுக்குள் 2 – 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக நிலுவையாகவிருந்த ரூபா 35,752,231 தொகையான கடன்பட்டோர் மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், 5 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவிருந்த மீதிகள் ரூபா 17,650,119 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளி நபர்களிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த காணி விற்பனைகள் முற்பணம் ரூபா 531,415,470 ஆகும். அவற்றுள் ரூபா 489,066,062 தொகையான முற்பணம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதிருந்தது. மேலும், 1 முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக தீர்க்கப்படாத முற்பணத்தின் அளவு ரூபா 20,215,565 ஆகும்.

(இ) வருடக்கணக்காக தீர்ப்பனவு செய்யப்படாத பொறுப்புக்களின் கீழ் இலங்கை மின்சார சபைக்குரிய முத்துராஜவெல காணியிலிருந்து அகற்றப்பட்ட மணலை மீண்டும் நிரப்புவதற்கும் அந்த இடத்தை பாவிப்பதற்குமாக செலுத்த வேண்டிய முறையே ரூபா 180,271,866 மற்றும் ரூபா 186,995,861 தொகைகளை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வெளிநாட்டு நிறுவனமொன்றிற்கு 2014 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான செலுத்த வேண்டிய தொகையான ரூபா 84.7 மில்லியன் ஆண்டிறுதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்ததுடன் நாணயமாற்று வீதத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இப் பொறுப்பு 2014 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் ரூபா 91.6 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1968 இன் 15 ஆம் இலக்க இலங்கை நிலமீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 2(ஆ) 1 ஆம் பிரிவு | மேல், தென், மத்திய மற்றும் ஊவா மாகாணங்களைத் தவிர ஏனைய மாகாணங்களில் கடல் மட்டத்திற்கு கீழுள்ள விளைவற்ற அல்லது சதுப்பு நிலங்கள் உறுதிபடுத்தி வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1982 இன் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 8ஏ ஆம் பிரிவு | உரிய உள்ளூராட்சி நிறுவனங்களால் பெற்றுக்கொள்ள வேண்டிய அங்கீகாரம் பெறப்படாமல் கூட்டுத்தாபனத்தினால் புதிய தலைமை அலுவலக கட்டிடத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதனால் முன்னோக்கிய வருடங்களின் போது அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 12,041,540 அளவிலான பொறுப்பொன்று உருவாகியிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| | நிதிப் பிரமாணம் 395 | கூட்டுத்தாபனத்தினால் அரச வங்கியொன்றில் பேணப்பட்டு வரும் இரு நடைமுறைக் கணக்குகளுக்கான வங்கி கணக்கிணக்க கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

விගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

| | |
|---|---|
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இவ் வங்கிக் கணக்குகளில் நிலவிய மீதி ரூபா 26,080,588 ஆகும். |
| (ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 8.3.8 ஆம் பிரிவு | (i) கூட்டுத்தாபனத்தின் பதவியணிக்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தின் பணிகளுக்கு உதவிய இலங்கை இராணுவம், கப்பற்படை, சிவில் பாதுகாப்பு படையணி மற்றும் பொலிஸ் நிறைவேற்று உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு மீளாய்வாண்டில் ஒருவருக்கு ரூபா 43,500 வீதம் ரூபா 2,293,100 பெறுமதியான வெகுமதி கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தது.<br><br>(ii) மேலும் பதவியணிக்கு ரூபா 30,000 வீதம் வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்றை செலுத்துவதற்காக ரூபா 40,306,064 செலவிடப்பட்டிருந்தது.<br><br>மேற்படி (i) மற்றும் (ii) ஆம் சந்தர்ப்பங்களில் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் ஊக்குவிப்புக் படி கணிப்பீட்டிற்காக முறையான நடைமுறையொன்றும் திறைசேரியினால் பின்பற்றப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

திரண்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினுள் தொகுதி மற்றும் கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னரான இலாபம் முறையே ரூபா 452.7 மில்லியன் மற்றும் ரூபா 431.8 மில்லியனானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான இலாபம் முறையே ரூபா 201.3 மில்லியன் மற்றும் ரூபா 178.6 மில்லியனாகும். முன்னைய ஆண்டன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் தொகுதி மற்றும் கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னரான இலாபத்தில் முறையே ரூபா 251.4 மில்லியன் மற்றும் ரூபா 253.2 மில்லியன் ஆன முன்னேற்றத்தை காட்டியது. தொகுதி மற்றும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடற்ற வருமானம் முறையே ரூபா 415.7 மில்லியனாலும் ரூபா 415.8 மில்லியனாலும் அதிகரித்திருந்தமை தேறிய இலாபத்திலான அதிகரிப்பிற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி விளைவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிர்வாகச் செலவினம் ரூபா 643.9 மில்லியன் வரை 50 சதவீதத்தால் உயர்வடைந்திருந்ததுடன், கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுடன் நேரடியாக தொடர்புபடாத செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 15.1 மில்லியன் மற்றும் பொது செலவினம் ரூபா 22.5 மில்லியன் வரை 40 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை இந்த செலவினம் அதிகரிப்பதற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது.

(ஆ) வேரூஸ் கங்கை செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் அரச வங்கியொன்றில் ரூபா 1,200 மில்லியன் கடன் தொகையினை பெற்றுக்கொண்ட காரணத்தால் கூட்டுத்தாபனத்தின் கடன் உரிமையாண்மை விகிதம் 18 சதவீதத்திலிருந்து 63 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. மேலும் இக் கடன் தொகையில் ரூபா 452.7 மில்லியன் குறித்த செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படாமல் குறுகிய கால முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

4. **செயற்பாட்டு மீளாய்வு**

4.1 **செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆண்டில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் புதிய தலைமை அலுவலக கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 07 வருடங்கள் கடந்த பின்னரும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், அந்த நிர்மாணங்களின் பௌதீக முன்னேற்றம் 60 சதவீதமாகும். அவ்வாறே ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்குரிய கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கு முன்னிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 03 செயற்திட்டங்களுக்காக ரூபா 378.84 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அது மீளாய்வாண்டினுள் கைவிடப்பட்டிருந்தது. இதற்காக செலவிடப்பட்ட பணம் விளைவற்ற செலவினமொன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 54.89 மில்லியன் கிரயமான 02 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராத 23 செயற்திட்டங்கள் தொடபில் ரூபா 162.56 மில்லியன் திட்டமொன்றில்லாமல் செலவிடப்பட்டிருந்தது.

4.2 **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுவதற்கு போதியளவான நிதியேற்பாடு இல்லாத காரணத்தால் ரூபா 592.79 மில்லியன் படியான 24 அரையாண்டு தவணைகளில் தீர்க்க வேண்டிய ரூபா 14,227 மில்லியன் கடன்தொகையினை அரச வங்கியொன்றிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அதில் ரூபா 1,600 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டு அதில் ரூபா 793.7 மில்லியன் கூட்டுத்தாபனத்தின்

நோக்கங்களுக்கு முரணாக செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. அவற்றுள் ரூபா 62.11 மில்லியன் வீரகெட்டிய செயற்திட்டம் எனும் பெயரில் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு முன்னாள் அரசியல்வாதியொருவரின் நினைவுச்சின்ன அருங்காட்சியத்துடனான உருவச்சிலை வடிவமைப்பிற்காகவும், ரூபா 594.8 மில்லியன் தொகையானது பொரலஸ்கமுவ வடக்கு "நிம்ன பூமி" அபிவிருத்தி செயற்திட்டத்திற்காவும், ரூபா 21.7 மில்லின் தொகை 16 ஆவது போப்பாண்டவர் பெனடிக் ஆசிய கலாசார மத்திய நிலையத்தின் உத்தேச தடாகத்தை அபிவிருத்தி செய்வதற்காகவும் செலவிடப்பட்டிருந்தன.

(ஆ) பிரதேச செயலாளர் அலுவலகங்களுடாக கையேற்கப்பட்ட காணிகளுக்காக செலுத்த வேண்டிய நட்டஈட்டு கொடுப்பனவுகளை துரிதப்படுத்துவதற்காக முறையான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் வருடாந்தம் 7 சதவீத வட்டியுடன் நட்டஈட்டினை தீர்ப்பதற்கு கூட்டுத்தாபனத்திற்கு நேர்ந்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான செலுத்த வேண்டிய நட்ட ஈடு மற்றும் வட்டிப் பெறுமதி ரூபா 229.46 மில்லியன் ஆகும்.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தியத உயன உணவு விற்பனைப் பிரிவின் பாவனைக்கென கொள்வனவு நடைமுறையினை பின்பற்றாது ரூபா 2.58 மில்லியன் செலவிடப்பட்டு 100 மரக்கறித் தட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இப் பொருள் விநியோகம் குறித்த தினத்தை விட நான்கு மாதங்களிற்கும் அதிகமான காலம் தாமதப்படுத்தி வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 12 ஆந் திகதி முதல் 2015 நவம்பர் 15 ஆந் திகதி வரையிலும் பாவனைக்கு எடுக்கப்படாமல் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கெல்லையுடன் தொடர்புபடாத செயற்பாடுகளுக்காக அதாவது அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை பிரதேசங்களுக்காக வெள்ள நிவாரணம் வழங்குவதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 12.4 மில்லியன் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், அப்பொருட்கள் பதுளை பிரதேசத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது சிக்கலை தோற்றுவித்திருந்தது.

(இ) அநுராதபுரம் குவிச்சன்குளத்தின் புனரமைப்பின் கீழ் வெள்ள நீர் கட்டுப்பாட்டிற்காக கிடைத்த நிதிகளில் ரூபா 297.71 மில்லியன், அந்த நோக்கத்திற்கு முரணாக செலவிடப்பட்டு குளதத்தில் சீப்லேன் பரப்பக் கூடியவாறு ஒழுங்கமைத்து அதனுடன் தொடர்புடைய நகர அழகூட்டல் பணிகளுக்காக ரூபா 94.32 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் கடல் மணல் அகழப்பட்டு விற்பனை செய்யப்படுவதோடு அந்த நடைமுறையுடன் தொடர்புடைய பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருட்கள் அதிகாரச் சட்டத்திற்கு முரணாக 2013 ஆம் ஆண்டிலிருந்து மணல் போக்குவரத்திற்காக கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று, மணல் கொள்வனவு செய்வோருக்கு மணல் போக்குவரத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலமையின் அடிப்படையில் அரசிற்கு அறவிடப்பட வேண்டியாதாயிருந்த கனிப்பொருட்கள் போக்குவரத்து அனுமதிப்பத்திர கட்டணம் 02 வருடங்களினுள் இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) மேலும் 1993 நவம்பர் 26 ஆந் திகதிய 794/23 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம் உடமையாக்கப்பட்ட அனைத்து கனிப்பொருள் அளவின் அடிப்படையில் அரச பங்கு செலுத்த வேண்டுமெனினும் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் கூட்டுத்தாபனத்தால் அகழ்ந்தெடுக்கப்பட்ட 4,478,679 மீட்டர் கியூப் கடல் மணலுக்காக குறித்துரைக்கப்பட்டவாறு அரச பங்கினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய அரச பங்கு மற்றும் தாமதக் கட்டணமாக ரூபா 44.7 மில்லியன் செலுத்துமாறு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் கூட்டுத்தாபனத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தது. இந் நிலமையை கவனத்திற் கொள்ளாமல் கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டினுள் விற்பனை செய்யப்பட்ட கடல் மணல் அளவின் அடிப்படையில் மாத்திரம் அரச பங்காக ரூபா 6.9 மில்லியன் நிதியேற்பாடு நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) மேற்குறித்த விடயங்களின் பிரகாரம் 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிப்பொருட்கள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளமையால் குறித்த தினத்திற்குரிய அரச பங்கினை செலுத்தாத காரணத்தால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 13 மில்லியன் தொகையான தாமதக் கட்டணம் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(உ) வேரெஸ் கங்கை செயற்திட்டத்தின் கீழ் பூர்த்தியாக்கப்படாத வேலையாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 104,995,322 தொகையினுள் மீளாய்வாண்டின் இறுதி விருந்துபசாரத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 1,623,552 உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தினுள் கூட்டுத்தாபனத்தின் அரச வங்கியொன்றின் கணக்கொன்றினூடாக செலுத்த வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 16,376,156 பெறுமதியான 08 காசோலைகள் உரிமையாளர்களுக்கு கையளிக்கும் போது 2015 மார்ச் மாதத்தில் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதனை இரத்துச் செய்வதற்கான காரணங்களாக அமைந்த விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்குரிய சொத்துக்கள் வரிசை அமைச்சிற்கோ அல்லது ஏனைய அரச நிறுவனங்களுக்கோ வழங்குவதற்கு அனுமதியற்ற போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் பதவியணியில் 05 பேர் ஏனைய அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் சம்பளம் மற்றும் படிகளாக கூட்டுத்தாபனத்தால் ரூபா 4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1,671 ஆக இருந்ததுடன், அத்தினத்தில் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 1,475 ஆனமையால் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 196 ஆகும்.

(ஆ) மேலும், அங்கீகரிக்கப்படாத பிரதி பொது முகாமையாளர் (சிவில்) பதவிக்கு நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்க்கப்பட்டு வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்த அடிப்படையில் ஆட் சேர்க்கப்பட வேண்டிய 50 சாரதிகள் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

**4.6 வாகனப் பயன்பாடு**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் தலைவரின் பாவனைக்கென கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 6,150,000 தொகையான வாகனமொன்று அத்தேவைப்பாட்டிற்கு புறம்பாக கொள்வனவு செய்யப்பட்ட தினத்திலிருந்து கொழும்பு தலைநகரை அன்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்ட பணிப்பாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 10 வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு கெப் வண்டிகளின் இயந்திரமில்லாத ஏனைய பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 2.2 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

**4.7 முறையாக கையேற்கப்படாத காணிகளில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

---

காணியின் உரித்தினை கூட்டுத்தாபனத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டினுள் கூட்டுத்தாபனத்தினால் புகையிரத பெட்டிகளை நிலையாக நிலத்தோடு இணைத்து நியத உயன வளாகத்தில் சிற்றுண்டிச்சாலை தொகுதியொன்றினை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இச் செயற்பாடு 2014 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் பாதீட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**4.8 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

---

கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2.5 மில்லியன் கடன் தொகை மீளாய்வாண்டில் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 4.9 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத இருப்பு மீதி ரூபா 867,000 ஆகவும் மெதுவாக அசையும் இருப்பு மீதி ரூபா 124.3 மில்லியனாகவும் இருந்தது. இதன் பிரகாரம் முன்னைய வருடத்திற்கு ஒப்பாக மீள்யாவாண்டில் மெதுவாக நகரும் இருப்பின் பெறுமதி 94 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 4.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கூட்டுத்தாபனத்தால் வேரூஸ் கங்கை செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த நடை பாதை மற்றும் சிற்றுண்டி பிரிவு திறப்பு விழாவிற்கு உணவு வகைகளை வழங்குதல் மற்றும் இசை நிகழ்ச்சிகளுக்காக முறையான கொள்வனவு நடைமுறையொன்றினை பின்பற்றாமலும் தேவைப்பாடொன்றியும் ரூபா 33.78 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுவதன் ஊடாக நாடு பூராவும் உள்ள சதுப்பு நிலம், தரிசு நிலம் அல்லது சேற்றுநிலம் என்பவற்றை இனங்கண்டு, நில மீட்டல்களை கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தின் 2013 - 2017 காலப்பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டத்திலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

முகாமைத்துவத்தால் திருத்த வேண்டியிருந்த துறைகள் தொடர்பில் வழிகாட்டல்களுக்கான முக்கியமான கருவியாக உள்ளக கணக்காய்வு பயன்படுத்தப்பட வேண்டும். எவ்வாறெனினும், பாரியளவிலான நிர்மாண ஒப்பந்தக்காரராக கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் விரிவாக்கப்பட்டதுடன் அர்த்தமுள்ள விளைவுகளை அடைவதற்கு உள்ளக கணக்காய்வு பதவியணியை பலப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தால் முறைப்படி கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.3 கொள்வனவுத் திட்டம்**

கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஏனைய வளங்களின் செயற்திறனான கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பிற்கு இயலக்கூடியவாறு கொள்வனவு திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றம 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிற்கு இடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**5.5 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் விடயங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்தது.

(அ) உரிய பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் தொடர்ச்சியாக பதவியணிக்கு தொழில்சார் படிகள் செலுத்துதல்.

(ஆ) உத்தியோகத்தர்களின் வாகனக் கடனின் அடிப்படையில் அறவிடப்படுகின்ற வட்டி தொடர்ச்சியாக மீளளிப்பு செய்யப்பட்டிருந்தமை.

(இ) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 30.2 மில்லியன் கிரயத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட 3.5 ஏக்கர் பரப்புடைய காணியொன்றில், பிரதேச செயலாளரின் ஒத்துழைப்புடன் கோவிலொன்றை கட்டிய தரப்பினருக்கெதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை துரிதமாக எடுக்குமாறு 2012 நவம்பர் 30 ஆந் திகதிய பொது முயற்சிகள் குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், உரிய கட்டளையினை அமுல்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தினால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்ததுடன், குறித்த கோவிலினால் பயன்படுத்தப்படுகின்ற நிலத்தின் அளவு 02 ஏக்கர்களும் 11 பேர்ச் எனவும்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

அதன் பெறுமதி ரூபா 18.5 மில்லியன் எனவும் இதுவரையிலும் கண்டறியப்பட்டுள்ளதாக தலைவர் கூறியுள்ளார்.

**5.6 சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றல்**

நாடுபூராகாவும் மேற்கொள்ளப்படுகின்ற அனுமதிக்கப்படாத நில மீட்டல்கள் பல சுற்றாடல் மற்றும் சமூக பிரச்சனைகளை உருவாக்கியிருந்ததுடன் அவை எதிர்கால சந்ததியினருக்கு தள்ளப்பட வேண்டியிருக்கும் எவ்வாறாயினும், கூட்டுத்தாபனம் அத்தகைய அனுமதிக்கப்படாத நில மீட்டல்களை பொதுமக்கள்களிற்கு புகட்டுவதற்கும் தவிர்ப்பதற்கும் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தியிருக்கவில்லை. எவ்வாறெனினும், கூட்டுத்தாபனத்தின் அதிகாரச்சட்டம் மூலம் போதியளவிலான அதிகாரங்கள் கிடைக்காமையினால் சிக்கல்கள் நிலவுவதாகவும் அதிகாரச்சட்டத்தினை திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறும் உள்ளதென தலைவர் தெரிவித்துள்ளார்.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கொள்வனவு
(ஆ) செயற்திட்ட நடவடிக்கைகளின் நிதியிடல்
(இ) வாடகை முகாமைத்துவம்
(ஈ) நிதிக் கட்டுப்பாடு
(உ) கணக்கீடு

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**2014.01.01 முதல் 2014.12.31 வரை அறிக்கையிடும் காலப் பகுதிக்கான திரண்ட முழுமையான வருமானக் கூற்று**

| | குறிப்பு | குழு 2014 ரூ.000 | குழு 2013 மீளெடுத் துரைக்கப் பட்ட ரூ.000 | கூட்டுத்தாபனம் 2014 ரூ.000 | கூட்டுத்தாபனம் 2013 மீளெடுத் துரைக்கப் பட்ட ரூ.000 |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 1 | **2,029,029** | 1,723,800 | **1,622,780** | 1,478,028 |
| விற்பனைகள் ஆகுசெலவு | 2 | **(1,588,882)** | (1,370,764) | **(1,230,822)** | (1,166,777) |
| முழுமொத்த இலாபம் | | **440,147** | 353,036 | **391,958** | 311,251 |
| கிடைத்த திறைசேரி மானியம் | | **1,608,821** | 1,024,999 | **1,608,821** | 1,024,999 |
| ஏனைய மானியங்கள் | | **11,336** | - | **11,336** | - |
| ஏற்பட்ட ஆகுசெலவு | | **(1,620,157)** | (1,024,999) | **(1,620,157)** | (1,024,999) |
| | | **-** | - | **-** | - |
| ஏனைய இயக்கச்செயற்பாடு சார்ந்த வருமானம் | 3 | **112,572** | 121,097 | **109,436** | 114,513 |
| நிருவாகம் சார்ந்த செலவுகள் | 4 | **(672,284)** | (455,490) | **(643,924)** | (430,058) |
| ஏனைய இயக்கச்செயற்பாடு சார்ந்த செலவுகள் | 5 | **(299,647)** | (202,072) | **(296,703)** | (200,569) |
| | | **(971,931)** | (657,562) | **(940,627)** | (630,627) |
| திறைசேரி மானியக் கருத்திட்டங்களுக்கு மாற்றப்பட்ட மேன்தலைகள் | | **271,656** | 200,396 | **271,656** | 200,396 |
| | | **(700,275)** | (457,166) | **(668,971)** | (430,231) |
| **இயக்கச்செயற்பாடுகளில் இருந்து வரும் இலாபம்/(நட்டம்)** | | **(147,556)** | 16.967 | **(167,577)** | (4,467) |
| நிதி சார்ந்த ஆகுசெலவு | 6 | **(14,137)** | (14,397) | **(13,206)** | (13,754) |
| இயக்கச்செயற்பாடு சாராத வருமானம் | 7 | **614,422** | 198,726 | **612,666** | 196,867 |
| **வரிக்கு முன்னருள்ள இலாபம்/(நட்டம்)** | | **452,729** | 201,296 | **431,883** | 178,646 |
| வரிக்கான ஏற்பாடு | 8 | **(85,948)** | (28,761) | **(85,198)** | (26,261) |
| **குறித்த ஆண்டிற்கான வரிக்குப் பின்னருள்ள இலாபம்/(நட்டம்)** | | **366,781** | 172,535 | **346,685** | 152,385 |
| **தாய் கம்பனியின் சம பங்குதார்** | | | | | |
| **தரப்புகளுக்கு சேரவேண்டியவை** | | **355,778** | 166,875 | | |
| **கட்டுப்பாடற்ற வட்டி** | | **11,003** | 5,660 | | |

*அடைப்புக்குறிகளினுள் காணப்படும் கணக்குகள் கழிவுகளைக் காட்டும்.*

*155 முதல் 163 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் 164 முதல் 186 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாக விளங்குகின்றன.*

***திசம்பர் 31 அறிக்கையிடும் கால முடிவிலுள்ள திரண்ட நிதி நிலைக் கூற்று***

| | | குழு | | கூட்டுத்தாபனம் | |
|---|---|---|---|---|---|
| | குறிப்பு | 2014<br>ரூ.000 | 2013<br>மீளெடுத் துரைக்கப் பட்ட<br>ரூ.000 | 2014<br>ரூ.000 | 2013<br>மீளெடுத் துரைக்கப் பட்ட<br>ரூ.000 |
| ***சொத்துக்கள்*** | | | | | |
| ***நடைமுறையல்லாத சொத்துக்கள்*** | | | | | |
| *சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்* | 9 | **1,090,786** | 707,014 | **1,086,421** | 704,214 |
| *முதலீட்டுச் சொத்துக்கள்* | 18 | **501,354** | 501,354 | **501,354** | 501,354 |
| *துணைக் கம்பனிகளிலுள்ள முதலீடுகள்* | 10 | - | - | **2,000** | 2,000 |
| *ஏனைய முதலீடுகள்* | 11 | **25,486** | 18,514 | **-** | - |
| | | **1,617,626** | 1,226,882 | **1,589,775** | 1,207,568 |
| ***நடைமுறைச் சொத்துக்கள்*** | | | | | |
| *பொருட்பதிவேடுகள்* | 12 | **4,972,174** | 3,666,823 | **4,816,008** | 3,589,282 |
| *வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்* | 13 | **1,041,479** | 707,697 | **919,261** | 616,265 |
| *வைப்புக்களும் முற்கொடுப்பனவுகளும்* | | **16,658** | 13,069 | **15,698** | 10,484 |
| *செலுத்தப்பட்ட ஊக்குவிப்பு முற்பணம்* | | **-** | - | **-** | - |
| *சம்பந்தப்பட்ட தரப்பு வருமதிகள்* | | **46,247** | 41,381 | **46,247** | 41,381 |
| *காசும் காசு ஒப்புரவுகளும்* | 14 | **1,010,596** | 882,083 | **992,748** | 863,613 |
| ***மொத்த நடைமுறைச் சொத்துக்கள்*** | | **7,087,154** | 5,311,053 | **6,789,962** | 5,121,025 |
| ***மொத்தச் சொத்துக்கள்*** | | **8,704,780** | 6,537,935 | **8,379,737** | 6,328,593 |
| ***ஒப்புரவும் பொறுப்புக்களும்*** | | | | | |
| ***மூலதனமும் ஒதுக்கீடுகளும்*** | | | | | |
| *பங்களித்த மூலதனம்* | | **1,000** | 1,000 | **1,000** | 1,000 |
| *மீள்மதிப்பீட்டு ஒதுக்கீடு* | | **-** | - | | - |
| *சொத்துக்கள் மீளிடல் ஒதுக்கீடு* | | **1,472** | 1,472 | **-** | - |
| *மூலதன ஒதுக்கீடு* | | **13,461** | 13,461 | **13,461** | 13,461 |
| *வருமான ஒதுக்கீடு* | | **2,545,445** | 2,147,153 | **2,529,545** | 2,140,346 |
| *கட்டுப்பாடற்ற வட்டி* | | **15,632** | 4,629 | **-** | - |
| ***மொத்த மூலதனமும் ஒதுக்கீடுகளும்*** | | **2,577,010** | 2,167,715 | **2,544,006** | 2,154,807 |
| ***நடைமுறையல்லாத பொறுப்புக்கள்*** | | | | | |
| *காணிகள் மீதான நஷ்டஈடு* | | **229,465** | 227,112 | **229,465** | 227,112 |
| *ஏனைய நடைமுறையல்லாத பொறுப்புக்கள்* | 15 | **1,050,692** | 776,964 | **1,046,492** | 772,764 |
| *பணிக்கொடைக்கான ஏற்பாடு* | | **255,253** | 222,374 | **242,126** | 209,469 |
| *நீண்டகாலப் பற்றுக்கள்* | | **1,200** | 1,200 | **-** | - |
| *பிற்போடப்பட்ட வரி* | | **(15,792)** | (75,180) | **(13,426)** | (60,393) |
| ***மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்*** | | **1,520,818** | 1,152,470 | **1,504,657** | 1,148,952 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ***நடைமுறைப் பொறுப்புக்கள்*** | | | | | |
| *விஷேட கருத்திட்டங்கள் மீதான பொறுப்புக்கள் - இ.அ.* | *16* | ***2,102,525*** | *1,146,384* | ***2,102,525*** | *1,146,384* |
| *வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள்* | *17* | ***2,449,960*** | *2,042,546* | ***2,200,912*** | *1,872,674* |
| *சம்பந்தப்பட்ட தரப்பு கொடுமதிகள்* | | ***34,917*** | *35,571* | ***16,584*** | *26,713* |
| *வரி* | | ***(5,123)*** | *(22,131)* | ***11,053*** | *(22,131)* |
| *வங்கி மேலதிகப் பற்றுக்கள்* | *14* | ***24,673*** | *15,380* | ***-*** | *1,194* |
| ***மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்*** | | ***4,606,952*** | *3,217,750* | ***4,331,074*** | *3,024,834* |
| ***மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்*** | | ***8,704,780*** | *6,537,935* | ***8,379,737*** | *6,328,593* |

*பணிப்பாளர்கள் சபை சார்பாக அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது.*

*155 முதல் 163 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் 164 முதல் 186 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாக விளங்குகின்றன.*

***தலைவர்*** ***பொது முகாமையாளர்*** ***பி.பொ.மு. (நிதி)***

**2014.01.01 முதல் 2014.12.31 வரை அறிக்கையிடும் காலப் பகுதிக்கான ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று**

**தாய் கம்பனியின் சம பங்குதாரர் தரப்புகளுக்கு சேரவேண்டியவை**

குழு

| | பங்களித்த மூதலீடு ரூ.000 | மூலதன ஒதுக்கீடு ரூ.000 | சொத்துக்கள் மீளிடல் ஒதுக்கீடு ரூ.000 | வருமான ஒதுக்கீடு ரூ.000 | கட்டுப்பாடற்ற வட்டி ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| 2013.01.01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,000 | 13,461 | 1,472 | 1,979,247 | - | 1,995,180 |
| குறித்த ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | - | - | - | 119,980 | 4,069 | 124,049 |
| மானிய நட்ட உள்ளீர்ப்பு நிலுவை | | | | 1,031 | (1,031) | - |
| 2013.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,000 | 13,461 | 1,472 | 2,100,258 | 3,038 | 2,119,229 |
| மீளெடுத்துரைக்கப்பட்ட - 2013 | | | | | | |
| 2013.01.01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,000 | 13,461 | 1,472 | 1,979,247 | - | 1,995,180 |
| குறித்த ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | - | - | - | 166,875 | 5,660 | 172,535 |
| மானிய நட்ட உள்ளீர்ப்பு நிலுவை | | | | 1,031 | (1,031) | - |
| 2013.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,000 | 13,461 | 1,472 | 2,147,153 | 4,629 | 2,167,715 |
| 2014.01.01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,000 | 13,461 | 1,472 | 2,147,153 | 4,629 | 2,167,715 |
| குறித்த ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | - | - | - | 355,778 | 11,003 | 366,781 |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றின் மீள்மதிப்பீடு | | | | | | |
| திரண்ட தேய்மான சீராக்கல்கள் | | | | 194,039 | | 194,039 |
| பிற்போடப்பட்ட வருமான சீராக்கல்கள் | | | | (151,525) | | (151,525) |
| 2014.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | **1,000** | **13,461** | **1,472** | **2,545,445** | **15,632** | **2,577,010** |

அடைப்புக்குறிகளினுள் காணப்படும் கணக்குகள் கழிவுகளைக் காட்டும். 155 முதல் 163 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் 164 முதல் 186 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாக விளங்குகின்றன.

## *2014.01.01 முதல் 2014.12.31 ஆம் திகதி வரை அறிக்கையிடும் காலத்திற்கான ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று*

***கூட்டுத்தாபனம்***

| | பங்களித்த மூலதனம் ரூ.000 | மூலதன ஒதுக்கீடு ரூ.000 | வருமான ஒதுக்கீடு ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|
| கணக்காய்வு செய்யப்பட்ட 2013.01.01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,000 | 13,461 | 1,987,961 | 2,002,422 |
| குறித்த ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | - | - | 103,899 | 103,899 |
| **2013.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 1,000 | 13,461 | 2,091,860 | 2,106,321 |
| கணக்காய்வு செய்யப்பட்ட 2013.01.01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,000 | 13,461 | 1,987,961 | 2,002,422 |
| குறித்த ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | - | - | 152,385 | 152,385 |
| மீளெடுத்துரைக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,000 | 13,461 | 2,140,346 | 2,154,807 |
| மீளெடுத்துரைக்கப்பட்ட 2014.01.01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,000 | 13,461 | 2,140,346 | 2,154,807 |
| குறித்த ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | - | - | 346,685 | 345,685 |
| **சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகணரங்கள் என்பவற்றின் பாவனை கால மீள்மதிப்பீடு** | | | | |
| -திரண்ட தேய்மான சீராக்கல்கள் | | | 194,039 | 194,039 |
| -பிற்போடப்பட்ட வருமான சீராக்கல்கள் | | | (151,525) | (151,525) |
| **2014.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | **1,000** | **13,461** | **2,529,545** | **2,544,006** |

***2014 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று***

| | குழு | | கூட்டுத்தாபனம் | |
|---|---|---|---|---|
| | **2014** | 2013 | **2014** | 2013 |
| | **ரூ.000** | ரூ.000 | **ரூ.000** | ரூ.000 |
| ***இயக்கச்செயற்பாடுகளில் இருந்து வரும் (பயன்பட்ட) காசுப் பாய்ச்சல்*** | | | | |
| *வரிக்கு முன்னருள்ள இலாபமும் ஏனைய சீராக்கல்களும்* | 460,094 | 140,945 | 439,248 | 118,295 |
| ***பின்வருவனவற்றுக்கான சீராக்கல்கள்*** | | | | |
| *தேய்மானத்திற்கான ஏற்பாடு* | 92,534 | 80,745 | 91,139 | 79,916 |
| *சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கான ஏற்பாடு* | 7,503 | (11,775) | 8,218 | (11,775) |
| *தீர்ப்பனவு செய்யப்படாத பதிவழிக்கப்பட்ட கடன்கள்* | 1,110 | - | (716) | - |
| *வட்டி வருமானம்* | (70,383) | (96,436) | (68,627) | (94,579) |
| *நிலையான சொத்துக்களினதும் பாவிக்கப்படாத பொருட்களினதும் விற்பனை மீதான இலாபம்* | (6,320) | (2,440) | (6,320) | (2,440) |
| *விரைவில் நகராத இருப்புப் பொருட்களுக்கான ஏற்பாடு* | 3,331 | 3,686 | 3,331 | 3,686 |
| *விற்பனை செய்யப்பட்ட காணிகள் தொடர்பான நஷ்டஈட்டுக்கான ஏற்பாடு* | 847 | 2,369 | 847 | 2,369 |
| *குத்தகைச் சொத்துக்களின் தேய்மானம்* | 24 | 24 | 24 | 24 |
| *திட்டவட்டமான நன்மைகள் திட்டத்திற்கான ஏற்பாடு* | 48,237 | (53,260) | 46,662 | (57,629) |
| *சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றின் மீள்மதிப்பீடு* | | | | |
| - *திரண்ட தேய்மான சீராக்கல்கள்* | (194,039) | - | (194,039) | - |
| - *பிற்போடப்பட்ட வருமான சீராக்கல்கள்* | 151,525 | - | 151,525 | - |
| ***தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னருள்ள இயக்கச்செயற்பாடு சார்ந்த இலாபம்*** | 494,463 | 63,858 | 471,292 | 37,867 |
| ***மூலதன மாற்றங்கள்*** | | | | |
| *பொருட்பதிவேடுகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு* | 88,085 | (819,211) | 85,253 | (650,812) |
| *WIP-சொந்தக் கருத்திட்டங்களின் அபிவிருத்தியிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு* | (125,987) | (73,141) | (125,986) | (73,141) |
| *WIP - வாடிக்கையாளர் கருத்திட்டங்களின் அபிவிருத்தியிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு* | (1,267,620) | 7,489 | (1,187,242) | (137,464) |
| *பணி நிறைவு செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு* | 42,143 | 8,778 | 42,142 | 8,778 |
| *வைப்புகளிலும் முற்கொடுப்பனவுகளிலும் காணப்படும் (அதிகரிப்பு)/குறைவு* | (3,244) | (4,094) | (5,213) | (2,287) |
| *செலுத்தப்பட்ட ஊக்குவிப்பு முற்பணங்களிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு* | (159,053) | 51,621 | (159,052) | (25,884) |
| *வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளிலுள்ள* | (182,413) | (107,960) | (151,445) | (53,587) |

| | | | | |
|---|---|---|---|---|
| *(அதிகரிப்பு)/குறைவு* | | | | |
| *சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வரவேண்டிய தொகைகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு* | *(4,866)* | *(8,323)* | *(4,865)* | *4,156* |
| *சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வரவேண்டிய தொகைகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு* | *(7,673)* | *(726)* | *(10,129)* | *(11,219)* |
| *வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகளிலுள்ள சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வரவேண்டிய தொகைகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு* | *1,374,109* | *623,090* | *1,295,861* | *643,912* |
| ***இயக்கச்செயற்பாடுகளில் இருந்து (பயன்பட்ட) ஈட்டப்பட்ட காசு*** | *247,944* | *(258,619)* | *250,616* | *(259,681)* |
| *செலுத்தப்பட்ட பணிக்கொடை* | *(15,328)* | *(7,258)* | *(14,004)* | *(6,507)* |
| *செலுத்தப்பட்ட வருமான வரி* | *(5,002)* | *(37,827)* | *(4,680)* | *(37,658)* |
| ***இயக்கச்செயற்பாடுகளில் இருந்து (பயன்பட்ட) காசுப் பாய்ச்சல்*** | *227,614* | *(303,704)* | *231,932* | *(303,846)* |
| ***முதலீட்டுச் செயற்பாடுகளில் இருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்*** | | | | |
| *சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றின் கொள்வனவு* | *(171,650)* | *(77,267)* | *(168,690)* | *(76,627)* |
| *பிற்போடப்பட்ட பொறுப்புகளிலுள்ள முதலீடுகள்* | *(6,972)* | *785,615* | *-* | *793,045* |
| *கிடைத்த வட்டி வருமானம்* | *66,684* | *96,436* | *63,544* | *78,598* |
| *நிலையான சொத்துக்களினதும் பாவிக்கப்படாத பொருட்களினதும் விற்பனையில் இருந்து வரும் இலாபம்* | *6,401* | *2,502* | *6,401* | *2,502* |
| ***முதலீட்டுச் செயற்பாடுகளில் இருந்து (பயன்பட்ட) வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்*** | *(105,537)* | *807,285* | *(98,745)* | *797,518* |
| ***நிதி சார்ந்த செயற்பாடுகளில் இருந்து (பயன்பட்ட) வரும் காசுப் பாய்ச்சல்கள்*** | | | | |
| *செலுத்தப்பட்ட வட்டியும் நஷ்டஈடும்* | *(2,858)* | *(28,252)* | *(2,858)* | *(28,251)* |
| ***நிதியீட்டும் செயற்பாடுகளில் இருந்து (பயன்பட்ட) தேறிய காசுப் பாய்ச்சல்கள்*** | *(2,858)* | *(28,252)* | *(2,858)* | *(28,251)* |
| *காசும் காசு ஒப்புரவுகளிலும் உள்ள தேறிய அதிகரிப்பு/(குறைவு)* | *119,219* | *475,330* | *130,329* | *465,421* |
| *குறித்த ஆண்டு ஆரம்பத்திலிருந்த காசும் காசு ஒப்புரவுகளும்* | *866,704* | *391,374* | *862,419* | *396,999* |
| *குறித்த ஆண்டு முடிவிலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும்* | *985,923* | *866,704* | *992,748* | *862,420* |
| ***காசும் காசு ஒப்புரவுகளும் பற்றிய பகுப்பாய்வு*** | | | | |
| *வங்கியிலுள்ள அனுகூலமான காசு* | *1,010,596* | *882,084* | *992,748* | *863,614* |
| *வங்கி மேலதிகப் பற்றுக்கள்* | *(24,673)* | *(15,380)* | *-* | *(1,194)* |
| | *985,923* | *866,704* | *992,748* | *862,420* |

***முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்***

***1. கணக்கீட்டு அடிப்படை***

*நிதிக் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் விதிக்கப்பட்ட SLFRS/LKAS 2011 - இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. கணக்குகளைப் பாதிக்கின்ற பணவீக்கம் சார்ந்த காரணிகளுக்கான சீராக்கல்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. பொருத்தமானவிடத்து, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் இதனைத் தொடர்ந்து வருகின்ற குறிப்புகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.*

*கணக்கீட்டுக் கொள்கைகள் வழமையாக தொடர்ச்சியாக கூட்டுத்தாபனத்தின் மூலம் பிரயோகிக்கப்பட்டுள்ளன. இக்கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டின் கணக்கீட்டுக் கொள்கைகளை ஒத்தனவாகும். நடைமுறை ஆண்டு நிலைமையை உறுதிசெய்துகொள்வதற்காக தேவையான போது முன்னைய ஆண்டின் கணக்குகள் மீளொழுங்கமைக்கப்பட்டுள்ளன.*

***திரண்ட நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் அடிப்படை***

*இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் திரண்ட நிதிக் கூற்றுக்களில் அதன் துணைக் கம்பனியான வ/ப காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்தி (தனியார்) கம்பனியின் நிதிக் கூற்றுக்களும் உள்ளங்கியிருக்கின்றன.*

*கணக்கீட்டுக் கொள்கைகள் வழமையாக தொடர்ச்சியாக கூட்டுத்தாபனத்தின் மூலம் பிரயோகிக்கப்பட்டுள்ளன. இக்கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டின் கணக்கீட்டுக் கொள்கைகளை ஒத்தனவாகும். நடைமுறை ஆண்டு நிலைமையை உறுதிசெய்துகொள்வதற்காக தேவையான போது முன்னைய ஆண்டின் கணக்குகள் மீளொழுங்கமைக்கப்பட்டுள்ளன.*

*கூட்டுத்தாபனத்தின் மூலம் கணக்கீட்டுக் கொள்கைகள் பிரயோகிக்கப் பட்டுள்ளன. பிரிவுகள் முன்னைய ஆண்டுடன் இணங்கிக் காணப்படுகின்றன.*

*ஒரே மாதிரியான கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகித்து சந்தர்ப்ப சூழ்நிலைகளிலுள்ள கொடுக்கல்வாங்கல்கள் / நிகழ்வுகள் என்பவற்றுக்கான திரண்ட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. தேவையான போது நிதிக் கூற்றுக்களில் பொருத்தமான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*நிதி சார்ந்த கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அடைப்புக்குறிகளினுள் காணப்படும் கணக்குகள் கழிவுகளைக் காட்டும்.*

*இந்தக் கூட்டுத்தாபனத்திற்கும் அதன் துணைக் கம்பனிக்கும் ஒரு பொதுவான நிதி ஆண்டு காணப்படுகின்றது. இந்த நிதி ஆண்டு திசம்பர் 31 இல் முடிவடையும் நிதி ஆண்டாகும்.*

## *2. சொத்துக்களும் அவற்றின் விலைமதிப்பீட்டு அடிப்படையும்*

### *2.1 சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்*

*சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பன கொள்வனவு அல்லது நிர்மாண ஆகுசெலவில், குறைந்த திரண்ட தேய்மான அடிப்படையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சொத்துக்களை அவற்றின் எதிர்பார்த்த பாவனை நிலைக்குக் கொண்டுவருவதற்காக செலவாகுகின்ற ஏதாவது ஆகுசெலவு கொள்வனவு அல்லது நிர்மாண ஆகுசெலவில் உள்ளடங்கும்.*

*GCFC மற்றும் EI கருத்திட்டங்களின் கீழ் கிடைத்த கட்டிடங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திராதிகள் என்பன சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்ற விடயத்தின் கீழ் தனித்தனியாகக் காட்டப்பட்டுள்ளன.*

*லூனாவ சுற்றடால் மேம்பாட்டு மற்றும் சமுதாயக் கருத்திட்டம், கொழும்புப் பெரும்பாக நகர அபிவிருத்திக் கருத்திட்டம், வெரஸ் கங்கைக் கருத்திட்டம் ஆகிய கருத்திட்டங்களின் கீழ் கிடைத்த சொத்துக்கள் பொறித்தொகுதிகள், சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் என்ற விடயத்தின் கீழ் தனித்தனியாகக் கணக்கில்கொள்ளப்பட்டுள்ளன.*

*அமைச்சிலிருந்து கிடைத்த வாகனங்கள் (இலவசமாகக் கிடைத்த) விலை மதிப்பிடப்பட்டு தனித்தனியாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.*

*சொத்துக்கள் (கட்டிடங்கள், பொறித்தொகுதிகள், இயந்திராதிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள்) மொத்த முழுமையான பயனுள்ள பாவனை காலத்தின் அடிப்படையில் தேய்மானம் கணிக்கப்பட்டுள்ளன. இன்றும் கூட கூட்டுத்தாபனம் இவற்றில் இருந்து பொருளாதார ரீதியான நன்மைகளை அடைகின்றது. இவை எஞ்சிய பயனுள்ள பாவனை காலம் அடங்கலாக வருட இறுதியில் மீள்-விலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. தேய்மானம் மற்றும் வருமான ஒதுக்கீடு ஆகியவற்றின் கீழ் இது சீராக்கப்பட்டது.*

## *2.2 தேய்மானம்*

*சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பயனுள்ள பாவனை காலத்தின் ஒரு நேர் நிரல் அடிப்படையில் நிலையான சொத்துக்கள் ஆகுசெலவைப் பதிவழிக்கும் பொருட்டு தேய்மானமானத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தின் நிமித்தம் பயன்படுத்திய ஆண்டு வீதங்கள் பின்வருமாறு:*

| | |
|---|---|
| *நிரந்தரமான கட்டிடங்கள்* | *5%* |
| *அரை நிரந்தரமான கட்டிடங்கள்* | *10%* |
| *தளபாடங்களும் பொருத்துக்களும்* | *10%* |
| *அலுவலக உபகரணங்கள்* | *12.5%* |
| *பொறித்தொகுதிகள், இயந்திராதிகள், வாகனங்கள், உபகரணங்கள்* | *25%* |
| *தொடர்பாடல் சாதனங்கள்* | *25%* |
| *துவிச்சக்கரவண்டிகள், சிறிய வேலைப்பட்டறை உபகரணங்கள்* | *50%* |
| *கன்வேட்டெய்னர்கள்* | *10%* |

*ஆகுசெலவு பதிவழிக்கப்பட்ட காணிகளுக்கு தேய்மான ஏற்பாடுகள் ஏதும் மேற்கொள்ளப்படுவதில்லை.*

*குறித்த ஆண்டு காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் தேய்மானம் பின்வரும் அடிப்படையில் கணிப்பிடப்படும்.*

*(1) மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டுக் காணப்படுமாயின், முழு ஆண்டுத் தேய்மானம்*

*(2) ஏப்ரல் 01 ஆம் திகதிக்கும் யூன் 30 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் கொள்வனவு செய்யப்பட்டுக் காணப்படுமாயின், ¾ ஆண்டு தேய்மானம்*

*(3) யூலை 01 ஆம் திகதிக்கும் செப்டம்பர் 30 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டுக் காணப்படுமாயின், ½ ஆண்டு தேய்மானம்*

*(4) ஒற்றோபர் 01 ஆம் திகதிக்கும் திசம்பர் 31 ஆம் திகதிக்கும் இடைப் பட்ட காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டு காணப்படுமாயின், 1/4 ஆண்டு தேய்மானம்*

*அகற்றல் ஆண்டில் தேய்மானம் கணிப்பிடப்படுவதில்லை.*

### *2.3 பொருட்பதிவேடுகள்*

*பொதுவான இருப்புக்கள் FIFO அடிப்படையில் மதிப்பிடப்பட்ட தேறிய மாறத்தகுந்த பெறுமானத்திலும் குறைந்த ஆகுசெலவிலும் எடுத்துரைக்கப் படுகின்றது. காலம் கடந்த விரைவாக நகராத இருப்புகளுக்கு தேவையான போது ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*வீணாதல் தொடர்பில் ஒரு விகிதாசாரத்தை உள்ளடக்கி அகழ்ந்தெடுக்கும் ஆகுசெலவை மாத்திரம் கருத்திற்கொண்டு கடல் மணல் இருப்பு பெறுமானம் கணக்கில் கொள்ளப்படுகின்றது.*

### *2.4 நிகழும் பணி*

*நிகழும் பணியானது ஐந்தொகைக் கணக்குத் திகதியில் நிகழ்கின்ற நீண்ட காலக் கருத்திட்டங்களுடன் சம்பந்தப்படுகின்றது. இது கருத்திட்டங்களுக்கு சேரக்கூடிய நேரடி செலவினத்தையும் மற்றும் நேரடி மேன்தலைகளையும் உள்ளடக்குகின்ற ஆகுசெலவில் பெறுமானம் மதிப்பிடப்படுகின்றது.*

### *2.5 ஆகுசெலவில் நிறைவு செய்யப்பட்ட பணிகள்*

*இந்தப் பணிகள் ஐந்தொகைக் கணக்குத் திகதியில் உண்மையாக நிறைவு செய்யப்பட்ட பணியின் ஆகுசெலவைப் பிரதிபலிக்கின்றன. முத்துராஜவெல மணல் குவிக்கும் கருத்திட்டத்தின் கீழ் நிறைவு செய்த பணியின் ஆகுசெலவு,*

*இந்தக் கருத்திட்டத்தின் பெறுமானம் அதிகமாக இருப்பதால் தனியான ஒரு விடயமாகக் காட்டப்பட்டுள்ளது.*

### *2.6 வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்*

*பற்றுக்கள், மாறுவதற்காக மதிப்பிடப்படுகின்ற தொகைகளில் எடுத்துரைக்கப் பட்டுள்ளன. ஒரு வருடத்திற்கு மேலதிகமாக இருந்து வருகின்ற தொகைகளை பிரதிபலிக்கின்ற தீர்ப்பனவு செய்யப்படாத மற்றும் சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கு கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

### *2.7 காசும் காசு ஒப்புரவுகளும்*

*காசும் காசு ஒப்புரவுகளும் கையிருப்பிலுள்ள காசு, கேள்வி வைப்புகள், குறுங்கால அதிகம் திரவத்தன்மையுடைய முதலீடுகள், தெரிந்த அறிந்த காசுத் தொகைகளுக்கு உடனே மாற்றக்கூடியவை எனவும் மற்றும் பெறுமானத்தில் கணிசமான மாற்றல் ஆபத்துக்கு அமைவானவை எனவும் வரைவிலக்கணப் படுத்தப்படுகின்றன. காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்தின் நிமித்தம், தேறிய வங்கி மேலதிகப் பற்றுக்கள், ரெபோ மற்றும் திறைசேரி உண்டியல்கள் முதலியன அடங்கலாக கையிருப்பிலுள்ள காசையும் மற்றும் வங்கிகளிலுள்ள வைப்புகளையும் காசும் காசு ஒப்புரவுகளும் உள்ளடக்கிக் காணப்படும்.*

### *2.8 அரசாங்க மானியங்கள்*

*நீண்டகால சொத்துக்கள் வடிவில் கிடைக்கும் அரசாங்க மானியம் ஒரு பிற்போடப்பட்ட வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது. இது வருடாந்தம் சொத்தின் பயனுள்ள காலத்தின் மீதான ஒரு வருமானமாக இனங்காணப் படுகின்றது. இயக்கச்செயற்பாடுகள் தொடர்பான வளங்களின் மாற்றல் வடிவத்தில் குறித்த ஆண்டு காலப் பகுதியில் கிடைத்த அரசாங்க மானியங்கள் (நீண்ட கால சொத்துக்கள் நீங்கலாக) முழுமையான வருமானக் கூற்றில் முழுமையாக இனங்காணப்பட்டுள்ளன. அரசாங்க மானியங்களுடன் பின்னிப் பிணைந்த நிபந்தனைகள் மற்றும் ஏனைய இடைநேர் அம்சங்கள் என்பன கருத்திற்கொள்ளப்பட்டு வெளிப்படுத்தப்படும்.*

## *3. பொறுப்புக்களும் நிதியேற்பாடுகளும்*

### *3.1 திட்டவட்டமான நன்மைகள் திட்டம்*

*தகுதியுடைய அனைத்து ஊழியர்களுக்கும் 1983 இன் 12 ஆம் இலக்கப் பணிக் கொடைச் சட்டத்திற்கும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கும் இணங்க செலுத்த வேண்டிய சேவை முடிவுறுத்தல் நன்மைகளுக்காக கணக்குகளில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தில் தொடராக 05 வருட கால சேவையைப் பூர்த்தி செய்வதன் பேரில் ஊழியர்கள் இதற்குத் தகுதி பெறுவார்கள். அத்தகைய ஊழியர்கள் முதலாவது ஆண்டு சேவையில் இருந்தே இத்தகைய நன்மைகளுக்கு உரித்துடையவர்களாக இருப்பார்கள். பொறுப்புக்காக வெளிவாரியாக நிதியிடப்படுவதில்லை. பணிக்கொடை தொடர்பான நிதியேற்பாடு உண்மையான அடிப்படையில் மதிப்பிடப்படும்.*

***முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)***

### *3.1.1 திட்டவட்டமான பங்களிப்புத் திட்டம்*

#### *(a) ஊழியர் சேமலாப நிதியம்*

*ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கூட்டுத்தாபனம் 12% வீதத்தைப் பங்களிப்பு செய்கின்ற அதே வேளையில் ஊழியர்கள் 10% வீதத்தைப் பங்களிப்புச் செய்கின்றனர். நடைமுறை ஆண்டு தொடர்பில் ஒரு செலவாக இனங்காணப்பட்டுள்ள மொத்தத் தொகை 58.1 மில்லியன் ரூபாவாகும்.*

#### *(b) ஊழியர் நம்பிக்கை நிதியம்*

*இந்தக் கூட்டுத்தாபனம் ஊழியர்களின் சார்பாக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% வீத பங்களிப்பைச் செய்கின்றது. நடைமுறை ஆண்டு தொடர்பில் ஒரு செலவாக இனங்காணப்பட்டுள்ள மொத்தத் தொகை 14.5 மில்லியன் ரூபாவாகும்.*

### *3.2 கணக்காய்வுக் கட்டணங்கள்*

*2014 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு சார்ந்த கட்டணங்கள் 2013 ஆம் ஆண்டிற்கான அத்தகைய கட்டணங்களின் அடிப்படையில் காணப்பட்டன.*

### *3.3 (i) வருமான வரி*

*2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அந்தச் சட்டத்திற்கான திருத்தங்களுக்கும் இணங்க வரி விதிப்பு நோக்கங்கள் நிமித்தம் சீராக்கப்பட்டவாறு குறித்த ஆண்டிற்கான இலாப அடிப்படையில் வருமான வரிக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.*

***3.3 (ii) பிற்போடப்பட்ட வரி***

*பொறுப்பு முறையியலின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரிக்கு ஏற்பாடு செய்யப்படும். பிற்போடப்பட்ட வரிக் கணக்கு பின்வரும் விடயங்களைப் பிரதிபலிக்கும்.*

*i) தேய்மானக் கொடுப்பனவுகள் கோரப்படுகின்ற சொத்துக்களின் வரி நோக்கங்களுக்காக பதிவழிக்கப்பட்ட பெறுமானத்திற்கும் அத்தகைய சொத்துக்களின் தேறிய புத்தகப் பெறுமானத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசத்திற்கு ஏற்புடைய வருமான வரி*

*ii) ஓய்வுதிய நன்மைகளுக்கான நிதியேற்பாட்டிலிருந்து எழுகின்ற கால வித்தியாசத்திற்கு ஏற்புடைய வருமான வரி*

***3.4 மேன்தலைகள்***

*எமது கூட்டுத்தாபனம் 2014 ஆம் ஆண்டிற்கு கணிசமான திறைசேரிக் கருத் திட்டங்களை நிறைவேற்றியது. ஆகையால், மேன்தலைகள் வாடிக்கையாளர் கருத்திட்டங்களுக்கும், திறைசேரி மானியக் கருத்திட்டங்களுக்கும் அறவீடு செய்யப்பட்டன.*

***4. வருமானக் கூற்று***

***4.1 புறழ்வு***

*புறழ்வானது திறைசேரி மானியக் கருத்திட்டங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட சேவைகள் அடங்கலாக குறித்த ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சான்றுபடுத்திய பணியை/செலவுப்பட்டியல் பெறுமானத்தைப் பிரதிபலிக்கும்.*

*புறழ்வில் பின்வருவன உள்ளடங்கியிருக்கும்:*

*(1) அபிவிருத்தி செய்யப்பட்ட சொந்தக் காணிகளின் விற்பனை*

*(2) வாடிக்கையாளர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட காணிகள் மீட்டல் பணி*

*(3) அகழந்து துப்புரவாக்கல்*

*(4) நிர்மாணம்*

*(5) காணிகளின் குத்தகை*

*(6) கடல் மணல் விற்பனை*

*(7) காணிகள் சுத்தம்செய்தல்*

*(8) உசாதுணை*

*(9) நானாவிதக் கருத்திட்டங்கள்*

*(10) திறைசேரி மானியக் கருத்திட்டங்கள்*

*வருமானம் பொதுவாக ஒரு அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படும்.*

### *4.2 காணி விற்பனையிலுள்ள வருமானத்தைக் கருத்திற்கொள்ளல்*

*ஒரு கடனாக கொள்வனவாளர் செலுத்த வேண்டிய ஏதாவது ஒரு நிலுவையை கருத்திற்கொண்டு, ஐந்தொகைக் கணக்குத் திகதியின் பின்னர் நீண்டகாலம் அத்தகைய நிலுவை செலுத்தப்படாமலிருக்கின்ற வரையிலும் மற்றும் அதன் தீர்ப்பனவுக்கு சில சந்தேகமில்லாத வரையிலும், காணிகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்ற போது காணியின் முழுமையான விற்பனைப் பெறுமானம் வருமானத்தில் கொள்ளப்படும்.*

*கேள்வி விலைமனுவின் அல்லது ஏனைய விதத்தில் காணிகள் விற்பனை செய்யப்படுகின்ற போது, மாற்றல் உறுதி நிறைவேற்றப்பட்டுள்ள அல்லது சகல கொடுப்பனவுகளும் கிடைக்கப்பெற்றுள்ள அத்துடன் மாற்றல் உறுதி மூலம் விற்பனையை நிறைவேற்ற சாத்தியம் இல்லாத போது, விற்பனைப் பெறுமானம் பொதுவாக வருமானத்தில் கொள்ளப்படும்.*

## 4.3 நிர்மாண ஒப்பந்தங்கள்

***<u>வருமானத்தை இனங்காணல்</u>***

